www.padippakam.com


# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 476 | 1996 பெப்ரவரி 14 | ரூபா 6.00


உள்ளே


- அரசியல் தீர்வு என்ற பேரில் பிற்போக்கு அணிதிரள்வு ..... 2
- செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்! புனருத்தாரண முகாம் : மூளைச் சலவைக் கூடம் ..... 3
- ஜோதிபாசுவின் அறிக்கை: இந்திய ஆளும் வர்க்கத்தின் நெருக்கடியைக் காட்டுகின்றது ..... 4
- பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கம் பலம் வாய்ந்த அட்டன் மகாநாடு ..... 5
- நவசமசமாஜக் கட்சி- விடுதலைப் புலிகள் அரவணைப்பு நாடகம் எதற்கு?.6
- சோசலிச சமத்துவக் கட்சியின் ஸ்தாபிதம் ஒரு மாபெரும் வரலாற்று நடவடிக்கை – விஜே டயஸ் 7-10 பக்கம்


# சோசலிச சமத்துவக் கட்சி உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டி

**தொழிலாளர் பாதை ஆசிரியர் குழு அறிக்கை**

சோசலிச சமத்துவக் கட்சி(சோ.ச.க.) மார்ச் 21ம் திகதி நடைபெற உள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் பண்டாரவளை, அம்பகமுவை, பலப்பிட்டிய முதலான மூன்று பிராதேசிய சபைகளுக்கு வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. சோசலிச சமத்துவக் கட்சி உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவது, சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணரும் வேலைத்திட்டத்தின் மூலம் தொழிலாளர், விவசாயிகள், இளைஞர்களை அணிதிரட்டத் தொடுத்துள்ள அரசியல் போராட்டத்தின் ஒரு பாகமாகவாகும்..

1996நவம்பர் மாதத்தில் சோசலிச சமத்துவக் கட்சியாகப் பரிணாமம் செய்யப்பட்டது கடந்த 28ஆண்டுகளுக்கு மேலாக மார்க்சிச, ட்ரொட்ஸ்கிச அடிப்படைக் கொள்கைகளின் அடிப்படையில் காரியாளர்களை அணிதிரட்டிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமாகும். சோசலிச சமத்துவக் கட்சி அனைத்துலகக் குழுவினால் அரசியல் தலைமை வழங்கப்படும் நான்காம் அகிலத்தின் இலங்கைப் பகுதியாகும். யூ.என்.பி.-பொதுஜன முன்னணி அரசாங்கங்களின் பிற்போக்கு சட்டங்களின் கீழ் எமது கட்சி தேர்தல் கருமங்களுக்கான அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படுவது மறுக்கப்பட்டுள்ள ஒரு நிலைமையின் கீழ் இம்முறையும் நாம் ஒரு "சுயேட்சைக்

(15ம் பக்கம் பார்க்க)

## சோசலிச சமத்துவக் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள்

சோசலி சமதுவக் கட்சி இம்முறை உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் பண்டாரவளை, அம்பகமுவை, பலப்பிட்டிய என்ற மூன்று பிராதேசிய சபைகளுக்கு போட்டியிடுகின்றது. பண்டாரவளைக்கு 13வேட்பாளர்களும் அம்பகமுவைக்கு 29 வேட்பாளர்களும் பலப்பிட்டிக்கு 23 பேரும் போட்டியிடுகின்றனர். எமது கட்சியை தேர்தல் கருமங்களுக்கான ஒரு கட்சியாக பதிவு செய்வதை யூ.என்.பி.-பொதுஜன முன்னணி அரசாங்கங்கள் நிராகரித்துள்ளன.இதனால் நாம் "சுயேட்சை குழுக்கள்" ஆகவே போட்டயிடுகின்றோம். அம்பகமுவை, பலப்பிட்டியவில் எமது வேட்பாளர்கள் "சுயேட்சை குழு இலக்கம்.1." ஆகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பண்டாரவளையில் இந்த இலக்கம் இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. எமது மூன்று குழுக்களதும் தேர்தல் சின்னம் கத்தரிக்கோல். சோசலிச வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள்.



பாணி விஜேசிரிவர்தன

பண்டாரவளையில் எமது குழுவின் தலைவர் பாணி விஜேசிரிவர்தன சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராவார். ஆசிரியாரான அவர் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பதுளை மாவட்ட செயலாளர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் இன்று சோசலிச சமத்துவக் கட்சியினதும் வேலைத்திட்டத்துக்கான போராட்டத்தின் ஒரு பாகமாக இலவசக் கல்வி உரிமையை காக்க முன்னின்று வந்ததன் காரணமாக யூ.என்.பி.-பொதுஜன முன்னணி அரசாங்கங்கள் இரண்டினதும் வேட்டைக்கு இலக்கான ஒரு சோசலிசப் போராளியாவார். 1994 பொதுத் தேர்தலில் அவர் பதுளை மாவட்டத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் போட்டியிட்டார்.



எம். தேவராஜா

அம்பகமுவை பிராதே[illegible] சபைக்கு எமது குழுவுக்கு தலைவ[illegible] போட்டியிடும் மயில்வாகனம் தேவராஜா சோசலிசக் சமத்து[illegible] கட்சியின் மத்திய குழு உறுப்பினர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின[illegible]ும் இப்போது சோசலிச சமத்துவக் கட்சியினதும் வேலைத்திட்டத்[illegible] பேரில் 20ஆண்டுகளுக்கு மேலாகப் போராடிய போராட்ட வரலா[illegible]றைக் கொண்டவர். சோ.ச.க.வின் பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் செயலாளரான அவர் சோ.ச.க. பத்திரிகையான தொழிலாளர் பாதையின் ஆசிரியர் குழு உறுப்பினருமாவார். தோட்டத் தொழிலாளர் இளைஞர்களை அரசின் சிறையில் இருந்து விடுதலை செய்விக்கும் பு.க.க., சோ.ச.க. போராட்டங்களை ஒழுங்கமைப்பதில் அவர் முன்னணியில் நின்றவா.



ரத்னசிரி மலலகம

பலப்பிட்டிய பிராதேசிய சபையின் எமது குழுவின் தலைவர் ரத்னசிரி மலலகம. அவர் பு.க.க.வின் ஆரம்பகால உறுப்பினர். அவர் பு.க.க.ஆரம்ப உறுப்பினராக நீண்ட காலமாக அம்பலாங்கொட, பலப்பிட்டிய பிரதேசங்களில் மட்டுமன்றி நாட்டின் பல்வேறுபட்ட பிராந்தியங்களிலும் தொழிலாளர்கள், இளைஞர்கள் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட நடாத்திய போராட்டத்தினால் அரசியல் ரீதியில் பிரபலமானவர். 1980 வேலை நிறுத்தத்தில் அவர் வேலைநீக்கம் செய்யப்பட்டார். அதன்பின்னர் அவர் கூட்டுறவு சேவையில் சேர்ந்து வேலைசெய்கையில் கூட்டுறவு நிர்வாகிகளதும் நவசமசமாஜக் கட்சியினரதும் கூட்டினது வேட்டைக்கு இலக்கான போதிலும் அதற்கு மத்தியிலும் கூட்டுறவு ஊழியர்களின் உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்தார். ரத்னசிரி கூட்டுறவு, கூட்டுத்தாபன, வர்த்தக ஊழியர் சங்கத்தின் அம்பலாங்கொடை கிளையின் செயற்குழு உறுப்பினராவார். (முழுப்பட்டியல் பக்கம் - 14)

## 'எடிபல' இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்கள் மீண்டும் அகதிகள்

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இராணுவத்தினால் பெப்ரவரி 4ம் திகதி வவுனியாவில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட எடிபல என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கை மூலம் பல்லாயிரக் கணக்கான ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் மீண்டும் ஒரு தடவை தமது வசிப்பிடங்களை இழந்து மிகவும் மோசமான காட்டுமிராண்டி நிலைமைகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இராணுவத்தினர் முன்னர் கிளிநொச்சியை கைப்பற்ற நடாத்திய ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் போது அகதிகளாக்கப்பட்டவர்கள். இப்போது மீண்டும் சகலதையும் இழந்த நிலையில் அகதிகளாக ஓட்டமெடுக்க நேரிட்டுள்ளது. அவர்கள் பட்டினிக்கும் நோய் நொடிகளுக்கும் இலங்கை விமானப்படையினரின் விமானத் தாக்குதல்களுக்கும் முகம் கொடுத்து மரணத்தைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

விமானத் தாக்குதல்கள் மூலமும் பீரங்கித் தாக்குதல்கள் மூலமும் இடம்பெறும் இந்த இராணுவ நடவடிக்கைக்காக சுமார் 10000 படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் இடம்பெற உள்ள ஒரு நிலைமையில் இனவாதத்தினைத் தூண்டுவதன் மூலம் பிற்போக்கின் நிர்வாணக் கோலத்தை பலப்படுத்தும் இலக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த இராணுவ நடவடிக்கையினால் வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையிலான வீதியையும் அதைச் சூழவுள்ள பகுதிகளையும் அரசாங்கம் தனது பிடிக்குள் கொணரத் திட்டமிட்டுள்ளது. அரசாங்கத்தின் படைகளின் இந்த இராணுவ நடவடிக்கை இதன் ஆரம்ப நாட்களில் வவுனியா பிராந்தியத்தில் வாழும் தமிழ் மக்கள் மீது நாம் மேலே குறிப்பிட்ட பாணியிலான பேரழிவையே திணித்துள்ளது.

இதற்கிடையே கிழக்கில் மட்டக்களப்பு, வாழைச்சேனை பிராந்தியங்களில் இராணுவமும் பொலிசும் நடாத்திய தேடுதல் நடவடிக்கையில் நூற்றுக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் முகமூடி உளவாழிகளின் எதிரில் நிறுத்தப்பட்டு கைதுசெய்யப்பட்டதாகத் தெரிகின்றது.இவர்கள் 'மேலும் விசாரணை செய்யப்படுவார்கள்' எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே மட்டக்களப்பு பகுதிகளில் வீடுவளவுகளில உள்ள மரங்கள் எல்லாவற்றையும் வெட்டித்தறிக்குமாறு இராணுவம் வீட்டுவாசிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. பெருந்தெருக்களில் பயணம் செய்யும் பொதுமக்களும் இந்த வகையிலான இராணுவ காவல் அரண்களை நிர்மாணிக்கும் வேலைகளில் பலாத்காரமாக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள்.

மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிச் செல்லும் எதிர்பார்ப்புக்களுடன் திருமலையில் கப்பல் பயணத்துக்கு காத்துக்கிடப்போரின் துயரங்கள் தினமும் அதிகரித்து வருகின்றது. அவர்களுக்கு அங்கு எந்த விதமான அடிப்படை வசதிகளும் கிடையாது. இந்த நிலைமையை மேலும் சகித்துக்கொள்ள முடியாத நிலையில் இம்மக்களும் சிறியவர்களும் முதியவர்களும் நூற்றுக்கணக்கில் வடக்கு-கிழக்கு ஆளுனரைச் சந்தித்து தம்மை யாழ்ப்பாணம் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டனர். இந்த மக்கள்தமது அவலநிலையை ஆளுனரிடம் க்ண்ணீர்விட்டழுது கூறியதாகத் தெரிகின்றது.

'திருமலையில் பல கிழமைக்ளாக இருந்து வருகின்றோம். நாம் தங்கியிருக்க எந்தவிதமான வசதியும் கிடையாது. எமக்கு வேறு எந்தவிதமான வசதிகளும் இங்கு கிடையாது.எமது குழந்தைகளும் நாமும் உடனடியாக நோய்வாய்ப்பட இடமுண்டு. தயவுசெய்து எம்மை எந்த ஒரு கப்பலில் ஆவது எமது கிராமங்களுக்கு அனுப்பிவையுங்கள்".

3ம் பக்கம் பார்க்க

**இனவாத யுத்தம் வேண்டாம்!**
**சிங்கள– தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

படிப்பகம்

www.padippakam.com



# அரசியல் தீர்வு என்ற பேரில் பிற்போக்கு அணிதிரள்வு

பொதுஜன முன்னணி அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கம் எனக் கூறும் அரசியல் பொதியை இந்த ஆண்டு அமுல் செய்யப் போவதாக பெரும் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளது. சனவரி 30ம் திகதி பலாங்கொடை கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி "அதிகாரப் பரவலாக்கல் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு நாம் முன்செல்வோம். அது சமாதானத்துக்கான ஒரு பெரும் அத்திவாரமாக விளங்கும் என் விதந்துரைக்கப்பட்டுள்ளது" எனக் கூறியுள்ளார்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் எட்டு பிராந்திய சபைகளுக்கு அதிகாரத்தை பரவலாக்குவது பற்றிய ஒரு பிரேரணையை 1995 ஆகஸ்டில் சமர்ப்பித்திருந்தது. இது அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் சரிந்து யுத்தம் மீண்டும் ஆரம்பமாகிய நான்கு மாதங்களின் பின்னர் இடம்பெற்றது. அத்தோடு இந்தப் பிரேரணை, பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் ஒரு மோசடி கலந்துரையாடலுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு ஒரு ஆண்டு கடந்துவிட்டது. இந்த தீர்வுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது தான் தாமதம் தமிழ் முதலாளித்துவ கட்சிகளும் அரசாங்கத்தில் குந்திக் கொண்டுள்ள சமசமாஜ கம்யூனிஸ்ட்க ட்சித் தலைமைகளும் மட்டுமல்லாது அரசாங்கத்தை ஆட்சிப்பீடம் ஏற்றுவதற்குத் தலைகீழாக நின்ற நவ சமசமாஜக் கட்சியும் புத்திஜீவிகள் எனப்படுவோரும் மற்றும் தீவிரவாதிகளும் இந்த தீர்வுத் திடடத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சமுதாயத்தின் ஏனைய சாராருக்கும் ஜனநாயகம் கிடைக்கப் போவதாக கூறி ஈக்கூட்டங்கள் போல் இதை மொய்த்துக் கொண்டனர்.

இனவாதக் கூச்சல்களுக்குப் பேர்போன குணதாச அமரசேகரவையும் நளின் த சில்வாவையும் கொண்ட பாசிசக் கன்னையும் ஜே.வீ.பி.பாசிச கும்பலும் அரசாங்கம் நாட்டைப் பிரித்து ஈழம் வழங்க ஆயத்தமாகி வருவதாகக் கூச்சலிடடன.

எனினும் இந்தச் சகல பிற்போக்குவாதிகளுக்கும் சந்தர்ப்பவாதிகளுக்கும் எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் (தற்போது சோசலிச சமத்துவக் கட்சி) தனது தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகள் மூலம் பொதுஜன மூன்னணி அரசாங்கத்தின் இந்த புழுகு மூட்டை பற்றி பின்வருமாறு கூறியது:

"பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனப்பிரச்சினைக்கான தீர்வு எனப்படுவது வேறொன்றும் அல்ல. ஏகாதிபத்தியவாதிகளின் உதவியுடன் விடுதலைப் புலிகளை அடக்குவது என்ற பெயரில் வடக்கு, கிழக்கு தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அடக்கும் யுத்தத்தை தீவிரமாக்கி, தெற்கில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கிவிடும் தயாரிப்பின் ஒரு பாகமாகும். இராணுவ-பொலிஸ் படையை பலப்படுத்தவும் பாசிச சக்திகளை வீதிகளில் இறக்கவும் அவசியமான நிபந்தனைகளை சிருஷ்டிக்கவும் பொதுஜன மக்கள் முன்னணி தீவடங்கிலும் உள்ள மக்களையும் சர்வாதிகாரத்துக்கு கீழ்ப்படுத்தும் நிலைமைகளைச் சிருஷ்டித்து வருகின்றது.

"இலாபகரமான உழைப்புச் சுரண்டல் கொள்ளையடிப்புக்காக மூலதனக் களங்களையும் யுத்த முகாம்களையும் தேடி அலையும் ஏகாதிபத்திய சக்திகள் இலங்கையின் ஏஜன்து முதலாளி வர்க்கத்தையும் அதன் பொதுஜன முன்னணியையும் பொம்மலாட்டம் ஆட்டுகின்றன. விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தை, பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தம், தற்போதைய தீர்வுத் திட்டம் அனைத்துக்கும் பின்னணியில் ஏகாதிபத்திய சக்திகளே இருந்து கொண்டுள்ளன. இன்றும் கூட தமது உரிமைகளுக்கு எதிரான தாக்குதல்களால் அதிருப்தி கண்டுபோயுள்ள தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை அடக்கி, பன்னாட்டு கம்பனிகளது கொடிய சுரண்டலுக்கான பிராந்தியத்தை தயார்செய்வதே ஏகாதிபத்தியவாதிகளதும் இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் நோக்கமாகும்."

கடந்த இரு ஆண்டுகளாக பொதுஜன முன்னணி அரசாங்கமானது வடக்கு கிழக்கு மாகாண மக்களது இதயத்தை சிதறடிக்கும் விதத்தில் நடாத்திவரும் இனவாத யுத்தமும், தெற்கில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இராணுவ-பொலிஸ்-குண்டர்கள் அன்றாடம் அபிவிருத்தி செய்துவரும் அடக்குமுறைகளும் பு.க.க.வும் தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளும் விடுத்த முன்னெச்சரிக்கையை நன்கு நிரூபித்துள்ளன.

அரசாங்கமும் முதலாளித்துவ வர்க்கமும் நாடெங்கும் இராணுவ, பொலிஸ் அடக்குமுறை ஆட்சியை அபிவிருத்தி செய்ததும், செய்து வருவதும் தமிழ் முதலாளித்துவ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத பிற்போக்கு இயக்கத்தைச் சாட்டாகக் கொண்டே. "விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை அடக்கவேண்டுமானால் பொதுமக்கள் அரசாங்கத்தின் இராணுவ பொலிஸ் அடக்குமுறை ஆட்சிக்கு கீழ்ப்பட்டு இருந்தாக வேண்டும்" என்று அரசாங்கமும் முதலாளித்துவ வர்க்கமும் மிரட்டல் தொனியில் கூறிக் கொண்டுள்ளன. சகல முதலாளித்துவ தொடர்புச் சாதனங்களும் இதற்குப் பக்க பலமாக நின்று வருகின்றன.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் யுத்தம் ஆரம்பமாகி இருபது மாதங்கள் கழிந்துவிட்டது..அத்தோடு அதற்கு முன்னைய அதன் "சமாதானத்துக்கான முன்னேற்ற வழி "என்ற போர்வையும் கிழிந்து கந்தலாகியுள்ளது. யுத்தம் 5000 கோடி ரூபாக்களை யுத்தப் பளுவாகத் திணித்துள்ளது. யுத்த களங்களிலும் அகதி முகாம்களிலும் கிராமப்புறங்களிலும் வேலைத் தலங்களிலும் ஆயிரக்கணக்கில் மக்கள் பலியெடுக்கப்பட்டுள்ளனர். யுத்தப் பீதியைக் கிளப்பி தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகள் நசுக்கப்படுகின்றது. விரல் விட்டு எண்ணக்கூடிய முதலாளிகளும், பன்னாட்டுக் கம்பனிகளும் போதைவஸ்து வர்த்தகர்களும் முதலாளித்துவ அரசியல்வாதிகளும் சுகபோகங்களை குவித்துக் கொண்டுள்ளனர். இவை எல்லாம் இந்த யுத்தம் யாருடையது? எதற்காக இந்த யுத்தம் ? என்ற கேள்வியை மக்களின் முன்னிலையில் எழுப்பியுள்ளது. அதை அம்பலப்படுத்தும் நிலைமைகளை உருவாக்கி உள்ளது.

## செல்வாக்கு வீழ்ச்சி

யுத்தம் நீண்டதைத் தொடர்ந்து அரசாங்கத்தினதும் முதலாளி வர்க்கத்தினதும் நெருக்கடி உக்கிரம் கண்டுள்ளது. தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் இளைஞர்கள் போராட்டத்தில் குதிப்பது வளர்ச்சி கண்டு வருகின்றது. வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகள் செல்வாக்கு இழந்து வருகின்றனர். அது மட்டுமல்ல அரசாங்கமும் வெறுப்புக்கு இலக்காகியுள்ளது. "அரசியல் ஸ்திரப்பாடின்மை" எனப்படுவதால் வெளிநாட்டு முதலீட்டாளர் கிலேசம் அடைந்துள்ளனர். இந்த நிலையிலேயே அரசாங்கம் அரசியல் தீர்வு என்பபடுவதை நடைமுறைக்கிடப் போவதாக மீண்டும் குரல் கொடுத்து வருகின்றது.

ஈ.பீ.ஆர்.எல்.எப்., புளொட், ஈபீடிபி போன்ற தமிழ் முதலாளித்துவக் குழுக்களும் முஸ்லீம் காங்கிரஸ், மற்றும் தமிழ், முஸ்லீம் அமைப்புக்களும் கடந்த சில நாட்களாக ஜனாதிபதியையும் யூ.என்.பி.தலைமைகளையும் அரவணைத்தது துக் கொண்டு தமது "திருத்தங்கள் இந்த தீர்வு திட்டத்தில் சேர்க்கப்படுமாயின் இனப் பிரச்சினைக்கான தீர்வில் இணைந்து கொள்வோம்" எனக் கூறிக் கொண்டுள்ளன. இந்த தமிழ், முஸ்லீம் முதலாளித்துவ அமைப்புக்கள் இனவாத யுத்தத்துக்கு கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுக்கும் அமைப்புக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தீர்வுத் திட்டத்தை தள்ளிச் செல்ல யூ.என்.பி. உதவாது போனால் "மக்களிடம் சென்று அரசியலமைப்பு ரீதியில் புரட்சி செய்வேன்" என ஜனாதிபதி பலாங்கொடை கூட்டத்தில் வாயடித்துள்ளார்.

இதே சமயம் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு மீண்டும் கதவைத் திறக்கும் யூ.என்.பி. கடந்த சில தினங்களாக தீர்வுத் திட்டத்தை முன்னெடுக்க "ஆர்வம் காட்டுவதாக" பிரச்சாரம் நடக்கின்றது. டொனமூர் அரசியலமைப்பின் கீழ் இருந்தது போன்ற அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்துவது அவசியம் என யூ.என்.பி. திருத்தங்கள் தெரிவித்துள்ளன. சகல கட்சிகளும் பங்குகொள்ளும் அத்தகைய ஒன்று சிறந்ததெனக் கூறி அதை அழுங்குப் பிடியாக பிடித்துக் கொண்ட அரசியல் சட்ட அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அதற்கு முதலாளித்துவ தொடர்பு சாதனங்கள் மூலம் பெரும் பிரச்சாரத்தையும் வழங்கினார்.

உண்மையில் இந்த உறவுகளின் மூலம் அத்தகைய தீர்வுத் திட்டத்தினை சாட்டாகக் கொண்டு அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் பேரில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக எதிர்ப்புரட்சி தயாரிப்பை முன்னெடுக்க முதலாளித்துவ வர்க்கத்தின் பகுதியினரிடைய புதிய மட்டத்திலான அணிதிரட்டல் இடம்பெறுகின்றது . அதற்கான ஒரு முயற்சியே இது. ஏனைய தமிழ் முதலாளித்துவக் குழுக்களை மட்டுமல்ல விடுதலைப் புலிகளையும் கூட அதற்குள் இழுத்துக் கொள்ளும் அவசியம் பொதுஜன முன்னணிக்கும் யூ.என்.பி.க்கும் இருந்து கொண்டுள்ளது. ஏகாதிபத்தியவாதிகள் அத்தகைய நடவடிக்கைக்கு இன்று முட்டுக்கொடுத்து வருகின்றனர்.

"அரசியல் தீர்வுத் திடடத்தின்" மூலம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் உறுதிப்பட்டுவிடுமா? இந்தத் தீர்வுத்திட்டம் இன்றைய யுத்தத்துக்கு ஜனநாயக சால்வை போர்த்துவது மட்டும் அல்ல. பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தத்தை அதைத் தொடர்ந்து வந்த டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தம் தாண்டியது. ஜயவர்தனாவின் மாகாண சபைகள் அதற்கும் அப்பால் சென்றது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இன்றைய பிராந்திய சபைகள் இவை அனைத்துக்கும் மேலான ஜனநாயகத்தைக் கொண்டு வருவதாகக் காட்டிக் கொள்ளும் பந்தம் பிடிகளும் உள்ளன. பழைய புழுகுமூட்டைகள் வெளிச்சத்துக்கு வந்த தருணத்தில் புதிய மோசடிகளைக் கட்டவிழ்த்து விடுவது அப்படி ஒன்றும் புதுமையானது அல்ல.

அரசியல் தீரவுப் பொதியைச் சூழ பொதுஜன முன்னணி அரசாங்கமும் யூ.என்.பியும் மற்றும் இனவாதிகளும் நடாத்திவரும் பேச்சுக்கள் அனைத்தும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை இனவாதத்தின் கீழ் நசுக்குவது எப்படி என்பதையே மையமாகக் கொண்டுள்ளன. "அதிகாரப் பகிர்வு இடம்பெற்றாலும் அவற்றைப் பிடுங்கிக் கொள்ள மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு" என்று அரசாங்கம் கூறிக் கொள்கின்றது."நாட்டின் ஒருமைப்பாடு என்ற வார்த்தையையும் செயற்பாட்டையும் கொண்டு அதிகாரப் பகிர்வைச் செய்வோம்" என யூ.என்.பி.யும் மதவாதிகளின் அமைப்புக்களும் அறிக்கை விடுக்கின்றன. காவியுடை மதவாதிகளும் பாசிசக் கும்பல்களும் இந்த ஒற்றையாட்சி ஒருமைப்பாட்டு அரசை அப்படியே மாற்றமின்றி வைத்திருப்போம் எனக் கூச்சலிடுகின்றன. சுரண்டல் நடவடிக்கையில் தற்சமயம் முழுமையாக ஈடுபட முடியாதுள்ள தமிழ் முதலாளிகள் அதில் முற்றாக கலந்துகொள்ளும் பேராசை கொண்டு இருப்பதால் அவர்களுடன் கொடுக்கல் வாங்கல் நடாத்த முடியும் என பொதுஜன முன்னணியும் யூ.என்.பி.யும் கருதுகின்றன. தமிழ்-சிங்கள பொதுமக்களை சாதாரண முறையில் ஒருங்கிணைக்கும் நோக்கினை இந்த தீர்வுகளில் அல்லது பேச்சுவார்ததைகளில் கிஞ்சித்தும் காண முடியாதுள்ளது. எனவேதான் இந்தத் தீர்வுத் திட்டம் எனப்படுவதும் தீர்வு திருத்தம் எனப்படுவதும் கிஞ்சித்தும் ஜனநாயக வேலைத்திட்டம் எனப்படுபவை அல்ல.அத்தகைய முன்நோக்குடனான சிறந்த ஜனநாயக வேலைத்திட்டத்தை பிற்போக்கு, தேசிய. மதவாத அடிப்படையில் தலைமூழ்கிபோன இந்த ஆளும் வர்க்கத்திடம் இருந்து பெறலாம் என்ற நம்பிக்கையும் எவருக்கும் அடியோடு இருக்க முடியாது.

இன, மத, சாதி, தேசிய வேறுபாடுகளைக் கொண்ட இந்த ஆளும் வர்ககமானது மக்களைப் பிளவுபடுத்தி அடக்கி ஆளும் நச்சு உபகரணமாக மாறி உள்ளது. இலங்கையிலும் ஏனைய பின்தங்கிய நாடுகளிலும் முதலாளிகள் ஏகாதிபத்தியத்தின் ஆசியுடனும் தூண்டுதலுடனும் இந்த நச்சுத்தனமான கொடிய நடவடிக்கையை அமுல்படுத்துகின்றது. இன்று பல்நாட்டுக் கம்பனிகளின் கொடிய சுரண்டலுக்கு தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை அடக்கி, விற்றுத் தள்ளுவதே இவற்றின் இலக்கு.

சமசமாஜ-கம்யூனிஸ்ட்-நவசமசமாஜ கட்சிகளும் தொழிற்சங்கங்களும் சீரழிந்துபோன தீவிரவாதிகளும் இந்த அரசியல் தீர்வுக்கு ஆதரவு வழங்குவது ஏன்? இதன் மூலம் ஜனநாயகம் கிடைக்கப்போவதனால் அல்ல. அது அவர்கள் சிருஷ்டிககப் பார்க்கும் ஒரு பயங்கரப் பிரமையாகும். உண்மையில் அவர்கள் நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ள எதிர்ப்புரட்சித் தயாரிப்புக்களுக்கே பக்கபலமாக நிற்கின்றனர். எதிர்ப்புரட்சித் தயாரிப்பை வெற்றிக்கு இட்டுச்செல்ல அவர்கள் யூ.என்.பி.யின் உதவியை வென்றெடுக்கப் பாடுபடுகின்றனர்.

## பின்னணி

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆகட்டும் அல்லது யூ.என்.பி.ஆகட்டும் அல்லது ஏனைய எந்த ஒரு பிற்போக்குவாதியாகட்டும் அவர்களின் சட்டங்கள், தீர்வுகள், கூட்டு ஒப்பந்தங்களின் பின்னணியில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கி, தொழிலாளர் வர்க்கம் சுயாதீனமான வேலைத்திட்டத்தில் ஈடுபடுவதை நசுக்கித்தள்ள சந்தர்ப்பவாதிகளும் மாஜி..தீவிரவாதிகளும் முழுமூச்சாக இணைந்து செயல்படுவதை காணலாம். முதலாளித்துவ வேலைத்திட்டத்துக்கு மட்டுமல்ல, விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத வேலைத் திட்டத்துக்கு மட்டுமல்லதேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் ஏனைய ஜனநாயக பிரச்சினைகளையும் சமூகப் பிரச்சினைகளையும் தீர்க்கவும் தொழிலாளர் வர்க்கத்திடம் சுயாதீனமான வேலைத்திட்டம் உண்டு. ஏகாதிபத்திய மூலதனத்துடன் அடியோடு பிணைக்கப்பட்டிருந்து, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டம் பற்றிப் பீதியடைந்த நிலையில் காலதாமதமாகி அரங்குக்கு வந்த பின்தங்கிய நாடுகளின் முதலாளி வர்க்கத்தினால் ஜனநாயகப் புரட்சியின் பிரச்சினையை தீர்க்க முடியாது. இந்தப் பிரச்சினையை தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களுக்கு தலைமைதாங்குவதன் மூலம் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதன் மூலம் மட்டுமே தீர்க்க முடியும். இது பின்தங்கிய நாடுகளில் தேசிய முதலாளித்துவ ஏஜன்டுகளை மேய்க்கும் ஏகாதிபத்தியத்தை தூக்கிவீச உலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஒன்றிணைந்து, அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்துக்காக நடாத்த வேண்டிய போராட்டத்துடன் பிணைந்து கொண்டுள்ளது. இது நிரந்தரப் புரட்சி வேலைத்திட்டமாகும்.

தமிழ்-சிங்கள மொழி பேசும் இரு தேசிய இனங்களதும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் ஒன்றாக வாழக்கூடிய ஒரு அரசாங்க அமைப்பை உருவாக்கும் பொருட்டு அவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியலமைப்புச் சபைக்காகக் போராட வேண்டும். அத்தகைய ஒரு அரசியலமைப்புச் சபையைக் கூட்டுவது அவர்களுக்கு சாத்தியமாகுவது தொழிலாளர் நடவடிக்கைக் குழுக்களை ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவோடு சகல வேலைத் தலங்களிலும் அமைப்பதன் ஊடாக வேயாகும். ஜனநாயக உரிமைகளைக் காக்கவும் இனவாத யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஸ்தாபிதம் செய்யவும் சிங்கள-

(3ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்!
# புனருத்தாரண முகாம் : மூளைச் சலவைக் கூடம்


செல்லையா ராஜ்குமார்.

பொதுஜன முன்னணி அரசாங்கப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ள சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர் செல்லையா இராஜ்குமார் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை எதிர்வரும் பெப்ரவரி 19ம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது. ஜனவரி 15ம் திகதி பிரதிவாதிகள் சார்பில் பதில் தாக்கல் செய்யப்படாததால் மேற்சொன்ன திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இராஜ்குமாரைச் சந்திக்க அவரது சட்டத்தரணிக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக பெப்ரவரி 19ம் திகதி பதில் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. ஆட்கொணர்வு மனுவினை சட்டத்தரணி சீ.வி.விவேகானந்தன் தாக்கல் செய்துள்ளார்.

இதற்கு முன்னதாக சோ.ச.க. பிரதிநிதி புனர்வாழ்வு ஆணையாளர் லக்ஷ்மன் டி.சில்வாவை சந்தித்து இராஜ்குமாரை சந்திக்க கட்சிக்கு அனுமதி வழங்கும்படி விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆணைப்படி இராஜ்குமார் புனர்வாழ்வு முகாமுக்குப் புனர்வாழ்வுக்காக அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.முகாமில் இராஜ்குமாருக்கு "ஜனநாயக போதனை" இடம்பெறும் எனக் கூறிய ஆணையாளர் சோசலிசக் கட்சி பிரதிநிதியின் சந்திப்பினால் அவர் மனக்குழப்பத்துக்கு உள்ளாகிவிடுவார் என்ற காரணத்தினால் அச்சந்திப்புக்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டார். இராஜ்குமார் தொடர்புடைய கட்சி அவரை சந்திக்கச் செல்வதை மறுப்பது எந்த ஜனநாயக வகையைச் சேர்ந்தது எனக் கேட்டதற்கு ஆணையாளர் பதிலளிக்கவில்லை.

புனருத்தாரண முகாம் எனப்படுவது அரசாங்கத்தினதும் முதலாளித்துவத்தினதும் எதிர்ப்பாளர்களின் மூளையைச் சலவை செய்யும் சித்திரவதை கூடம் என ஏற்கனவே சோ.ச.க. சுமத்திய குற்றச்சாட்டு மீண்டும் ஒருதடவை ருசுவாகியுள்ளது. இராஜ்குமார் கைது செய்யப்பட்டுள்ளது இனவாத அடக்குமுறையின் ஒரு அங்கமாகவாகும். அவர் சோசலிஸ்டாக இருப்பதாலாகும். இராஜ்குமாரை அந்நியப்படுத்தி அரசியல் மனஉறுதியைத் தகர்க்கவும் அவரது உயிருக்கு உலை வைக்கவும் முதலாளித்துவ அரச இயந்திரம் கணக்கிட்டுள்ளது.

அனைத்துலக ரீதியிலும் உள்நாட்டிலும் நடாத்திய பிரச்சாரத்தினால் பொதுஜன முன்னணி அரசாங்க ஜனாதிபதி தொடக்கம் அதிகாரிகள் வரையிலான சகலருக்கும் இராஜ்குமாரை விடுதலை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அரலவன்வில பொலிசார் 1996 ஜூன் 14ம் திகதி விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபரெனக் கூறி இராஜ்குமாரைக் கைதுசெய்தாலும் உண்மையில் அவர் சோ.ச.க.அங்கத்தவர் என்ற உண்மையை அதன் பொதுச் செயலாளர் பொலிசாருக்கு அறிவித்தார். இருப்பினும் அவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இது தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்க பொதுஜன முன்னணி நடாத்தும் தாக்குதலின் ஒரு பாகமாகும். சோ.ச.க.அங்கத்தவரைக் கைதுசெய்து சிறையில் தள்ளுவதன் மூலம் அக்கட்சிக்கு மிரட்டல் விடுக்கலாமென பொதுஜன முன்னணி அரசாங்கம் மனப்பால் குடிப்பது போல் தெரிகின்றது. ஏனெனில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் நாசகரமான தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட சோ.ச.க. போராடுவதே இதற்குக் காரணம்.

சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகள் சோ.ச.க.அங்கத்தவரின் கைது பற்றி எதிர்ப்புரட்சி மௌனம் சாதிக்கின்றன. அரசாங்கக் கையாட்களாக இருந்து பொதுஜனங்களின் சகல ஜனநாயக உரிமைகளையும் துவம்சம் செய்துவிட செயற்படும் இக்கட்சிகள் சோசலிச அரசியல் அமைப்புக்களை அடக்கும் நடவடிக்கையை எதுவித்த்திலும் சவால் செய்தது கிடையாது. இதனை இச்சம்பவம் மீண்டும் ஒரு தடவை நிரூபித்துக் கொண்டுள்ளது.

இராஜ்குமாரை விடுதலை செய்யும் சகல வகையிலான பிரச்சார நடவடிக்கைகளிலும் சகல தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இளைஞர்களும் தலையிட்டாக வேண்டும். இராஜ்குமாரை சந்திப்பதற்கு சோ.ச.க. விற்குள்ள உரிமையை நிலைநாட்டுமாறும் அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறும் கோரும் கடிதங்களை அனுப்புவதன் மூலம் சோ.ச.க.நடாத்தும் பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் இத்தலையீட்டை நடாத்துங்கள். உங்களது ஆட்சேபனைக் கடிதங்களை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி கீழே தரப்பட்டுள்ளது.இந்த இதழில் இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கமும் களனிப் பல்கலைக் கழக மாணவர் சங்கமும் அனுபபி வைத்த ஆட்சேபனைக் கடிதங்கள் பிரசுரமாகின்றன.

முகவரி:

1. பொதுச் செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, கொழும்பு.3
2. ஆணையாளர்,
   புனருத்தாரண திணைக்களம்,
   செத்சிரிபாய,
   பத்தரமுல்லை.



இந்திய சோசலிச தொழிலாளர் கழகம் இராஜ்குமாரை விடுதலை செய்யக் கோரி சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தின் எதிரில் நடாத்திய மறியல் போராட்டம்

## இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கம்

சோசலிச சமத்துவக் கட்சி (முன்னர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்) அங்கத்தவரான செல்லையா இராஜ்குமார் 1996 ஜூன் 14ம் திகதி அரலகன்வில பொலிசினால் கைது செய்யப்பட்டு காவலில் வைத்து 1996 டிசம்பர் 7ம் திகதி தொடக்கம் பிந்துனுவவ புனர்வாழ்வு முகாமுக்குள் தள்ளியதையும் எந்தவிதமான குற்றச்சாட்டு விசாரணையும் இல்லாமல் அடைத்து வைத்து மேலும் எட்டு மாதங்களுக்கு புனர்வாழ்வு முகாமில் தள்ளியதையும் அக்கட்சி பிரதிநிதிக்கு அவரைப்பார்க்க அனுமதி மறுக்கப்பட்டதையும் எமது தொழிற்சங்கம் வன்மையாக எதிர்க்கின்றது. இந்த ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்துமாறும் கட்சிப் பிரதிநிதிக்கு அவரைச் சந்திக்க அனுமதி வழங்குமாறும் அவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகின்றோம்.

நிர்வாகக் குழு சார்பில்
எச்.எம்.பி.ஹேரத்,
பொதுச் செயலாளர், மத்திய வங்கி ஊழியர் சங்கம்.

## களனிப் பல்கலைக் கழக மாணவர் சங்கம்

1996 ஜூன் 14ம் திகதி கைது செய்து எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லாமல் பலகாலம் சிறைவைத்துள்ள செல்லையா இராஜ்குமாரை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பக் கட்டளையிட்டு, பண்டாரவளை பிந்துனுவவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளோம். இந்த வகையான ஜனநாயக விரோத முறையில் தனியாட்களை கைது செய்து அடைத்து வைப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். தமிழ் இனத்தவர் என்ற காரணத்தால் அவருக்கு இடம்பெறும் இந்த பலாத்காரச் செயலை உடனடியாக நிறுத்துமாறு நாம் நிர்ப்பந்திக்கின்றோம்.

செயலாளர்,
களனி பல்கலைக் கழக மாணவர் சங்கம்.

## அரசியல் தீர்வு என்ற....

2ம் பக்கத் தொடர்ச்சி

தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை ஐக்கியப்படுத்தும் ஒரு வெகுஜன இயக்கத்தைக் கட்டியெழுப்புவது அவசியம். இது ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களினதும் முதலாளித்துவ வர்க்கத்தினதும் அதன் ஏஜன்டான பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் தாக்குதல்களில் இருந்து தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் சகல உரிமைகளையும் காக்கச் செய்யும் போராட்ட்த்தின் ஒரு பாகமாகும்.

சிங்கள-தமிழ் தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் சமத்துவமாக ஒன்றாக வாழக்கூடிய ஒரு நிலை, சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசாக தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதன் மூலமே உருவாக முடியும். பொதுமக்களுக்கு முதலாளித்துவத்தினுள்ளோ அல்லது முதலாளி வர்க்கத்திடமிருந்தோ கிடைக்கும் பதிலீடுகள் கிடையாது. அனைத்தும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் தலைமையைக் கைப்பற்றி அந்த வேலைத்திட்டத்துக்காகப் போராடுவதா இல்லையா என்பதிலேயே தங்கியுள்ளது. சோசலிச சமத்துவக் கட்சி இந்த வேலைத் திட்டத்தின்ன முன்வைக்கின்றது.

## தமிழ் மக்கள் மீண்டும் அகதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலில் செல்வதற்காக தமது பெயர்களைப் பதிவுசெய்துவிட்டு 8000க்கும் அதிகமான மக்கள் திருகோணமலை நகரைச் சுற்ற உள்ள இடங்களில் உள்ள தனியார் கட்டிடங்களிலும் தங்கியுள்ளனர். அவர்கள் படுத்துறங்க காட்போட் மட்டைகூட இல்லாதுள்ளது.

இவர்களின் கோரிக்கைக்கு ஆளுனரின் பிரதிபலிப்பு என்ன? 300 பாய்கள் வழங்குமாறு உத்தரவிட்டது மட்டுமேயாகும். திருமலையில் இருந்து வடக்கே பிரயாணிகளை ஏற்றிச்செல்ல ஈடுபடுத்தப்பட்டுள்ளது இரண்டு கப்பல்கள் மட்டுமேயாகும். இந்தஇரண்டு கப்பல்களும் கிழமைக்கு இரண்டு தடவை மட்டுமே இந்தப் பிரயாணச் சேவைக்கு ஈடுபடுத்தப்படுகின்றது. இவை இரண்டும் 440 பிரயாணிகளை வடக்கே கொண்டுசெல்கின்றன. எனினும் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்கென தினமும் 300 அகதிகள் திருமலைக்கு அனுப்பப்படுகின்றனர்.

இதற்கிடையே அரசாங்கத்தின் வறுமை நிவாரணத்துக்குப் பொறுப்பான ஆணையாளர் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் சகல அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் பெப்ரவரி 18ம் திகதியில் இருந்து வறுமை நிவாரணம் வழங்குவதை நிறுத்துமாறு கோரியுள்ளார். இது இனவாத யுத்தம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ள நிலைமையில் மக்களை அடியோடு பட்டினிபோட்டுக் கொல்லும் ஒரு திட்டமாக அமைந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com


*இந்தியா:*

# ஜோதிபாசுவின் அறிக்கை: இந்திய ஆளும் வர்க்கத்தின் நெருக்கடியைக் காட்டுகின்றது

இந்திய மார்க்சிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான ஜோதிபாசு கடந்த டிசம்பர் 31ம் திகதி கல்கத்தா ஏஜியன் ஏஜ் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி அக்கட்சியினுள் நிலவிவரும் பெரும் முரண்பாடுகளை அம்பலப்படுத்தி உள்ளது . இக்கம்யூனிஸ்ட் கட்சிக்குள் எழுந்துள்ள முரண்பாடானது முழு இந்திய ஆளும் வர்க்கத்தின் உள்ளும் எழுந்துள்ள நெருக்கடியின் ஒரு அம்சமாகும்.

1996 ஜூலை பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி ஆட்சி தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒரு கூட்டரசாங்கத்தினை அமைக்கையில் ஜோதி பாசு பிரதமர் பதவியை ஏற்கக் கூடாது என மார்க்சிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு எடுத்த முடிவு ஜோதிபாசு இந்தியாவின் முதலாவது ஸ்டாலினிசப் பிரதமராகும் வாய்ப்பினை இல்லாமல் செய்தது. இந்தத் தீர்மானம் ஒரு "மாபெரும் அரசியல் தவறு:" ஒரு "வரலாற்றுத் தவறு" என ஜோதிபாசு கூறியதாக ஏஜியன் ஏஜ் சஞ்சிகை கூறியிருந்தது. ஆறு மாதங்கள் கடந்ததன் பின்னர் ஜோதிபாசு இப்பிரச்சினையை மீண்டும் ஒரு முறை வெளியே இழுப்பது வெறும் முரண்பாட்டைத் தூண்டுவதுடன் மட்டும் நின்றுவிடும் ஒன்றல்ல.

இன்று ஆட்சியில் இருந்து வரும் தேவ கௌடா அரசாங்கம் தொழிலாளர் வர்க்கத்தின் எதிர்ப்புக்களைச் சிதறடித்து, அனைத்துலக முதலாளித்துவ முதலீட்டாளருக்கு ஊக்கமளிக்கவும் இந்தியாவுக்கு அவர்களை தருவிக்கவும் இலாயக்கற்ற ஒரு அரசாங்கமாயுள்ளது. ஆதலால் அதனை நடைமுறைப்படுத்த இலாயக்கான விதத்தில் இந்திய முக்கிய ஸ்டாலினிசக் கட்சி மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு வைத்திருப்பது அவசியம் என ஜோதிபாசு தீர்மானம் செய்து கொண்டுள்ளார்.

ஆளும் வர்க்கத்தினுள் இருந்து வரும் பதட்ட நிலை இந்திய பங்குமுதல் சந்தையில் உச்சக் கட்டத்தை அடைந்து காணப்பட்டது. ஜனவரி 16ம் திகதி -ஒரு நாளில் பம்பாய் பங்குமுதல் சந்தையின் சுட்டெண் 166 ஆல் அதிகரித்து அதில் இருந்து இந்த சுட்டெண் 357 புள்ளிகளால் வீழ்ச்சி கண்டுள்ளது. இதன்மூலம் சுட்டெண் முன்னர் இருந்த நாள் மட்டத்தைக் காட்டிலும் 191 சுட்டெண்களால் வீழ்ச்சி கண்டுள்ளது.

முதலாளித்துவ வர்க்கத்தினுள் வர்த்தக நம்பிக்கையைப் பற்றிய சுட்டெண் 42 மாதங்களுள் காணப்பட்ட ஆகக் குறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. கைத்தொழில்துறையிலான மூதலீட்டு வளர்ச்சியும் 1991ன் பின்னர் காணப்பட்ட ஆகக் குறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது.இந்திய பொருளாதாரத்தின் முன்னுள்ள ஒரு பெரும் சவால் வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் இந்தியாவினுள் முதலீடு செய்துள்ள பணத்தை திடீரென விலக்கிக் கொள்ளும் அச்சுறுத்தலாகும். தற்சமயம் 19 பில்லியன்களாக இருந்துவரும் இந்திய



ஜோதிபாசு

வெளிநாட்டு செலாவணிக் கையிருப்பில் 17 பில்லியன்கள் இந்தப்பாணியிலான பணமாகும். முதலீட்டு நம்பிக்கை தகர்ந்து போனதும இந்த நிதி இந்தியாவினுள் பெருக்கெடுககும் வேகம் 1996ல் மூன்று மடங்காக வீழ்ச்சி கண்டுள்ளது. கௌடா அரசாங்கம் முதலீட்டை விரைவுபடுத்தும் பொருட்டு வட்டி வீதத்தினை குறைக்கவும் மூலதனக் கணக்கு சம்பந்தமாக ரூபா சுதந்திரமாகக் கைமாறுவதற்கான நிலையைத் தோற்றுவிப்பதற்கும் எடுக்கும் நடவடிக்கைகள் இந்த நிதிகளை முழுப்படியே இந்தியாவில் இருந்து வெளியேற்றுவதற்கான நிலைமையைத் தோற்றுவிக்கக் கூடும்.

உயர்ந்த மட்டத்திலான வாழ்க்கைச் செலவும், வேலை அழிப்புக்களும் எதிர்காலத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் எதிர்ப்பை விருத்திசெய்யும்.

முதலாளித்துவ வர்க்கத்தின் இழுபறிகளினால் தினமும் ஊழல்கள் பற்றிய தகவல்கள் வெளிவந்து கொண்டுள்ளதோடு முதலாளித்துவ வர்க்கத்தின் சகல சம்பிரதாயக் கட்சிகளதும் தலைமைகளுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.ஆளும் வர்க்கத்தின் இந்த இக்கட்டான தருணத்தில் வர்க்க ஆட்சியை காத்துக்கொள்ள ஸ்டாலினிசக் கட்சிகள் முழுப்படியே அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள வேண்டும் என ஜோதிபாசு பிரேரிக்கக் காரணம் அதுதான். எனினும் தாம் நேரடியாக அரசாங்கத்துடன் இணைந்து கொண்டால் தொழிலாளர் வர்க்கத்தின் எதிரில் அம்பலமாகுவதால் தொழிலாளர் வர்க்கத்தினுள் தமது செல்வாக்குகள் அடியோடு நாசமாகிப் போகலாம் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர்- சிறப்பாக தொழிற்சங்க அதிகாரத்துவத்தினைச் சேர்ந்த பகுதியினர் சிந்திக்கின்றனர்.ஜோதிபாசுவும் கட்சிச் செயலாளர் சுர்ஜித் சிங் உட்பட்ட குழுவினர் ஒரு புறத்திலும் சீதாராம் சவுரியும் பிரகாஷ் கராட் உட்பட்ட குழு இன்னொரு புறத்திலும் உள்ளன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுள் இன்று இடம்பெற்றுவரும் கயிறிழுப்பின் அர்த்தம் அதுவேயாகும்.

# பேருவின் பணயக் கைதிகள் நாடகம்: குட்டிமுதலாளித்துவ தீவிரவாதத்தின் சீரழிவு

இரண்டு மாதங்களாக இழுபறி நிலையில் இருந்துவரும் பேரு நாட்டின் பணயக் கைதி நாடகம் உலகில் அங்கொன்றும இங்கொன்றுமாக எஞ்சியுள்ள குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கங்களின் பரிதாபகரமான நிலைமையை நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றது.

டூபாக் அமரு புரட்சிகர இயக்கம்( எம்.ஆர்.டீ.ஏ.) சிறைப்பட்டுள்ள தனது அங்கத்தவர்களை விடுவிக்கவும் பெருமளவில் கப்பம் பணம் கறக்கவும், பேரு ஜனாதிபதி அல்பேர்ட் பியூரிமோரி நாட்டின் வறியமக்களுக்கு எதிராக நடாத்தும் பாகுபாடுகளுக்கு எதிர்ப்புக் காட்டவும் ஜப்பானிய தூதுவர் இல்லத்தை கைப்பற்றிக் கொண்டுள்ளது.

இந்த பியூஜிமோரி ஆட்சியானது லத்தீன் அமெரிக்காவில் உள்ள கொடூரமான சர்வாதிகார ஆட்சிகளில் ஒன்றாகும். இது மக்கள் கிளர்ச்சிகளை அடக்கும் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிவாங்கியதோடு அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் பேருவை கடந்த ஆறு ஆண்டுகளாக ஆட்சி செய்து வருகின்றது. ஆயிரக்கணக்கானோர் சித்திரவதைக்கு உள்ளானதோடு எம்.ஆர்.டீ.ஏ.அங்கத்தவருட்பட பல அரசியல் கைதிகள் இராணுவ நீதிமன்றங்களில் நிறுத்தி, விசாரிக்கப்பட்டு சிறிது சிறிதாக சாவைத் தழுவும் தண்டனைக்கு உள்ளாகி வருகின்றனர். பலர் சூடேற்றப்படாத குளிர்நிறைந்த சிறைக்கூடங்களில் போதிய உணவு, மருத்துவ வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அடிப்படைச் சீர்திருத்தத்துக்கான மாதிரியாக சர்வதேச நாணய நிதியத்தினால் புகழப்பட்டு வந்த இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பெருவியன் பொருளாதாரமானது வெளிநாட்டு மூலதனத்திற்கும் சமுதாயத்தின் உச்சியில் இருந்துகொண்டுள்ள விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலருக்கும் பெரும் இலாபங்களை திரட்டிக் கொடுக்கும் அதே வேளையில் பேருவியன் சமூதாயத்துக்கு மிகக் குறைந்த நலன்புரிச் சேவைகளே வழங்கப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் பட்டினிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். ஒரு மதிப்பீட்டின்படி பெருவியன் சனத்தொகையில் 50வீதத்தினர் மிகக் கேவலமான வறுமையில் வாழ்வதோடு உழைப்புப் படையில் 85 வீதத்தினர் வேலையின்மை அல்லது குறைந்த தரத்திலான வேலை வாய்ப்புக்களையே பெற்றுள்ளனர்.

ஆழமடைந்துவரும் அடக்குமுறைகளும் வளர்ச்சி கண்டுவரும் சமூகக் குமுறல்களும் ஒருபுறமிருக்க பேருவின் தலைநகரான லீமாவின் சுற்றாடலில் உள்ள சேரிப்புறங்களில் எம்.ஆர்.டி.ஏ.யின் நடவடிக்கைகளுககு பரந்த ஆதரவு காணப்படவில்லை. குட்டிமுதலாளித்துவ விவசாயி கெரில்லாத் தளங்களின் கசப்பான அனுபவங்களை பேரு தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் அறிந்து கொண்டுள்ளனர். எம்.ஆர்.டி.ஏ.,அதிதீவிர வன்முறை சென்டிடோ லுமினோசே (சைனிங் பாத்) இரண்டும் இந்த வகையறாவைச் சேர்ந்தவையே. பின்னையது கெரில்லாக்களுடன் ஒத்துப்போகாத தொழிற் சங்கவாதிகளையும் சமூகத் தலைவர் களையும் படுகொலை செய்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்த எம்.ஆர்.டீ.ஏ. பொதுஜன ஆதரவுக்காக எந்த கோரிக்கையையும் முன்வைக்கவில்லை. முதலாளித்துவ பொதுஜன தொடர்புச் சாதனங்கள் இந்தக் குழுக்களை மார்க்சிசக் கெரில்லா குழுக்களாக அழைத்துக் கொண்டாலும் இவற்றின் கொள்கைகளுக்கும் வேலைத்திட்டத்துக்கும் மார்க்சிசத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. இவற்றின் செயற்பாடுகள் ஒரு பயங்கரவாதியானவன் "துப்பாக்கியுடனான மிதவாதி" என்ற பழைய கருத்துக்கு ஒரு நல்ல உதாரணம். தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்து அன்னியப்படுத்தப்பட்ட எம்.ஆர்.டீ.ஏ.யின் ஆயுதபாணிச் செயற்பாடு புயூகிமோரி ஆட்சியை தூக்கி வீசுவது அல்ல. நிர்ப்பந்தம் கொணரும் வகையிலான ஒரு எதிர்ப்புக்காட்டல் மட்டுமே.

எம்.ஆர்.டி.ஏ. 1983ல் மூன்று பிரிவுகளில் இருந்து உருவானது. ஒன்று புரட்சிகர சோசலிசக் கட்சி என்ற பெயரிலான மாஜி ஜெனரால் வலசோவின் இடதுசாரி இராணுவத்தில் இருந்து உருவானது. மற்றையது காஸ்ட்ரோவாதக் குழு. இது ஏ.பீ.ஆர்.ஏ.என்ற முதலாளித்துவக் கட்சிக்குள் இருந்து வந்த காஸ்ட்ரோவாதக் குழு. மூன்றாவது குழு ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து வந்தது.

முதலாவது குழு, "முற்போக்கு" ஜெனரால்களின் புரட்சிகர நடிப்புக்களை அபிவிருத்தி செய்தது. இரண்டாவது, கிராமப்புறக் கெரில்லாக்களின் தன்மையைக் கொண்டு இருந்தது. மூன்றாவது, மாஸ்கோ ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு விசுவாசமானது. இம்மூன்று பிரிவுகளும் பேருவில் சமூகப் போராட்டங்களை முன்னெடுக்கக் கூடியது தொழிலாளர் வர்க்கம் அல்ல. வேறொரு சக்தியே என்ற கருத்தில் ஒன்றுபட்டிருந்தன.

## வர்க்க குமுறல்

பேருவியன் தொழிலாளர் வர்க்கத்தின் பிரமாண்டமான வர்க்கப் போராட்டக் குமுறல் காலத்திலேயே இந்த கெரில்லாக் குழுக்கள் அமைக்கப்பட்டன. பிரமாண்டமான தொழிலாளர் வேலைநிறுத்தங்களினால் மாஜி.ஜூன்டா ஆட்சி கவிழ்ந்ததோடு , இது பெர்னான்டோ பிராடோ டேரியின் சிவிலியன் ஆட்சியின் கீழ் தொடர்ந்தது.

பேருவியன் ஸ்டாலினிஸ்டுகளில் பலர் ஏனைய குட்டி முதலாளித்துவ இடதுசாரிகளுடன் சேர்ந்து ஒரு பொதுஜன தேர்தல் முன்னணியான 'ஐக்கிய இடதுசாரிகள்' எனப்படுவதை உருவாக்கினர். ஸ்டாலினிச வழிகாட்டல் தொழிற்சங்க அதிகாரத்துவத்துடன் சேர்ந்து வர்க்கப் போராட்டத்தை தணிக்கவும் தொழிலாளர் வர்க்கத்தை பாராளுமன்றத் துக்கும் பேருவியன் முதலாளித்துவ அரசாங்கத்துக்கு அடிபணியச் செய்யவும் கைகொடுத்தது.

பியூஜிமோரியும் இராணுவத் தளபதியும் பேருவியன் தொழிலாளர்களதும் பரந்த தட்டினரான விவசாயிகள், மத்தியதர வர்க்கத்தினரதும் விரக்திகளின் நேரடி பெறுபேறாகும். ஒரு புறத்தில் ஐக்கிய இடதுசாரிகளின் பாராளுமன்ற முன்னோடிகளும் மறுபுறத்தில் பயங்கரவாதக் கெரில்லாக்களும் இருந்து கொண்டுள்ளனர்.

எம்.ஆர்.டி.ஏ. இயக்கம் பியூஜிமோரி ஆட்சியைத் தனக்கு சட்டரீதியான அரசியல் அந்தஸ்து வழங்கவும் அதன்மூலம் அது ஒரு தலைமறைவு ஆயுதபாணி இயக்கமாக தொடர்ந்தும் இயங்குவதற்கு முற்றுப்பள்ளி வைக்க நெருக்குவாரம் கொணரவே இந்த பணயக்கைதி நாடகத்தை அரங்கேற்றியிருக்கலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளன. இந்தத் திட்டம் விடுதலை செய்யப்பட்ட பேருவியன் காங்கிரசைச் சேர்ந்த யூவியர் டிஸ்கன் சோலிலால் ஏற்கனவே முன்வைக்கப்பட்டது.

இது முன்னைய பிரபல கெரில்லா இயக்கங்கள் கையாண்டு வந்ததும் பிரபலம் வாய்ந்ததுமான ஒரு திட்டமாகும். இது எம்.19 என்ற கொலம்பிய (இது 1980பதுகளில் எம்.ஆர்.டி.ஏ.யுடன் சேர்ந்து பட்டலொான் அமெரிக்காவை உருவாக்கியது) இயக்கம் அரசியல் அங்கீகாரத்துக்கும் தனது அங்கத்தவர்களுக்கான சிறிய வர்த்தகக் கடன்களுக்கும் பதிலாக ஆயுதங்களைக் கைவிட இணங்கியது. வெனியூலாவின் எம்.எ.எஸ். இயக்க கெரில்லாக்கள் இத்தகைய அரசியல் வெற்றிகளை கண்டதைத் தொடர்ந்து அவர்களின் தலைவர் சர்வதேச நாணய நிதியத்தின் கொடூரத் திட்டங்களை அமுல் செய்பவராக இருந்து கொண்டுள்ளார். எல் சல்வடோரில் எப்.எம்.எல்.எஸ். இயக்கம் தன்னை விசுவாசம் கொண்ட ஒரு பாராளுமன்ற எதிர்க்கட்சி ஆக்கிக் கொண்டுள்ளது.

இந்த அமைப்புக்களைப் போலவே எம்.ஆர்.டி.ஏ.யும் எதுவிதமான சந்தேகத்துக்கும் இடமின்றி தனியார் சொத்துடமை, இலாப அமைப்பினை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சியாக மாறுவது நிச்சயம். விடுவிக்கப்பட்ட கைதிகள் பலர் தமது தலைவர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கத் துறையை தனியார்மயமாக்கல், பேருவியன்

(14ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கம் பலம் வாய்ந்த அட்டன் மகாநாடு

ஜனவரி 19ம் திகதிஅட்டன்-டிக்கோயா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற சோசலிச சமத்துவக் கட்சியின் தொழிற்சங்கமான பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் அனைத்துலக சோசலிசத்தின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டவும், அதன் அடிப்படையில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் பிரமாண்டமான பிரச்சினைகளைத் தழுவிய இடைமருவு கோரிக்கைகளின் அடிப்படையில் பிரச்சாரத்தை ஒழுங்கு செய்யவும் ஏகமனதாக தீர்மானித்தது.

அட்டன் பென்மூர், தலவாக்கலை சென்ட்கூம்ப்ஸ், பண்டாரவளை குருக்குந்தே, மத்துகம அலதுவ முதலான தோட்டங்களில் இருந்து வந்த பெ.தோ.கை.தொ.ச உறுப்பினர்கள் உள்ளடங்கலான தோட்டத் தொழிலாளர்களும நோர்வூட் வென்சர் தோட்டத் தொழிலாளர்களும் கொழும்பு மருதானை ஆர்.ஆர்.பிரின்டர்ஸ், காலி பீச் ஹோட்டலின் பெ.தோ.கை.தொ.ச . உறுப்பினர்களும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

மாநாட்டுக்குத் தலைமைதாங்கிய பெ.தோ.கை.தொ.ச.அமைப்பாளரும் சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான எம்.அரவிந்தன் கொழும்பு, மத்துகமை, காலி முதலான இடங்களில் இருந்து வந்தவர்கள் உள்ளடங்கலான சகல தொழிலாளர்களையும் இளைஞர்களையும் வரவேற்று உரைநிகழ்த்தினார். இந்த மாநாட்டினுள் பிரதிபலித்த தோட்ட, நகர்ப்புறத் தொழிலாளர்களின் ஐக்கியம் மிகவும் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என அவர் சுட்டிக்காட்டினார். லங்கா சமசமாஜக் கட்சி அது ட்ரொட்ஸ்கிச கட்சியாக விளங்கிய 1940பதுகளில் தோட்டத் தொழிலாளர்களதும் நகர்ப்புறத் தொழிலாளர்களதும் ஐக்கியத்துக்காகப் போராடிய விதத்தை நினைவுகூர்ந்த அரவிந்தன் ல.ச.ச.க. ஒரு தேசியவாதக் கட்சியாக சீரழிந்து போனதன் பெறுபேறாக 1964 முதலாளித்துவ சி.ல.சு.க. அரசாங்கத்தினுள் நுழைந்து கொள்ளும் காட்டிக்கொடுப்புக்கு இட்டுச் சென்றதன் மூலம் அந்த ஐக்கியம் சிதறடிக்கப்பட்ட விதத்தையும் தெளிவுபடுத்திக் காட்டினார். அந்தக் காட்டிக்கொடுப்புக்கு எதிராக சோசலிச அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியாக அமைக்கப்பட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்-அதாவது இன்றைய சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடி தோட்டத்துறை, நகர்ப்புறத் தொழிலாளர்களின் ஐக்கியத்துக்கான போராட்டத்தை முன்னெடுத்ததாகவும் இன்று அப்போராட்டம் சோ.ச.க.வினால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இ.தொ.கா, ஜ.தொ.கா, என்.யூ.டபிள்யூ., மலையக மக்கள் முன்னணி முதலான தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் துரோக நடவடிக்கைகளுக்கும் கருங்காலி வேலைகளுக்கும், பொலிஸ்பாணி நடவடிக்கைகளுக்கும் எதிராக பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கக் கிளைகளை அமைத்ததில் கிடைத்த அனுபவங்களை அரவிந்தன் மாநாட்டுக்கு குறிப்பிட்டார்.

இம்மாநாட்டின் முக்கிய அரசியல் அறிக்கையை பெ.கை.தொ.ச. பொதுச் செயலாளரும் சோ.ச.க. மத்திய குழு உறுப்பினருமான டபிள்யூ.ஏ.சுனில் வழங்கினார். சோசலிச சமத்துவக் கட்சியின் நல்வாழ்த்துக்களை வழங்குவதுடன் தனது அறிக்கையை ஆரம்பித்த சுனில், இந்த மாநாடு ஏனைய தொழிற் சங்கங்களின் மாநாட்டில் இருந்து முழுமனே வேறுபட்டது என்றும் பெ.கை.தொ.ச.தனது மாநாட்டை நடாத்துவது ஏனைய தொழிற்சங்கங்களைப் போல வழக்காற்று ரீதியில் அல்ல எனவும் குறிப்பிட்டார்.



பண்டாரவளை குருக்குதே தோட்டத்தில் பெ.கை.தொ.ச. நடாத்திய மறியல் போராட்டம்

இலங்கையிலும் அனைத்துலக ரீதியிலும் தொழிலாளர் வர்க்கம் மிகவும் தீர்க்கமான ஒரு திருப்புமுனைக்கு வந்துள்ளது. அந்த நிலைமையினுள் இடம்பெறும் இம்மாநாடு தொழிலாளர் வர்க்கத்துக்கு அத்தியாவசிய மாகியுள்ள தலைமையையும் வேலைத்திட்டத்தினையும் முன்னோக்கினையும் பற்றி ஆழமாகக் கலந்துரையாடவும் அந்த வேலைத்திட்டம் முன்நோக்கின் மீது தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டவுமேயாகும் என்றார்.

இலங்கையில் போலவே அனைத்துலக ரீதியிலும் தொழிலாளர் வர்க்கம் உள்ளடங்கிய ஒடுக்கப்படும் மக்கள் உக்கிரமான வேலையின்மை, வறுமை, மோசமான உழைபபுச் சுரண்டல் நிலைமைகளுக்கு முகம் கொடுத்துள்ள முறையினை அவர் தெளிவுபடுத்திய சுனில் இந்த நிலைமைகளுக்கு எதிராக உலகளாவிய ரீதியில் வர்க்கப் போராட்டம் வளர்ச்சி கண்டு வரும் விதத்தினை சுட்டிக் காட்டினார்.

"ஏகாதிபத்தியவாதிகளும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளும் இந்த உலகளாவிய வர்க்கப் போராட்ட அலையையிட்டு பீதி கொண்டுள்ளனனர். இந்தப் போராட்ட தொழிலாளர் அதிகாரத்துவங்களுக்கு எதிரான கிளர்ச்சியின் வடிவத்தை எடுத்துள்ளது. இந்தப் போராட்டங்களின் புதிய பண்பினை இனங்காண்பது அவசியம்... அவை தமது வர்க்க ஆட்சிக்கு குழிபறித்துள்ளன என்பதையும் பழைய அதிகாரத்துவ இயந்திரத்தின் மூலம் இந்தப் போராட்டங்களினை அமுக்கி வைப்பது இனியும் முடியாது என்பதையும் முதலாளித்துவ ஆளும் வர்க்கம் புரிந்து கொண்டுள்ளது. இந்நிலைமையினுள் அவர்கள் அப்பட்டமான சர்வாதிகாரத்தை நிறுவ முடிவுசெய்துள்ளனர்."

அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிரான போராட்டங்களுக்கு கிளர்ந்த தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக இராணுவத்தை இறக்க பொதுஜன முன்னணி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள விதத்தினை விளக்கிய சுனில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"...முதலாளித்துவ அமைப்பினுள் சீர்திருத்தங்களுக்கு இனியும் இடம்கிடையாது. தலைமை, வேலைத்திட்டம், முன்நோக்கு பற்றிய நெருக்கடி தொழிலாளர் வர்க்கத்தின் எதிரில் தோன்றியுள்ளது. பழைய கட்சிகளதும் தொழிற்சங்கங்களதும் அதிகாரத்துவங்களிடம் இருந்து எந்தவிதமான தலைமையும் கிடைக்கும் என்று தொழிலாளர் வர்க்கம் எதிர்பார்க்க முடியாது. தொழிலாளர் வர்க்கத்துக்கு புதிய தலைமையும் முன்நோக்கும் வேலைத்திட்டமும் அவசியம்."

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு போராடுவது தொழிலாளர் வர்க்கத்துக்கு அத்தியாவசியமான அந்த அனைத்துலகவாதப் புரட்சித் தலைமையையும் அனைத்துலகவாத முன்நோக்கினையும் வேலைத்திட்டத்தையும் வழங்கவே எனவும் தோழர்.சுனில் குறிப்பிட்டார். அனைத்துலகக் குழுவின் பகுதிகளை லீக்குகளின் நிலைமையில் இருந்து கட்சிகளாக பரிணாமம் செய்வது அந்தப் பொறுப்புக்கு தோள்கொடுத்து, தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களையும் அவர்களின் போராட்டங்களினுள் புதிய ஆரம்பத்துக்கான தயாரிப்பினையும் செய்வதாகும் என வலியுறுத்தினார்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை கட்சியாகப் பரிணாமம் செய்தவதன் மூலம் அமைக்கப்பட்டுள்ள சோசலிச சமத்துவக் கட்சியிலும் அதன் தொழிற்சங்கமான பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்திலும் சேர்ந்து சோ.ச.க. வையும் பெ.கை.தொ.ச.வையும் கட்டியெழுப்ப இணையுமாறு சுனில் வருகை தந்திருந்த தொழிலாளர்களுக்கும் இளைஞர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

மத்துகம அலதுவ தோட்டத்தில் இருந்து வந்திருந்த இளம் தொழிலாளியான விமலன் பேசுகையில் இ.தொ.கா. மாவட்டத் தலைவர்களின் பொய்க்குற்றச்சாட்டின் பேரில் தாம் பொலிசாரிடம் பிடித்துக் கொடுக்கப்பட்டதையும் அங்கு தாம் சித்திரவதைக்கு ஆளானதையும் விமலன் விளக்கினார். தம்மை விடுதலை செய்யப் பிரச்சாரம் செய்தது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் பெ.கை.தொ.ச.வுமே என அவர் குறிப்பிட்டார்.

அதே தோட்டத்தைச் சேர்ந்த இளைஞரான ஜெயசங்கர் பேசுகையில் வேலை விரைவுபடுத்தலுக்கு எதிராக எதிர்ப்புக் காட்டிய போது தோட்ட நிர்வாகிகளும் இ.தொ.கா.தலைவர்களும் மூடியைக் களவாடினான் என்ற பொய்க் குற்றச்சாட்டின் பேரில் தம்மை தாக்கிய விதத்தினை விளக்கினார்.

## தொழிலாளர் மீது பொலிஸ் தாக்குதல்

வென்சர் தோட்டத் தொழிலாளியான பீ.வேலு பேசுகையில் ஜனவரி 3ம் திகதி தாம் உட்பட வென்சர் தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுக்க நேரிட்ட பொலிஸ் தாக்குதல் பற்றிக் குறிப்பிட்டார். "21 சகோதர தொழிலாளர்களின் ஒரு நாள் சம்பளத்தை அரைநாள் சம்பளமாக வெட்டத் தோட்ட நிர்வாகிகள் எடுத்த நடவடிக்கைக்கு எதிராக பிரச்சாரத்தில் இறங்கிய போது நிர்வாகம் கலகம் அடக்கும் பொலிஸ் படையை அழைத்தது. அவர்கள் தொழிலாளர்களை தாக்கி, கண்ணீர்ப்புகை அடித்தனர். அத்தோடு அவர்கள் தங்கியிருந்த பக்டரி வளவில் இருந்து கலைக்கப்பட்டதாக" வேலு குறிப்பிட்டார். தமது சொண்டில் கண்ணீர்ப் புகைக் குண்டு பட்டு காயம் ஏற்பட்டதாகவும் காயம்பட்ட ஏனைய 6 பெண் தொழிலாளர்களுடன் தாமும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அங்கு எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கப்படவில்லை என்றார்.

ஒரு வருடத்துக்கு மேலாகு அரசியல் சிறைக் கைதியாக இருந்து சமீபத்தில் விடுதலையான டாக்டர். சாந்தகுமார்: "... இன்று சிங்கள, தமிழ் தொழிலாளர்களின் ஐக்கியத்துக்காகப் போராடும் ஒரே அமைப்பு சோசலிச சமத்துவக் கட்சியே. சோ.ச.க. என்னை விடுதலை செய்ய போராடியது என்பதற்காக நான் அவ்விதம் கூறவில்லை. நான் இளைஞனாக அரசியலில் இறங்கியது 1969ன் பின்னராகும். பழைய இடதுசாரிகளின் வங்குரோத்து அம்பலத்துக்கு வந்த ஒரு நிலைமையில் நான் புரட்சிகர வேலைத்திட்டத்துக்காகப் போராடும் ஒரு கட்சியைத் தேடினேன். சிங்கள, தமிழ் தொழிலாளர்களின் ஐக்கியத்துக்காக போராடும் ஒரு கட்சியைத் தேடினேன். நான் சந்தித்த அத்தகைய ஒரே கட்சி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே: சோசலிச சமத்துவக் கட்சியே.

"சோ.ச.க.வின் தொழிற் சங்கமான பெருந்தோட்ட கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்து அந்தச் சங்கத்தை கட்டியெழுப்ப போராடுமாறு நான் தொழிலாளர்களை வேண்டுகின்றேன். உங்களின் தலைமையாகக் கொண்டு இந்தச் சங்கத்தைப் பலம் வாய்ந்த முறையில் கட்டியெழுப்ப தொழிற்பட வேண்டும்...அவ்வாறே சோ.ச.க.வில் சேர்ந்து உலக தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்துக்கான போராட்டத்தில் இணையுமாறு நான் தொழிலாளர்களை வேண்டுகின்றேன்."

பண்டாரவளை குருக்குந்த தோட்ட பெ.கை.தொ.ச.கிளைத் தலைவர் சுந்தரலிங்கம்: "தொழிலாளர் வர்க்கத்தின் பேரில் பேசிக்கொள்ளும் ஏனைய தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களை காட்டிக் கொடுத்துள்ளார்கள். அந்த நிலைமையைப் புரிந்து கொண்டு நான் சோ.ச.க. வில் சேர்ந்தேன்."

இப்பகுதியில் காணிகளை இழந்த விவசாயிகளுக்கு எதிரான தாக்குதல்களுக்கு எதிராக தாம் உட்பட சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்கள் ஒழுங்கு செய்த போராட்டத்தின் அனுபவங்களைக் குறிப்பிடுகையில் அவர் கூறியதாவது : "தொழிலாளர்கள் தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக அல்ல பொதுப் பிரச்சினைகளுக்கான போராட்டத்துக்கு முன்வரவேண்டும் " என்றார்.

மருதானை ஆர்.ஆர்.பிரிண்டர்ஸ் பெ.கை.தொ.ச. கிளையின் ஒஷீர் தனது நிறுவனத்தின் தொழிலாளர் உரிமையை காக்கும் போராட்டம் பெ.கை.தொ.ச. கிளையையும் அமைத்துக் கொண்டு முன்நோக்கிச் சென்ற விதத்தினை விபரித்தார்.

"நாம் சுவரொட்டி பிரச்சாரத்தினை தொடுத்த போது முதலாளி தொழிற்சசங்க கிளையின் நான்கு தலைவர்களை வேலைநீக்கம் செய்தது . அந்த வேட்டைக்கு எதிராக தொழிலாளர்கள் உடனடியாக போராட்டத்துக்குக் கிளர்ந்ததும் முதலாளி எம்மைக் கதவடைப்புச் செய்தார். எமது நிறுவனத்தில் இந்த தகராறை அரசாங்கத்தின் "லேபர் கொன்ட்ரோலுக்கு" எடுத்துச் சென்றோம். அங்கு எமக்கு அது "லேபர் கொன்ட்ரோல்" அல்ல "பகா கொண்ட்ரோல்" என்பது தெரிந்தது. தொழிலாளர்களான நாம் அனைவரும் இணைந்து போராடினால் மட்டுமே எமது பிரச்சினைகளை தீர்க்க முடியும்."

காலி பீச் ஹோட்டல் பெ.கை.தொ.ச.கிளையின் லக்ஷ்மன்: "நாமும் தோட்டத் தொழிலாளர்களைப போலவே வெளிநாட்டு செலாவாணியை சம்பாதிக்கும் கைத்தொழிலிலேயே வேலை செய்கின்றோம். எமது நிறுவனத்தின் தொழிலாளர்கள் ரூபா.800-1000 அளவு மிகக் குறைந்த சம்பளத்துக்கே சுரண்டப்படுகின்றோம். இந்த நிலைமைகளுக்கு எதிராகப் போராடும் பொருட்டு தொழிற் சங்க் கிளையை அமைக்கத் தொழிலாளர்கள் சீ. எம்.யூ. சங்கத்திடம் சென்றோம். சீ.எம்.யூ. தலைவர்கள் சில மாதங்கள் பொறுத்திருக்குமாறு கூறினர். அந்த நிலைமையினுள் நாம் பெ.கை.தொ.ச. கிளையை அமைக்க நடவடிக்கை எடுத்தோம்.

"எமது சங்கக் கிளையை அமைக்கும்

(15ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

# நவசமசமாஜக் கட்சி- விடுதலைப் புலிகள் அரவணைப்பு நாடகம் எதற்கு ?

கே ரத்னாயக்க

நவசமசமாஜக் கட்சி டிசம்பர் 30ம்திகதி கொழும்பில் நடாத்திய அதனது 19வது ஆண்டுநிறைவு விழாவில் கலந்துகொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தது. அந்த விழாவில் தம்மால் கலந்து கொள்ள முடியாது போனதற்கு வருத்தம் தெரிவித்து விடுதலைப் புலிகள் அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தி அன்றைய மாநாட்டில் பெருமிதத்துடன் வாசிக்கப் பட்டது. நவசமசமாஜக் கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான இந்தப் புதிய காதல் நாடகமானது அனைத்துலகப் பப்லோவாதிகளின் இலங்கைப் பகுதியான நவசமசமாஜக் கட்சியின் நாற்றமெடுபபின் புதிய திருப்பத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

விடுதலைப் புலிகள் அனுப்பிய அந்த வாழ்த்துச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.: நவசமசமாஜக் கட்சியின் 19வது ஆண்டு நிறைவு மாநாட்டுக்கு எம்மை அழைத்தமைக்காக அக்கட்சியின் அரசியல் குழுவுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்... இலங்கை மக்களின் முன்னேற்றத்துக்கு உழைக்கும் ந.ச.ச.க.வின் உன்னத கொள்கையையும் தமிழ் மக்களிற்கு எதிராக இடம்பெறும் ஜனசங்கார யுத்த்துக்கும் எதிராக அக்கட்சி நடாத்தும் பிரச்சார நடவடிக்கையையும் நாம் பெரிதும் மதிக்கின்றோம். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவான ந.ச.ச.க.வின் நிலைப்பாட்டினை தமிழ் மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்."

இந்த மகாநாட்டுக்கு சில வாரங்களுக்கு முன்னர் ஐரோப்பாவில் பப்லோவாதிகளின் ஒரு சந்திப்புக்குச் சென்ற ந.ச.ச.க. தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் முதலாளித்துவ. குட்டி முதலாளித்துவ நடவடிக்கை யாளர்களின் ஒரு சந்திப்பிலும் கலந்துவிட்டு இலங்கை திரும்பியுள்ளார்.இது தொடர்பாக வீரகேசரி பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் விடுதலைப் புலிகளை புகழ்ந்து பாராட்டியுள்ள ந.ச.ச.க.தலைவர் விடுதலைப் புலிகளின் அரசியலுக்கும் தமது அரசியலுக்கும் இடையே ஒற்றுமை இருப்பதாகக் கூறியுள்ளார். இது நவசமசமாஜக் கட்சியின் பிற்போக்கு தொழிற்பாட்டுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அவர் கூறியதாவது :

"எமது போராட்ட முறைக்கும் விடுதலைப் புலிகளினதிற்கும் இடையே வேறுபாடி இருப்பினும் போராட்டம் பற்றி இரு சாராரதும் கருத்து ஒன்றே. வெவ்வேறு வழிகளில் சென்றாலும் செல்லும் வழி ஒன்றே. (நிச்சயமாக ஆசிரியர்) மக்களுக்கு விளக்கிச் செல்வதே இருசாரார்களதும் கருத்தாகும். ஆகையால் நாம் இருவரும் ஒன்றிணைந்து கருத்துப்பரிமாறி செயற்படுவது கஷ்டமானதல்ல. இவ்விடத்தில் எம்மிரு சாராருக்கும் கொள்கை ஒன்றேதான் என்ற விடயம் முக்கியமானது."

இந்த விதத்தில் நவசமசமாஜக் கட்சி விடுதலைப் புலிகளை கட்டியணைக்கும் ஒரு பெரும் பயங்கரநிலைமை காணப்படுகின்றது.

கடந்த பத்து ஆண்டுகளாக நவசமசமாஜக் கட்சி விடுதலைப் புலிகளை ஏனைய சகல தமிழ் அமைப்புக்களைக் காட்டிலும் வலதுசாரிப் போக்குக் கொண்டது எனக் கண்டனம் செய்து வந்துள்ளது. அது தனது பத்திரிகைகளில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க ஆலோசனை வழங்கும் விதத்தில் யூ.என்.பிக்கும் இராணுவத்துக்கும் கட்டுரை எழுதிவந்துள்ளது. அந்தக் கட்டுரைகளில் சிலவற்றை இங்கு மேற்கோளாகக் காட்டுவோம்.: 1990 ஜூலை 10ம்திகதி ந.ச.ச.க பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்னவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட அறிக்கையில் கொலையாளிப் புலி அமைப்புக்கு வடக்கு கிழக்கினைக் காட்டிக் கொடுப்பதற்கு எதிரான பிரச்சாரத்தில் இணையும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் விக்கிரமபாகு கருணாரத்னவுடன் கூடிக் குலாவி வந்த ந.ச.ச.க.தலைவரில ஒருவரான வாசுதேவ நாணயக்கார யூன் 18ம் திகதி பாராளுமன்றத்தில் பேசுகையில் விடுதலைப் புலிகள் பாசிசப் பாணியிலான ஒரு அமைப்பு என கூறினார். யூ.என்.பி.யுடன் எதுவிதமான முரண்பாடும் இல்லாத விதத்தில் அவர் பின்வருமாறு கூறினார்.:

"...அடுத்ததாக வடக்கு கிழக்கில் புலிகள் மனம்போன போக்கில் செயற்படும் சட்டம் காணப்படுகின்றது. ஏனைய அமைப்புக்களை அடக்கியாளும் பாசிச முறையிலான ஆட்சி. தற்போது இது குறித்து எமக்கிடையே எந்தவிதமான முரண்பாடும் கிடையாது."

பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிப்பீடம் ஏற்றப் பக்கபலமளித்த நவசமசமாஜக் கட்சி அரசாங்கத்தின் உத்தேச அரசியல் தீர்வு திட்டத்தை பிரபல்யப்படுத்தவும் விடுதலைப் புலிகளை அன்னியப்படுத்தவும் ஏனைய தமிழ் முதலாளித்துவக் குழுக்கள் முன்வைக்கும் யோசனைகளை அமுல் செய்யும்படி அரசாங்கத்தைக் கோரியது.

## புதிய நண்பன்

விடுதலைப் புலிகள் பற்றி இந்த இலட்சணத்தில் பேசியும் எழுதியும் வந்த நவசமசாஜக் கட்சி இன்று அந்த அமைப்பை ஆரத் தழுவிக் கொண்டுள்ளதேன்? இது எந்த வகையறாவிலான குத்துக்கரணம்? எமக்குத் தெரிந்த விதத்தில் இது ஒரு எளிதான விடயமல்ல. விடுதலைப் புலிகள் ந.ச.ச.க.வின முக்கிய ஒரு தலைவரான கே.அண்ணாமலையை 1990 ஜூனில் கொலை செய்தது. இந்த மாநாட்டில் விக்கிரமபாகு கருணாரத்ன அண்ணாமலை விடுதலைப் புலிகளினால் கொலையுண்டு போன போராட்டத்தின் பயனாக மனம்மாறி தம்முடன் பேச்சுவார்த்தைக்கு வருவது ஒரு மாபெரும் வெற்றி" என்கிறார்.

ஏகாதிபத்தியவாதிகளும் இலங்கை முதலாளித்துவத்தின் பெரும்புள்ளிகளின் குழுவும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமரசத்துக்காக தொழிற்பட்டுவநகின்றன. பயங்கரமான இனவாத யுத்தத்தில் ஈடுபட்டுள்ள பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் சகல புழுகுகளும் இன்று அம்பலமாகியுள்ளன. விடுதலைப் புலிகள் தமது அடக்குமறை நிர்வாகம். வங்குரோத்து நிலை காரணமாக தமிழ்மக்களது பெரும் எதிர்ப்புக்கு ஆளாகியது. தென்பகுதியில் தோட்டத்துறை. மின்சாரம். உருக்கு. துறைமுகம் முதலான கூட்டுத்தாபனங்களில் வெளிச்சமாகியது போல் தொழிலாளர். ஒடுக்கப்படும் மக்களின் போராட்டம் மேலும் மேலும் அபிவிருத்தி கண்டு வருகின்றது. பெரும் சமூகக் குமுறல் நிலையை நன்குணர்ந்தே அரசியல் ஸ்திரப்பாட்டை உருவாக்குவது என்ற பேரில் வடக்கிலும் தெற்கிலும் பிற்போக்குச் சக்திகளின் ஒரு கூட்டொன்றைக் கட்டியெழுப்ப முயற்சி எடுக்கப்படுகின்றது.

நவசமசமாஜக் கட்சி விடுதலைப் புலிகளுடன் தோளோடு தோள் சேர்ந்து கொண்டமையானது ஏகாதிபத்திய வாதிகளதும் இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் இந்த அவசியத்தினை புலப்படுத்துகின்றது. இதற்குத் தொண்டாற்றும் பொருட்டே ஏகாதிபத்தியச் சார்பு அமைப்பாக மாறியுள்ள விடுதலைப் புலிகளைப் பற்றிப் புகழ்பாடுவதிலும் பிரச்சாரம் செய்வ:திலும் நவசமசமாஜக் கட்சி இறங்கி உள்ளது. கடந்த காலங்களில் இவர்கள் பாசிச ஒடுக்குமுறை அமைப்பாக மாறிய ஜே.வீ.பி.யைத் தலையில் வைத்துக் கொண்டாடினார்கள் என்பதும் அதை தெற்கில் "மார்க்சிசத்தை நோக்கிச் செல்லும்" அமைப்பெனக் குறிப்பிட்டமையும் குறிப்பிடத் தக்கது. இவை இத்தகைய பிற்போக்குச் சக்திகளை தூக்கிப்பிடிப்பதற்கான முயற்சிகளில் ஒனறாகும். இவர்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்குத் தொண்டாற்றும் விதத்தில் கூட்டரசாங்கத்தை ஆட்சிப்பீடம் ஏற்ற பக்கபலமாக இருந்தது மட்டுமன்றி தொழிலாளர். ஒடுக்கப்படும் மக்களை அடக்குவதற்கான சக்திகளையும் அபிவிருத்தி செய்து வருகின்றனர். அவர்களுடன் சேர்ந்து செயற்படுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் முதுகைத் தாம் தட்டிக் கொடுப்பதற்குப் பதில் உபகாரமாக அவர்கள் நவசமசமாஜக் கட்சியின் முதுகைத் தட்டிக் கொடுத்ததால் மெய்மறந்துபோன விக்கிரமபாகு கருணாரத்ன. விடுதலைப் புலிகள் மனம்மாறித் தம்மை நாடி வந்துள்ளதாகக் குறிப்பிட்டு ஆரவாரிக்கின்றார். விடுதலைப் புலிகளும் கூட சிலசமயம் நவசமசமாஜக் கட்சி பற்றி இப்படிக் கூறிக்கொள்ளக் கூடும். இருசாராரும் மிக நெருங்கிக் கொண்டுள்ளனர் என்பதை இந்த இடத்தில் ஏற்றுக் கொண்டாக வேண்டும். அது நடைபெற்றது வேறு வகையிலாகும். இந்த இரண்டு தேசியவாத அமைப்புக்களும் அருகருகே உள்ள பாதைகளில் பயணம் செய்து. வலதுசாரி சீரழிவுக்கு உள்ளாகி. ஒன்றுடன் ஒன்று கைகோர்ததுக் கொண்டு நடைபோட ஆரம்பித்துள்ளன. விடுதலைப் புலிகள் ஒரு கால கட்டத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர் கதையளப்புக்களில் ஈடுபட்டு தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக முன்நின்று கொண்டுள்ளதாகக் கூறிக்கொண்டது. சன்டினிஸ்டா. பீ.எல்.ஓ., ஏ.என்.சீ.ஏ. வகையிலான தேசிய முதலாளித்துவ அமைப்புக்களைப் போன்று வலதுசாரித் திசையில் சென்று கொண்டுள்ள விடுதலைப் புலிகளும் இன்று ஏகாதிபத்தியச் சார்பிலான ஒரு அரசுக்காக அல்லது சமரசத்தின் ஊடாக அமைக்கப்படும் ஒரு அரசுக்காகப் போராடுகின்றது.அத்தோடு இந்து மதவாதத்தை நோக்கியும் பின்வாங்கச் செய்கின்றது. மறுபுறத்தில் ந.ச.ச.க. ஏகாதிபத்தியவாதிகளது தேவையை தூக்கிப்பிடித்து. உண்மையில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக செயற்படும் ஒரு அமைப்பாக மாறிக் கொண்டுள்ளது. இதனாலேயே கருணாரத்ன தமதும் விடுதலைப் புலிகளதும் வேலைத்திட்டமும் ஒனறேயெனவும் அவை ஒரே இடத்துக்கே இட்டுச் செல்வதாகவும் கூறிக் கொண்டுள்ளார்.

## விடுதலைப் புலிகளும் சோசலிச சமத்துவக் கட்சியும்

விடுதலைப் புலிகள் நவசமசமாஜக் கட்சியினரை அரவணைத்துக் கொண்டதற்கு மாறான விதத்தில் அது தனது குண்டர்களை பயன்படுத்தி சோசலிச சமத்துவக் கட்சியின் (முன்னைய பு.க.க) அங்கத்தவர்களுக்கு எதிராக பிரான்சிலும் ஜேர்மனியிலும் தாக்குதல் நடாத்தியுள்ளது.அத்துடன் நில்லாது கொலைப் பயமுறுத்தல்களையும் விடுத்துக் கொண்டுள்ளது. இந்த தாக்குதலுக்கான காரணம் என்ன? எதுவிதமான மாற்று வேலைத்திட்டமும் இல்லாமல் ஏகாதிபத்தியவாதிகளின் பின்னால் தத்திப் பாயும் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களது அதிருப்திககு உள்ளான ஒரு நிலைமையில் சோசலிச சமத்துவக் கட்சி சமர்ப்பிக்கும் வேலைத்திட்டத்தின் திசையில் இம்மக்களது கவனம் திரும்புவதே காரணமாகும். இந்தத் தாக்குதலானது தமிழ் மக்களது ஜனநாயக உரிமைகளை அடக்கியவாறு வலதுசாரிப் பாய்ச்சலில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளின் தன்மையைக் காட்டிக் கொண்டுள்ளது.

நவசமசமாஜக் கட்சி தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் இலங்கை மக்களின் முன்னேற்றத்துக்காகவும் "சிறந்த கொள்கையை" கைவசம் கொண்டுள்ளதாகப் புகழ்ந்து விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையானது விடுதலைப் புலிகள் "தமிழ் மக்களுக்காக சிறந்த போராட்டத்தை நடாத்துவதாகக்" கூறும் ஒரு பொய்ப் பிரச்சாரத்தினை ஒத்ததாகும்.

நாம் சற்றுப் பொறுமையுடன் விடுதலைப் புலிகள் கூறும் நவசமசமாஜக் கட்சியின் "உயர் சேவையை" நோட்டம்விடுவோம்: இக்கட்சியின் ஸ்தாபகர்களான வாசுதேவ நாணயக்காரவும் விக்கிரமபாகு கருணாரத்னவும் 1972ல் கூட்டரசாங்கம் கொணர்ந்த சிங்கள பௌத்த அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஆதரவளித்தமை: 1983ன் கறுப்பு ஜூலை யூ.என்.பி.அரசாங்கத்தாலும் இனவாத அமைப்புக்களாலும் நடாத்தப்பட்டது என்பது வெட்ட வெளிச்சமான நிலையிலும் அதனைத் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரர எழுச்சியின் திரிக்கப்பட்ட போக்காகும் என்றமை. 1987 ஜூலையில் இந்திய இலங்கை ஒப்பந்தமும். இந்திய இராணுவ ஆக்கிரமிப்பும் மேற்கத்தைய ஏகாதிபத்திய தாக்குதல்களும் முற்போக்கான நடவடிக்கையாகும் என்றமை. ஜே.வீ.பி. சி.ல.சு.க.போன்ற இனவாதிகளுடன் சேர்ந்து இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு எதிராக நின்றுகொண்டுள்ளதாகக் காட்டும் விதத்தில் இடம்பெற்ற பிற்போக்கு இனவாத கலவரங்களை "புரட்சிக்கு முன்னதான சூறாவளி" அல்லது "ரந்தொலி பெரஹறவுக்கு முன்னர் இடம்பெறும் கும்புல் பெரஹற" என அறிவித்ததன் மூலம் இனவாத அடக்குமுறைகளுக்கு கைகொடுத்தமை. 1990ல் பிரேமதாச அரசாங்கம் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தபோது வாசுதேவ நாணயக்கார பாராளுமன்றத்தில் யுத்த செலவின வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுக்காக வாக்களித்தமை. தமிழ் மக்களை ஒடுக்க வடக்கேயும் கிழக்கேயும் அனுப்பப்பட்ட யுத்தப் படைகளுக்கு புகழ்பாடும் சுவரொட்டிகளை ந.ச.ச.க. தொழிற்சங்கங்கள் ஒட்டியமை. தமிழ் மக்களை அடக்க "சங்கிலி இராணுவம்" அமைக்குமாறு பிரேமதாச அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியமை. பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிப்பீடம் ஏற்ற உதவியதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் இடையே பேச்சுவார்த்தைக்கு பக்கபலம் அளித்ததில் இருந்து யுத்தம் வெடித்ததும் அதைக் கொண்டு நடாத்த அரசாங்கம் முன்வைத்த தீர்வுத் திட்டத்தை ஆதரித்து பிரச்சாரம் செய்தமை. தற்போது ஏகாதிபத்தியத்தின் தேவைக்காக விடுதலைப் புலிகளை புகழ்ந்து தள்ளி தொழிற்படுகிறது. இப்போது தென்பகுதி மக்களையும் அவர்களை முதலாளித்துவக் கட்சிகளுடன் பிணைத்துப் போடவும் ஜே.வீ.பி. போன்ற பிற்போக்குக் கட்சிகளைத் தூக்கிப் பிடித்தும் தொழிலாளர்களின் சுயாதீனமான போராட்டங்கள் வளர்ச்சி காண்பதற்கு முற்றிலும் எதிரியாக இருந்து கொண்டுள்ளது. அந்த விதத்தில் ந.ச.ச.க. ஏகாதிபத்தியவாதிகளதும் இலங்கை முதலாளிகளதும் சார்பில் "உன்னதமான சேவை"யை செய்யும் அமைப்பாக இருந்துகொண்டுள்ளது.

விடுதலைப் புலிகளை பூசிமெழுக முயற்சிப்பது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு எதிரியாக உள்ள இனவாத நச்சுவாயுவினை உள்ளடக்கிக் கொண்டுள்ள பிற்போக்கு வேலைத்திட்டமேயாகும். தமிழ் மக்கள் யுத்தத்தினால் கொல்லப்படுவதற்காக முதலைக் கண்ணீர் வடித்தோர் எத்தனை பேர் உள்ளனர்? நவசமசமாஜக் கட்சியும் அப்படியே முதலைக்கண்ணீர் வடிக்கின்றது.ஆனால் ந.ச.ச.க.வுக்கு ஒரு நிலையான கொள்கை மட்டும் உண்டு. அது என்ன தெரியுமா? சிங்கள தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கத்தினை சனநாயக ரீதியில் முதலாளித்துவ வர்க்கத்தில் இருந்து அரசியல்ரீதியில் சுயாதீனமாக அணிதிரட்டி. தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளையும் ஊர்ஜிதம் செய்யும் சிறீலங்கா-ஈழம் சோசலிச அரசாங்கத்தை அமைக்கப் போராடுவதை எதிர்ப்பதாகும்.

(16ம் பக்கம் பார்க்க)


படிப்பகம்

www.padippakam.com



# சோசலிச சமத்துவக் கட்சியின் ஸ்தாபிதம் ஒரு மாபெரும் வரலாற்று நடவடிக்கை

**– விஜே டயஸ்**



விஜே டயஸ்

**1996 நவம்பர் 2–3ம் திகதிகளில் நடந்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பேராளர் மாநாட்டில் பொதுச் செயலாளர் விஜே டயஸ் சமர்ப்பித்த அரசியல் அறிக்கையின் இறுதிப்பாகம்**

உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி ஐ.நா.வின் 1994க்கான உலக முதலீட்டு அறிக்கை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்கள் பொருளாதார கொடுக்கல் வாங்கல்களை அனைத்துலகமயமாக்கும் நடவடிக்கையினால் உலக பொருளாதாரத்தின் தன்மை மிகவும் அடிப்படை மாற்றங்களுக்கு உள்ளாகின்றது. முதலாவதாக சந்தைகளுக்கு ஊடாகத் தொடர்புபட்ட சுதந்திர தேசிய பொருளாதாரங்களின் கூட்டாக விளங்கும் நிலையில் இருந்து உலகப் பொருளாதாரம் முதற்தடவையாக உற்பத்தியில் பெறுமதிகளை சேர்க்கும் சங்கிலியில் எண்ணற்ற பகுதிகள் ஊடாக மேலும் மேலும் ஒன்றிணைக்கப்படும் அனைத்துலக உற்பத்தி அமைப்பாக மாறிக்கொண்டுள்ளது.

இதன்மூலம் என்றும் குறைத்து மதிப்பிடமுடியாத மதிப்பிடக் கூடாத பிரமாண்டமான மாற்றங்களுக்கு தேசிய அரசுகளின் பொருளாதார அமைப்புக்கள் உள்ளாகின்றன. அமைப்பில் ஏற்படும் இந்த மாற்றங்கள் தவிர்க்க முடியாத விதத்தில் மேற்கட்டுமானத்தின் அரசியல், சமூக உறவுத் துறைகளில் ஏற்கனவே வெளிப்பாடாகி உள்ளன.

வரலாற்றுத் தொழிற்பாட்டில் இதை ஒப்பிடின் -இன்று இடம்பெற்றுவரும் மாற்றங்கள் மூலம் உருவாகும் பெறுபேறுகளை 15ம் 16ம் நூற்றாண்டுகளில் இடம்பெற்றவற்றுடன் ஒப்பிடமுடியும். அந்தக் காலகட்டத்தில் ஆரம்பமான ஐரோப்பியர்களின் கடல் பயணங்களும் அதனுடன் இணைந்து உலகளாவிய வர்த்தகத்தின் பரம்பலும் நிலமானித்துவ ஆட்சியாளர்கள் ஐரோப்பியாவிலும் உலகின் ஏனைய பாகங்களிலும் பரவுவதற்கு காரணமாக இருந்த விதத்தில் இன்றைய பூகோளரீதியிலான உற்பத்தியும் விநியோகமும் தேசிய அரச அமைப்புக்களில் மிகவும் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது.

அன்று' ஐரோப்பா ஒரு கையில் பைபிளையும் மறுகையில் துப்பாக்கியையும் கொண்டு ஏனைய நாடுகளுக்குள் ஊடுருவியதாக வரலாறு கூறுகின்றது. இதற்குச் சமமாக . இன்றைய நடவடிக்கைகளை விளக்குவதற்கு ஒரு உதாரணம் கூற விரும்புகின்றேன். இது விஞ்ஞானம் , தொழில்நுட்பம், இயற்கை வளங்கள் தொடர்பான இந்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் கலாநிதி. சந்தன்சிவா குறிப்பிட்டுள்ள ஒரு சம்பவமாகும்.

உலக வர்த்தக அமைப்பின் (WTO) மொன்ட்ரீல் சாசனத்தின்படி 2010ம் ஆண்டளவில் குளிரூட்டும் இயந்திர உற்பத்தியில் இன்று பெரிதும் பாவிக்ககப்படும் (CFC) இரசாயன திரவியங்களை பயன்படுத்துவதை அடியோடு நிறுத்த வேண்டும். அமோனியா இரசாயனத்தைக் கொண்ட இந்தப் பயன்பாட்டின் மூலம் பிரமாண்டமான சூழல் மாசடைதல் - ஓசோன் திரையைக் கிழித்து எறியும் சிதைவு ஏற்படுவதே அதற்குக் காரணமாகும். இது சரியானதும் விஞ்ஞான ரீதியானதுமான முடிவு என்பதில் சந்தேகம் கிடையாது. ஆனால் இந்தியா உட்பட்ட பின்தங்கிய நாடுகள் பலவற்றில் இந்தப் பழைய இரசாயன பயன்பாடு இன்னமும் இருந்து கொண்டுள்ளதால் அது புதிய தொழில்நுட்பத்தின் மூலம் அகற்றப்படவேண்டும். புதிய தொழில்நுட்பத்தை உற்பத்தி செய்துள்ள ஐரோப்பிய ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகள் அந்தத் தொழில்நுட்பத்தை வழங்கும் ஆக்க உரிமையாளர்கள் என்ற விதத்தில் பின்தங்கிய நாடுகளின் கைத்தொழில் அதிபர்கள் ஈடுகொடுக்க முடியாத அளவிலான கட்டணத்தை அறவிடுகின்றார்கள். அதற்கு ஈடுகொடுப்பதற்கான இரசாயன (அழிவுக்கான) நஷ்டஈடு வழங்குவதாக உலக வர்த்தக அமைப்பு குறிப்பிட்டுள்ள போதிலும் அது வழங்கப்படவில்லை. இந்நிலைமையில் பின்தங்கிய நாடுகளில் வளர்ச்சி கண்டு வரும் எதிர்ப்பை நசுக்குதற்கான விதிமுறையை ஆராயும் வேறு ட்ரான்ஷ்நஷனல் கம்பனிகள் ஈடுபடுவது தவிர்க்கமுடியாதது. அன்றைய நிலைமையை பற்றி வரலாற்றாசிரியர்கள் கூறியதை மாற்றி ஒரு கையில் பிரமாண்டமான மூலதனத்துடன் கூடிய தொழில்நுட்பத்துடனும் மறுகையில் ஏவுகணைகளையும் கொண்டு ஏகாதிபத்தியவாதிகள் புதிய காலனித்துவ விதிமுறையின் அடிப்படையில் இன்று பாய்ந்துவிழுகின்றார்கள் என நாம் கூற முடியும்.

## ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் பெருக்கம்

1970பது அளவில் முக்கிய முதலாளித்துவ நாடுகள் பதினான்கில் அமைக்கப்பட்டிருந்த ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் எண்ணிக்கை 700 மட்டுமேயாகும். 1990 அளவில் அத்தொகை 24000 வரை உயர்ந்தது. 1985-90 காலப்பகுதியில் பூகோள ரீதியில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் அளவு நூற்றுக்கு 400 வீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்குச் சமானமான பிரமாண்டமான அளவிலான பொருளாதார மாற்றங்கள் அரசியல் துறையில் வெளிப்பாடாக இல்லை எனக் கூற பிறரையும் குருடாக்கச் சபதம் பூண்டு வீழ்ச்சி கண்டுவரும் முதலாளித்துவ அமைப்பைக் காப்பதில் இறங்கியுள்ள அரசியல் விதிமுறையின் அடிப்படையில் கோடானுகோடி மக்கள் முகம்கொடுக்கும் நிலைமையைப் பற்றி பிறவிக் குருடர்களால் மட்டுமேயாகும்.

ஐக்கியநாடுகள் அமைப்பு 1975லீ மிகவும் பின்தங்கிய நாடுகள் என 27 நாடுகளைக் குறிப்பிட்டது. 1995ல் இது 48 ஆகியது. “மிகவும் வறிய சனத்தொகை” 1975–95 காலப்பகுதியில் இரண்டுமடங்காகி, உலக ஜனத்தொகையில் நூற்றுக்கு 23 வீதத்தினர்– அதாவது 1300 மில்லியன் ஆகியது. 1960ல் உலக ஜனத்தொகையில் 20 வீதத்தினரான செல்வந்தர்கள் வறியவர்கள் 20 வீதத்தினரைக் காட்டிலும் 30 மடங்கு வருமானத்தை மடியில் கட்டிக் கொண்டார்களாயின் இதே 20 வீதத்தினர் 1995ல் 60 மடங்கு வருமானத்தை மடியில் போட்டுக் கொண்டார்கள். 1996ல் உலக ஜனத்தொகையில் உயர்ந்த செல்வம் கொண்ட நூற்றுக்கு 20 வீதக் கோட்டின் கீழ் குவிந்து போயுள்ள சொத்துக்கள் உலகின் முழு வருமானத்தில் நூற்றுக்கு 85 வீதத்தினால் உயர்ந்துள்ளது. 250 கோடி ஏழை மக்களுக்கு உரிய உலக வருமானத்தில் ஒரு பங்குக்கு சமமான அளவு 358 செல்வந்தர்களின் கைகளில் குவிந்து போய்க் கிடக்கின்றது எனக் கூறுவது ஆச்சரியத்துக்குரியது.ஆனால் அது உண்மையாகும். வறுமைக்குள் தள்ளப்படும் பொதுமக்களிடையே பெண்களும் சிறுவர்களும் மிகவும் படுமோசமான ஏழ்மைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். முதலாளித்துவ அமைப்பின் கீழான என்றும் சமம் செய்யமுடியாத இடைவெளி இட்டு நிரப்பமுடியாத அளவுக்கு ஆதாள பாதாளமாகியுள்ளது.

உலகில் தொழில் செய்யக் கூடிய சனத்தொகையில் நூற்றுக்கு 30 வீதம் அதாவது 100 கோடி மக்களுக்கு தொழில் இல்லை. இது 1930பதுகளின் பொருளாதார மந்த நிலையின் பின்னர் காணப்படும் படுமோசமான ஒரு நிலைமையாகும். ஒரு ஆண்டினுள் வேலையின்மைக்குள் தள்ளப்பட்டுள்ளோர் எண்ணிக்கை 180 மில்லியன்களாகும். இவர்கள் உழைப்புச் சந்தைக்குள் நுழைந்த போதிலும் வாழ்க்கையை ஓட்டுவதற்கு அவசியமான உழைப்புச் சக்தியை விற்பனை செய்ய வாய்ப்புக் கிட்டாதுள்ள கோடிக் கணக்கானவர்கள் ஆவர்.

இந்த மோசமான சமூக நிலைமையைப் பற்றி உலக தொழிலாளர் நிறுவனத்தின் (ILO) பணிப்பாளர் நாயகம் கூறியதாவது: “வறுமையினதும் சமத்துவமின்மையினதும் கைவிடப்படுவதனதும் அதிர்ச்சி தரும் அபிவிருத்தியானது முழு சமூக பின்னல்களையும் பிய்த்து எறியும் பதட்டநிலையைத் தோற்றுவிக்கின்றது ” என்றார். ஒரு ஏகாதிபத்திய பிரதிநிதி என்ற வகையில் அவர் உருவாகியுள்ள சமூக நெருக்கடியை உரியமுறையில் சுட்டிக்காட்டி அதனுள் உள்ளடங்கியுள்ள ஆபத்துக்களை சமிக்கை செய்துள்ளார்.

## நெருக்கடியை மூடிமறைப்போர்

இதுவும் கூட ஏகாதிபத்தியவாதிகளின் எச்சில் சாதத்துக்கு நாஊற ஊற வயிறளக்கும் - அன்றும் இன்றும் தீவிரவாதிகள் எனக் கூறிக்கொள்ளும் கைக்கூலிகளின் அறிக்கைகளில் இருந்து எவ்வளவு முரணானது ?

நளின் டி சில்வா மார்க்சிசத்தின் வறுமை என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டு அதில் கூறுவதாவது: ” மார்க்சிசத்தின்படி உலக முதலாளித்துவ அமைப்பு நெருக்கடிக்கு உள்ளாக வேண்டும். ஆனால் இன்று நெருக்கடிக்குள் சென்றிருப்பது முதலாளித்துவ அமைப்பைக் காட்டிலும் மார்க்சிசம் என்பது தெளிவாகி உள்ளது.“ அவர் இனவாதத்துக்கு தோள்கொடுத்துக் கொண்டு பிற்போக்கு பாசிச முகாம்களுக்குள் பாய்ந்து கொண்டுள்ள ஒரு பழைய தீவிரவாதியாவார்.

நவீன தீவிரவாதியான அஹிங்சக பெரேரே குத்துக்கரணத்துக்கும் பிற்போக்குக்கும் இரண்டாம் தரமானவர் அல்ல.அவரும் அத்தகைய இன்னும் பலரும் இணைந்து கொண்டுள்ள் தியச என்ற சஞ்சிகையின் 1996 செப்டம்பர்-அக்டோபர் இதழ் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு தாக்குதல் தொடுக்கும் வீணான முயற்சியில் ஈடுபட்டு அதில் அஹிங்சக பெரேரா பின்வருமாறு கூறுகின்றார்: “ எவ்வாறெனினும் ஒருபுறத்தில் முதலாளித்துவம் தேசியரீதியிலும் அனைத்துலக ரீதியிலும் பலம்பெற்றுள்ளது. மறுபுறத்தில் பாட்டாளிவர்க்க அனைத்துலகம் பலவீனம் கண்டுள்ளது. இந்நிலையின் கீழ் உருவாகியுள்ள யதார்த்தத்தினை ஊடுருவும் புதிய கோட்பாட்டு முன்னோக்கு அவசியமாகி உள்ளது.” அரச சார்பற்ற அமைப்புக்கள் (NGO) ஊடாக தமது சாக்குக்களுக்குள் கைக்கூலி வந்து விழும் வரை அவர்களுக்கு முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியைக் காண முடியாது. இந்தக் கடைகெட்ட சுயநலவாதிகள் யதார்த்தத்தினை ஊடுருவுவது உக்கிப்போன மரத்தினை ஊடுருவும் மரப்புழுவைப் போலாகும்.

அனைத்துலக ரீதியில் தொழிலாளி ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் பேரழிவு நிலைமையைப் பற்றிய புள்ளி விபரங்களை நாம் மேலே காட்டியுள்ளோம். இந்த நாசம் நிறைந்த நிலைமையானது இன்றுள்ள முதலாளித்துவ சமுதாய அமைப்பின் நெருக்கடி அல்லாது வேறென்ன? அது அப்படி அல்ல எனக் கூறுவோர் சீர்செய்ய முடியாத முதலாளித்துவ சார்பு சுயநலவாதிகள் மட்டுமே என நாம் சுட்டிக்காட்ட காரணம் அதுவே. சமூக சமத்துவமின்மை வளர்ச்சி காணக் காண உக்கிரம் அடையும் வர்க்கப் பதட்ட நிலைமையின் கீழ் முதலாளித்துவ அமைப்பின் பாதுகாப்புக்காகச் செய்யும் தமது சேவைக்குக் கிடைக்கும் அலவன்சு கூடும் எனவும் பொதுமக்களுக்கு என்னதான் அழிவு ஏற்பட்டாலும் தம்மால் தாங்கிக் கொள்ள முடியும் எனவும் அவர்கள் கணித்துள்ளார்கள்.

அஹிங்சக பெரேராவுக்கு இணங்க பலமடைந்துள்ள தேசிய முதலாளித்துவத்தின் நிலைமை என்ன? தற்கொலை செய்துகொள்வோர் எண்ணிக்கையில் இலங்கை உலகில் முதலாம் இடத்தில் உள்ளது என்பது மட்டும் அவரின் மதிப்பீட்டை குழிபறிந்து போகச் செய்ய போதுமானது. இந்த நாட்டில் ஒரு நாளைக்கு 22 பேர் தற்கொலை செய்து கொள்கின்றார்கள். சனத்தொகையில் ஒரு இலட்சத்துக்கு-ஆண்டொன்றுக்கு - 47 பேர் வீதம் 8000 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். கொழும்பு ஆட்சியின் கீழ் வராத பகுதிகளின் நிலைமை இந்த புள்ளிவிபரங்களுக்குள் அடங்க இல்லை.

முதலாளித்துவ சமூக அமைப்பின் நாசத்தினைச் சுட்டிக்காட்டும் இன்னொரு அம்சம் கொலைகளதும் குற்றங்களதும் அதிகரிப்பாகும். இலங்கையில் இன்று தினசரி 5 கொலைகள் இடம்பெறுகின்றன. மேலும் இது இனவாத யுத்தத்தின் கீழ் ஒரு நாளுக்கு டசின் கணக்கில் -கிழமைக்கு நூற்றுக்கணக்கில் இடம்பெறும் தமிழ்-சிங்கள மக்கள் படுகொலைகளுக்கு மேலதிகமாக இடம்பெறும் கொலைகளாகும். 1995 ஜூனில் இருந்து 1996 ஜூன் வரை அத்தகைய படுகொலைகள் 1270 பற்றி பொலிசுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியில் 143 பெண்கள் கற்பழிக்கப்பட்டதாக அறிக்கை செய்யப்பட்டிருந்தது. இலங்கையின் சமூகநிலைமையின் கீழ் கற்பழிப்பு பற்றிய முறைப்பாடுகள் குறைவானதெனக் கொண்டால் மகளிரின் மனித, ஜனநாயக உரிமை மீறல்கள் சகித்துக் கொள்ள முடியாத கட்டத்தை எட்டியுள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் 1995-96ம் ஆண்டில் பரந்த அளவிலான கொள்ளைகள் 2246 இடம்பெற்றுள்ளன. இது நாளொன்றுக்கு ஏழு என்ற வீதத்தில் இடம்பெற்றுள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்காக வாந்தி எடுக்கும் தியச சஞ்சிகை போன்றவற்றின் கைக்கூலிகளின்படி இவை எல்லாம் முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி ஆகாது.

வேறு சில புள்ளி விபரங்களையும் எடுத்துப் பார்ப்போம்.இலங்கையில் சிறையில் இருப்போர் எண்ணிக்கை 1988–93 என்ற ஐந்தாண்டுகளுள் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. 1988ல் 45515 ஆக இருந்த சிறைக் கைதிகள் தொகை 1993ல் 83990 ஆகியுள்ளது. தீவிரவாதிகள் தொடக்கம் புனித தேவாலயங்களின் உண்டியல் ஏந்துவோர் வரையிலான பல்வேறு வகையிலான பிற்போக்காளர்களும்

8ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# சோசலிச சமத்துவக் கட்சியின் ஸ்தாபிதம் ஒரு மாபெரும் வரலாற்று நடவடிக்கை...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய கல்வி முறையின் தவறு, ஒழுக்கக்கேடு, மத நம்பிக்கையின்மை போன்றவற்றின் தலையில் இவற்றுக்கான பழியினைக் கட்டி அடிப்பதன் மூலம் அவை முதலாளித்துவ சமூக அமைப்பின் பாரதூரமான நெருக்கடியின் வெளிப்பாடு என்பதை மூடிமுறைக்க முயற்சிக்கிறார்கள்.

முதலாளித்துவ அமைப்பினால் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் பகுதியினரின் வாழ்க்கைத்தரம் வெகுவேகமாக நாசம் கண்டு வருகின்றது. 1985ம் ஆண்டை அடிப்படை வருடமாகக் கொண்டு உணவு, உடுபுடவை விலைகள் 1995ல் முறையே நூற்றுக்கு 193 வீதத்தினாலும் 115 வீதத்தினாலும் அதிகரித்துள்ளன. இந்தப் பத்து ஆண்டுகளுள் எரிபொருள், மின்சாரக் கட்டணம் என்பன நூற்றுக்கு 155 வீதத்தினால் உயர்ந்துள்ளது. மக்களின் அன்றன்றாடைய வாழ்க்கைக்கு அவசியமான பொருட்களதும் சேவைகளதும் விலைகள் இந்த விதத்தில் துள்ளிப்பாய்ந்து அதிகரிப்பதானது வாழ்க்கைச் செலவு சுட்டெண்ணை எந்த விதத்தில் பாதித்துள்ளது? 1977ல் 203 ஆக இருந்த வாழ்க்கைச் செலவு சுட்டெண் 1994ல் யூ.என்.பி.ஆட்சியின் இறுதிக் காலத்தில் 1520 ஆக உயர்ந்தது. மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகக் கூறி ஆட்சியைக் கைப்பற்றிய பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் நிலைமை மேலும் மோசம் அடைந்துள்ளது. 1994 ஆகஸ்ட் தொடக்கம் 1996 ஜூன் வரை வாழ்க்கைச் செலவுப் புள்ளி மேலும் 459 புள்ளிகளால் அதிகரித்தது. யூ.என்.பி. அரசாங்கத்தின் 17 வருட கால ஆட்சியினுள் வாழ்க்கைச்செலவின் அதிகரிப்பு ஆண்டொன்றுக்கு 77 புள்ளிகளால் அதிகரித்து இருப்பின் அது பொதுஜன முன்னணி அரசாங்க காலத்தில் இப்போது ஆண்டொன்றுக்கு தலா 250க்கும் அதிகமான புள்ளிகளால் அதிகரித்துச் செல்கின்றது. சமீபத்தில் இடம்பெற்ற பாண் விலை உயர்வும் பெட்ரோல் விலை உயர்வும் சகல பொருட்களதும் விலையை அதிகரிக்க வைத்துள்ளன. இதன்மூலம் மக்களின் வாழ்க்கையைச் சகிக்க முடியாத ஒன்றாக்கியுள்ளன. தொழிலாளர்களதும் விவசாயிகளதும் இளைஞர்களதும் வீட்டுப் பெண்களதும் கிளர்ச்சியும் இந்த ஆண்டில் இடம்பெற்ற தோட்டத் தொழிலாளர் போராட்டங்களும் மின்சார தொழிலாளர் போராட்டங்களும் நிகழ்ச்சி நிரலில் சேர்ந்து கொண்டிருப்பது இத்தகைய ஒரு நிலையிலேயேயாகும். சோசலிச சமத்துவக் கட்சியை அமைக்கும் தீர்மானம் இந்த வர்க்கப் போராட்ட நிலைமைகளை தீர்க்க தரிசனமாகக் கண்டு அதற்கு அவசியமான புரட்சிகர முன்நோக்கினையும் தலைமையையும் வழங்கச் செய்யும் ஒரு தீர்மானமாகும்.

புள்ளிவிபரங்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டு போவதன் மூலம் இந்த அறிக்கையை தேவைக்கு அதிகமான ஒரு சுமையாக்க நான் விரும்பவில்லை. எனினும் இந்நாட்டில் நிலவும் நிலைமையின் மறுபக்கத்தைப் பற்றியும் சிறிது கூற வேண்டும். புள்ளிவிபரங்களைப் பற்றிக் கூற வேண்டியவையும் சில உள்ளன. அதாவது இன்றைய உலக முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி இனியும் ஊகங்களுக்கான ஒரு விடயம் அல்ல. அது மார்க்சிச விஞ்ஞானபூர்வமான விதிமுறைகளுக்கு ஊடாக பெறும் தர்க்கரீதியான முடிவுகளுடன் கட்டுப்பட்டு நின்றுவிடாது. ஆதாரத்துடன் கூடிய சகல புள்ளிவிபரங்கள் மூலம் நிரூபித்து மார்க்சிச முடிவுகளை உயிர்ப்புஷ்டியான விதத்தில் நிரூபிக்கத்தக்க ஒரு கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். மார்க்சிச கோட்பாட்டின் புரட்சிகர உயிர்ப்புஷ்டியானது இப்போது மக்கள் வாழ்க்கையை தாண்டிச் செல்கின்றது. புள்ளிவிபரங்கள் வெறும் அறிக்கைகளில் எழுதும் குறிப்புக்கள் அல்ல. மக்களின் வாழ்க்கையைத் தழுவிய உயிர்ப் புஷ்டியான வெளிப்பாடுகளாகும். புறநிலை புரட்சிகர நிலைமைகளின் சாராம்சங்களாகும்.

முதலாளித்துவ சமுதாயத்தினுள் தலைதூக்கியுள்ள மரண நெருக்கடியானது அதில் உயிர்வாழும் சகலரையும் தாக்குவது ஒரே விதத்தில் அல்ல. முதலாளி வர்க்கமும் கூட உயிர்புஷ்டியானதும் சுழற்சியானதுமான ஒரு சக்தியானதால் தனது சமூக பொருளாதார அமைப்பின் நெருக்கடியைத் தனது வர்க்கத்துக்கு வாய்ப்பும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு நாசமும் கொணர்கின்றதுமான விதத்தில் தீர்த்துக்கொள்ள அது செயற்படுகின்றது. சமூக சமத்துவமின்மையை உக்கிரமாக்குவது அதன் ஒரு முறையாகும். சமத்துவமின்மைக்கு எதிராக போராடுபவர்களை இரத்தத்தில் மூழ்கடிக்கும் பொருட்டு ஆட்சிமுறைகளில் இராணுவமயத்தையும் எதிர்ப்புரட்சி சிவில் யுத்தத்தையும் உலக யுத்தத்தையும் தொடுப்பது அதனுடன் இணைந்த ஒரு அரசியல் விதிமுறையாகும்.

இலங்கையில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை தவிடு பொடியாக்கும் முதலாளித்துவ ஆட்சியானது முதலாளிகளின் கைகளில் இலாபம் மலையெனக் குவியும் விதத்தில் நிலைமையை எங்ஙனம் உருவாக்கியுள்ளது? இந்நாட்டில் முதலீடு செய்யும் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகள் தமது இலாபங்களைப் பற்றிய கணக்கு வழக்குகளைத் தன்னும் சமர்ப்பிக்கவும் கட்டுப்பட்டவர்களில்லை. ஆதலால் அவர்களின் பொதிகளில் குவியும் இலாபத்தினை மதிப்பிடவும் வழியில்லாது போகின்றது. எனினும் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் மூலதனத்துடன் இணைந்து இந்நாட்டில் பதிவுசெய்து கொண்டுள்ள நிறுவனங்களாகத் தொழிற்படும் கம்பனிகள் திரட்டும் இலாபங்களைக் கொண்டு முதலாளிகளதும் ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளதும் கைகளில் குவியும் சொத்துக்களின் அளவை நினைத்துப் பார்க்க முடியும்.

வங்கிகள், பினான்ஸ் கம்பனிகள் போன்ற வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் இலாபத்தைப் பொதிகட்டுவதில் முன்னணியில் நின்றுகொண்டுள்ளன. கொமர்ஷல் வங்கி கடந்த ஆண்டில் பெற்ற இலாபம் 368 மில்லியன் ரூபாக்களாகும். அது வரி செலுத்தியதன் பின்னர் உள்ள இலாபமாகும். அத்தோடு அது கடந்த ஆண்டைக் காட்டிலும் நூற்றுக்கு 132 வீதம் அதிகமானதாகும். பொதுஜன முன்னணி , வங்கியாளர்களுக்கு முன்னரைக் காட்டிலும் வாய்ப்பான ஒரு ஆட்சியை நிறுவியுள்ளது

மேர்ச்சன்ட் வங்கி இந்த ஆண்டின் ஜூலை-செப்டம்பர் மாதங்களுக்கு (காலாண்டுக்கு) 24.9 மில்லியன்களை இலாபமாகப் பெற்றுள்ளது.

சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி இந்த ஆண்டில் தனது கொடுக்கல் வாங்கல்களை 4300 மில்லியன்களாக 20 வீதத்தினால் அதிகரித்ததன் மூலம் 1010 மில்லியன்களை வட்டி இலாபமாகப் பெற்றுள்ளது.

மஜஸ்டிக் சிற்றி வர்த்தகத் தொகுதியினர் இந்த ஆண்டில் இலாபத்தினை நூற்றுக்கு 112.7வீதத்தினால் அதிகரித்துள்ளனர். 1995ல் 20619 மில்லியன்களை இலாபமாகப் பெற்ற அது 1996ல் 43747 மில்லியன்களைத் திரட்டியுள்ளது.

ரிச்சார்ட் பீரிஸ் கம்பனி 1995ல் 114 மில்லியன்களைப் பெற்றுள்ளது. 1996ல் இதனை 115 மில்லியன்களாக அதிகரித்துக் கொண்டுள்ளது. 1995ல் 30 மில்லியன் ரூபாக்களை வரியாகச் செலுத்திய இக்கம்பனி இந்த ஆண்டில் இலாபத்தை அதிகரித்துக் கொண்டுள்ள போதிலும் வரியாக 25 மில்லியன்களை மட்டுமே செலுத்தியுள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆண்டுதோறும் முதலாளிகளுக்கு வரிச் சலுகைகளை அதிகரித்துக் கொண்டு, அதற்கு ஈடுகொடுக்கும் விதத்தில் பொதுமக்கள் மீது மேலும் சுமைகளைத் திணித்து வருகின்றது என்பது இதன்மூலம் தெளிவாகியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களை படுமோசமான வறுமைக்குள் தள்ளியுள்ள அதே வேளையில் தோட்டக் கம்பனிகள் பெருமளவிலான இலாபத்தினை சுருட்டிக் கொண்டுள்ளார்கள். கடந்த அக்டோபர் 14ம் திகதி எலிட பிலிப்ஸ் ரியர்ச் கம்பனி வெளியிட்ட அறிக்கையின்படி அகலவத்தை தோட்டக் கம்பனி 42.58 மில்லியன் ரூபாய்களும் களனிவலி தோட்டம் 55.79மில்லியன் ரூபாய்களும் ஹொரணை தோட்டம் 39.37 மில்லியன்களும் கொட்டகலை தோட்டம் 67.66 மில்லியன்களும் பொகவந்தலாவைத் தோட்டம் 89.44 மில்லியன்களும் இலாபமாகப் பெற்றுள்ளன. இந்நிலையிலேயே பொதுஜன முன்னணி அமைச்சர் தொண்டமானின் கீழ் உள்ள இ.தொ.கா.கடந்த ஜூன் மாதம் கைச்சாத்திட்ட கூட்டு ஒப்பந்தத்தின்படி தோட்டத் தொழிலாளர்களின் நாட் சம்பளம் ரூபா.1.24 ஆல் வெட்டப்பட்டுள்ளது .

## புரட்சிகர சமூக குமுறல்களின் நிலைமை

நாட்டின் ஜனத்தொகையில் சுமார் அரைவாசிப் பங்கினர் - அதாவது 70 இலட்சத்தினர் வறுமைக் கொட்டுக்குக் கீழே மாதத்துக்கு ரூபா.500க்கும் குறைவான வருமானத்தைப் பெற்றுக்கொண்டு பட்டினிநிலையில் வாழ்ந்து கொண்டுள்ளனர். இதே நிலையில் நாட்டின் பெரும் கம்பனிகள் பெரும் இலாபத்தை ஈட்டிக்கொண்டுள்ளனர். எனினும் அந்த இலாபம் கூட பூகோளரீதியான மூலதனத்தின் அளவுகணக்கற்ற கோரிக்கைகளுக்கு ஈடுகொடுப்பதாக இல்லை. ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். இலங்கையில் தொழிற்படும் காப்புறுதிக் கம்பனிகளும் வங்கிகளும் ட்ரான்ஸ்நஷனல் நிதி அதிகாரிகளிடம் மீள் காப்புறுதி செய்யும்படி நெருக்கப்பட்டுள்ளன. அங்ஙனம் செய்யாமல் தமது நிறுவனங்களை நடாத்திச்செல்ல முடியாத ஒரு நிலைமைக்கு அவை தள்ளப்பட்டுள்ளன. அந்த மீள் காப்புறுதிக் கட்டணமாக கம்பனிகள் பெறும் இலாபங்களின் பெரும் பங்கு அந்த ட்ரான்ஸ்நஷனல் கைகளுக்கு மாறுகின்றது. ஏனைய உற்பத்தி, சேவைத் துறைகளைப் பொறுத்த மட்டிலும் நிலைமை இதுவே. இலங்கை வர்த்தக, கைத்தொழில் சபையின் தலைவர் பட்ரிக் அமரசிங்க சட்டங்களை அகற்றும், தனியார் நிறுவனங்களினதும் வேலைகளிலும் பூகோளரீதியான சந்தைப் போட்டியுள்ள இன்றைய யுகத்தில் இந்த யதார்த்தத்தில் இருந்து விலகி இருக்க நாம் முடிவுசெய்தால் கைத்தொழில் துறை வரவர செயலிழந்து, இறுதியில் ஸ்தம்பித்துபோகும்" எனச் சொல்லும்போது அவர் கூறுவது ட்ரான்ஸ்நஷனலுடன் இணைந்து போகாத தேசிய மூலதனத்துக்கு இனியும் இடம்கிடையாது என்பதாகும். இறுதியில் தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியில் இருந்து உறிஞ்சிக்கொள்ளும் உபரி பெறுமானம் - இலாபம் முதலீட்டு முழு மூலதனத்தின் பங்கிற்கு இணங்கவாகும். இலாபத்தில் பெரும் பங்கு பெரும் மூலதன முதலீட்டாளர்களுக்கேயாகும். ஒவ்வொரு கம்பனியாக எடுத்துப் பார்ப்பின் பெரும் இலாபம் பெறும் போதும் முதலாளிகள் மேலும் மேலும் வரிச்சலுகைகளும் தொழிலாளர்களைச் சுரண்டும் காட்டுமிராண்டி நிலைமைகளும் கேட்பதற்குக் காரணம் அதுவேயாகும். இதனால் தான் அந்தந்த கம்பனிகளின் இலாபங்கள் உயர்ந்தால் அதில் திருப்தி கண்டு, புரட்சிகர சமூக அதிர்ச்சியினைத் தவிர்த்துக் கொள்ளும் வழி முதலாளிகளுக்கும் அவர்களின் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் கிடையாது. உலக முதலாளித்துவ அமைப்பு வீழ்ச்சி கண்டுள்ளது என நாம் கூறக் காரணம் தத்தமது இலாபப் பங்கினை காக்கும் பொருட்டு ட்ரான்ஸ் நஷனல்கள் இடையேயும் யுத்தம் வெடிக்கும் போட்டி வெடித்துள்ளதைக் காட்டவேயாகும்.

அரசாங்கத் திணைக்களங்களையும் கூட்டுத்தாபனங்களையும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு கையளிப்பதன் மூலம் இடம்பெறும் தனியார்மயமாக்கம் அவற்றில் தொழில்புரியும் தொழிலாளர் வர்க்கப் பகுதியினருக்கும் அவ்வாறே பொதுவில் பொதுஜனங்களுக்கும் ஒரேயடியாகத் தொடுக்கும் தாக்குதலாகும்.முதலாளித்துவ அமைப்பின் கீழ் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தொழில்களை அழிப்பதானது தற்சமயம் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும் அல்ல எதிர்காலச் சந்ததியினருக்கும் வாழ்க்கைக்கான மார்க்கத்தினை இல்லாது செய்வதாகும். முதலாளித்துவ அமைப்பின் கீழ் தொழில்நுட்பம் முதலாளித்துவ வர்த்தகர்களின் இலாபத்தினை உச்சமாக்கிக் கொள்வதற்கான ஒரு ஆயுதமாகும்: பொதுமக்களின் அவசியத்துக்கா பயன்படுத்தப்படுவது அல்ல .

அரசாங்கத் திணைக்களங்களு கூட்டுத்தாபனங்களும் அந்தந்த உற்பத்தி சேவைத் துறைகளில் ஏகபோக கொண்டுள்ளதால் அவற்றை தட்டிக்கொள்ளும் முதலாளிகள் நினைத் விதத்தில் உயர்ந்த விலைகளை நிர்ணயிக்கவு மக்களைச் சுரண்டவும் இடம் உள்ளது அளவுகணக்கற்ற வரிச்சலுகைகளின் கீ இடம்பெறும் இந்தக் கொள்ளையினா பொதுமக்களின் உயிர்வாழ்க்கைக் அத்தியாவசியமான உதவிமானியங்களு சேவை விநியோகங்களுக்கு உள்ள நிதியு வெட்டப்பட்டுப் போகின்றது. எரிவாயுவை தனது ஏகபோகத்தினுள் கொணர்ந்த ஷெ கம்பனி, அரசாங்கத்துக்கு சவால் செய்யு விதத்தில் விலையை நினைத்த விதத்தில் உயர்த்தியதன் மூலம் இது நன்கு தெளிவாகியது இந்த விலை உயர்வை நியாயப்படுத் அக்டோபர் 18ம் திகதி தமது பங்குதாரர்க முன்னிலையில் பேசிய "மூலதன அபிவிருத்தி முதலீட்டு கம்பனி"யின் தலைவர் டெனிச றொட்ரிக்கோ கூறியதாவது : "அ நிறுவனங்களை உயர்ந்த விலைக்கு விற்பது ஆ. தொழிலாளர்களை வைத்துக் கொண்டிருக் நெருக்குவதனாலும் தனியார் கம்பனிக பொருட்களின் விலைகளை உயர்த் நேரிடுகின்றது என்றுள்ளார். றொட்ரிக்கே மேலும் கூறியதாவது: " இதனால் தனியார்மயத்தின் நிலைப்பாட்டுக்கு அடிப்படையில் எதிரான சந்தர்ப்பவாதக் குழுக்கள் தாம் சரியென நிரூபிப்பதற்கும் மேலும் செய்யும் தனியார்மயத்துக்கு எதிராக பிரச்சாரம் செய்யவும் நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது."

குழுக்கள் என பன்மையில் குறிப்பிடும் அளவுக்கு "தனியார்மய நிலைப்பாட்டை அடிப்படையில் எதிர்க்கும் "ஒரு தொகை குழுக்கள் இந்நாட்டிலோ அல்லது அனைத்துலக ரீதியிலோ கிடையாது. குழு என்ற பெயரை பயன்படுத்துவதனால் உள்ளதோ ஒரே குழுவேயாகும். அது உலக சோசலிசத்துக்காகப் போராடும் குழுவாகும். இந்நாட்டில் இருப்பது நான்காம் அகிலத்தின் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம். இனி சோசலிச சமத்துவக் கட்சி. சோசலிசத்தின் பேரில் தோன்றி வந்த ஏனைய சகல அமைப்புக்களும் தனியார்மயத்தை அடிப்படையில் எதிர்ப்பதைக் கைவிட்டு , பொருளாதார, அரசியல் நெருக்கடிக்கான தீர்வாக தனியார்மயத்தை அங்கீகரித்துக் கொண்டுள்ளன. அதனால் றொட்ரிகோ வெடி தீர்ப்பதற்கான இலக்காக்கிக் கொண்டுள்ளது எமது அமைப்புக்கு எதிராகவேயாகும். இத்தகைய தாக்குதல் எதிர்காலத்தில் உக்கிரமாகும். நாம் அத்தகைய தாக்குதல்களை ஏற்றுக் கொள்வோம். கிடைத்துள்ள அவகாசத்தை கூடியமட்டும் பயன்படுத்தி , தொழிலாளர்களிடமிருந்து சுரண்டிக் கொண்ட உபரி பெறுமானத்தில் இருந்து நிர்ணயம் செய்யப்பட்ட உற்பத்தி, சேவை துறைகள் அவை உரித்தாக வேண்டிய தொழிலாளர் வர்க்கத்தின் கைகளுக்குக் கிடைப்பதற்கு போராடுவோம். அது சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு முதலாளித்துவ அமைப்பினைத் தூக்கிவீசும் போராட்டத்தின் உள்ளார்ந்த பாகமாகும். காட்டுமிராண்டித்தனத்தை கோலோச்ச வைக்க செயற்படும் முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக முதலாளித்துவத்தின் மிக அடிப்படையான அவசியங்களை இட்டுநிரப்பும் பொருட்டு போராடுவதானது றொட்ரிகோவின்படி சந்தர்ப்பவாதமாகும். அதாவது , பட்டம் வழங்குவதாகும். முதலாளித்துவச் சார்பு வாய்வீச்சுக்காரர்களின் சூப்புக்கு இடமளித்து நாம் அதை புறக்கணிப்போம்.

முதலாளித்துவ பொருளாதார அத்திவாரம் சரிந்து கொட்டுகையில் அதன் வெளிப்பாடுகள் அரசியல், சமூக சிந்தனை அமைப்பில் நிச்சயம் வெளிப்பாடாகுவதுண்டு. எனினும் இந்த வெளிப்பாடு ஒன்றுக்கு ஒன்று வீதாசாரத்தில் நூல்நூற்றது போல் காணக்கூடியதாக இருக்கும் என்பது மார்க்சிசம் அல்ல . இந்த உள்ளார்ந்த மேல்தட்டு அமைப்புக்கு இடையேயான உறவு இயக்கவியல் சார்ந்தது.

படிப்பகம்

www.padippakam.com



மார்க்சிசத்தினை திரித்துக் காட்டும் பொருட்டு அதற்கு இயந்திரரீதியான சடவாத உருவத்தினைக் கற்பிக்கும் பிற்போக்கு முதலாளித்துவ பரிந்துரையாளர்கள் இந்த உறவினை அதன் இயக்கவியல் பண்பில் இருந்து பிரித்துக் காட்டுகின்றார்கள்.

ஒருமுறை அடிவாங்கியவர் இருமுறை திகைப்படைவர் என ஒரு பழமொழி உள்ளது. இருமுறை அடிவாங்கியோரைப் பற்றிய பழமொழி எத்தகையதாக இருக்கும்? 1970-77 முதலாளித்துவ சிறீலங்கா கூட்டரசாங்கத்துடன் பிணைக்கப்பட்டு அடிவாங்கிய தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் இரண்டாம் தடவையும் 1994ல் பழைய கூட்டரசாங்கத்தையும் தாண்டிச் செல்லும் மிலேச்ச முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தினுள் தள்ளப்பட்டுள்ளனர். பொதுஜன முன்னணி ஆட்சிக்கு வந்ததும் பியகமையில் தொழிலாளர்களுக்கும் இரணவிலவில் மீனவர்களுக்கும் துப்பாக்கிச் சூடு நடந்தது. அத்துடன் நின்றுவிடாது இனவாத யுத்தத்தினை உக்கிரமாக்கி அந்த கல் உருளையின் கீழ் தொழிலாளர் கோரிக்கைகள் போட்டு நசுக்கப்பட்டன. இந்தத் திகைப்பில் இருந்து விடுபட மக்கள் சிறிது காலம் எடுப்பது தவிர்க்க முடியாதது. எனினும் அவர்கள் அந்த திகைப்பில் இருந்து விடுபட்டாக வேண்டும். விடுபடுவது நிச்சயம்.

இங்குதான் புரட்சிக் கட்சியின் தலையீடு தீர்க்கமாகின்றது. புரட்சிகர முன்னணிப் படையணியானது எதிர்வரும் வர்க்கப் போராட்டத்தில் புரட்சிகர நிலைமையை இட்டுநிரப்பி, அதற்கு அவசியமான முன்நோக்கினையும் வேலைத்திட்டத்தினையும் காரியாளர்களையும் கொண்டிருக்க வேண்டும். முன்னைய கழகத்தைச் சோசலிச சமத்துவக் கட்சியாகப் பரிணாமம் செய்கையில் நான்காம் அகிலத்தின் நாம் செய்வது சரியாக அதையேயாகும்.

## மார்க்சிச தீர்க்கதரிசனம்

மார்க்சிசம் விஞ்ஞானபூர்வமான சமூக ஆய்வினில் ஈடுபட்டுள்ளதால் சமூக வர்க்கங்களின் அமைவுகள், சார்புகளையிட்டு தீர்க்கதரிசன சக்தியைக் கொண்டுள்ளது.இதனாலேயே மார்க்சிச இயக்கம் தனது முன்னோக்கிலும் வேலைத்திட்டத்திலும் அமைப்பிலும் ஏற்படுத்திக் கொள்ளும் மாற்றங்கள் பிரமாண்டமான சமூக மாற்றங்களை முன்னோடியே பிரதிபலிக்கின்றது.இந்த நூற்றாண்டை மட்டும் எடுத்துப் பார்த்தாலும் சகல வரலாற்றுத் திருப்புமுனைகளும் இந்த அம்சத்தை பிரதிபலித்துள்ளன எனக் கூற முடியும்.1903ல் ரூஷ்ய சமூக ஜனநாயகக் கட்சியின் உள்ளே லெனினால் போல்ஷிவிக் குழு அமைக்கப்பட்டதன் மூலம் 1905 ரூஷ்ய புரட்சி முன்னனுமானிக்கப்பட்டதைப் போல 1912ல் போல்ஷிவிக் குழு தனிக் கட்சியாக பிரகடனம் செய்து கொண்டதன் மூலம் சமூக ஜனநாயகம் 1914 உலக யுத்தத்தின் மத்தியில் இழைத்த மாபெரும் காட்டிக்கொடுப்பும் 1917 புரட்சியில் இரண்டு முகாம்கள் உருவானதும் முன்னனுமானிக்கப்பட இல்லை எனக் கூற முடியுமா?

இரண்டாம் உலக யுத்தத்துக்கு முன்னோடி வருடத்தில் (1938) லியோன் ட்ரொட்ஸ்கியினால் நான்காம் அகிலம் அமைக்கப்பட்டமையும் இத்தகைய ஒரு தீர்க்கமான திருப்புமுனையாகும். ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு எதிராக தோன்றி புரட்சிகர மக்கள் கிளர்ச்சி 1953ல் ஜேர்மனியிலும் 1956ல் ஹங்கேரியிலும் வெடித்தமை 1953ல் பப்லோவாதத்துக்கு எதிராக அனைத்துலகக் குழுவைக் கட்டி எழுப்புவதன் மூலம் முன்னனுமானிக்கப் பட இல்லலையா? 1985ல் அனைத்துலகக் குழு பிரிதநனிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஒடுகாலிகளிலிருந்தும் அவர்களின் ஆதரவாளர்களிலிருந்தும் பிளவுபட்டது யுத்தத்தின் பின்னைய உலக அமைப்பினதும் பழைய இடதுசாரி அமைப்புக்களின் ஸ்தம்பிதத்தினை முன்னனுமானித்தது என்றால் அனைத்துலக குழுவின் கிளைகள் புரட்சிக் கட்சியாக ஸ்தாபிதம் செய்ய எடுக்கும் இந்த தீர்மானம் உலக ரீதியில் சமூக புரட்சிகர நடவடிக்கைகளை முன் அனுமானித்துச் செய்யும் ஒரு தீர்மானமாகும்.அத்தகைய ஒரு தொகை எழுச்சிக்கு அத்தியாவசியமான புரட்சிகர முன்நோக்கையும் தலைமையையும் வழங்க அனைத்துலகக் குழுவுக்கு உள்ள வல்லலமையும் தியாகமும் அத்தீர்மானத்தின் பின்னணியில் இருந்து கொண்டுள்ளது.

இந்த சமூக அவசியம் பெரிதும் உக்கிரமாகத் தோன்றக் காரணம் இடதுசாரிக் கூப்பாடுகளாலும் தீவிரவாத சுலோகங்களினாலும் வாய்களை நிரப்பிக் கொண்டு வந்த கடந்த காலத்தின் திரிபுவாதிகளின் அவநம்பிக்கைவாதம் இன்றைய கட்டத்தில் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதேயாகும்.மக்கள் இயக்கத்துடன் இணைந்து கொள்ளும் பேரில் செயற்பட்டு வந்த இவர்கள் மக்களிடையே அவநம்பிக்கையை விதைப்பதிலும் முதலாளித்துவ அமைப்புக்கு பதிலீடு கிடையாது என சத்தியம் செய்வதிலும் முன்னணியில் உள்ளனர்.

ஜேர்மனியில் பப்லோவாத அமைப்பு சமீபத்தில் முன்வைத்த "முன்நோக்கு" இதற்கு ஒரு சாட்சியாகும். அதை முன்நோக்கு என்பதைவிட ஒப்புதல் வாக்குமூலம் என்பதே

(10ம் பக்கம் பார்க்க)

# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தேசிய மாநாட்டுக்கு அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியின் நல்வாழ்த்துக்கள்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அவுஸ்திரேலியப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இந்த வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த தேசிய மாநாட்டுக்கு தனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. தங்களின் முன்னுள்ள பு.க.க.வை ஒரு புட்சிக் கட்சியாகப் பரிணாமம் செய்யும் முன்நோக்கும் இந்த வார இறுதியில் நீங்கள் நடாத்தும் கலந்துரையாடல்களும் எடுக்கும் தீர்மானங்களும் பொதுவில் அனைத்துலகக் குழு சம்பந்தமாகவும் இலங்கையின் உள்ளும் பிராந்தியம் பூராவும் அனைத்துலகத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களைப் பொறுத்தமட்டிலும் ஆழமான அர்த்தம் நிறைந்தது.

மாநாடு இடம்பெறும் நிலைமைகள் தொழிலாளர் வர்க்கம் முகம் கொடுக்கும் அரசியல் நெருக்கடியின் பரிணாமத்தையும் சுய அவசியங்களைக் காக்கவும் அபிவிருத்தி செய்யவும் தொழிலாளர் வர்க்கம் தனது அரசியல் கட்சியைக் கட்டி எழுப்புவதன் திடீர் அவசியத்தை சுட்டிக்காட்டிக் கொண்டுள்ளது. ஆட்சிக்கு வந்த இரண்டு ஆண்டுகளின் பின்னர் பொதுஜன முன்னணி அரசாங்கம் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிராக படுகொலை யுத்தத்தினை நடாத்துவதன் மூலமும் தெற்கில் தொழிலாளர் வர்க்கத்தையும் ஏழை விவசாயிகளையும் சுரண்டுவதைத் தீவிரமாக்குவதன் மூலமும் அது அனைத்துலக மூலதனத்தின் காட்டுமிராண்டி ஆயுதமேயன்றி வேறொன்றும் அல்ல என்பதை நிரூபித்துக்கொண்டுள்ளது. அரசாங்கத்தினால் தோழர். இராஜ்குமாரின் கைதை தடுத்துவைப்பும் சித்திரவதையும் முதலாவதாக அரசாங்கத்தின் "ஜனநாயக" நடிப்புக்களின் மோசடியையும் இரண்டாவதாக, சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ, இ.தொ.கா. துரோகிகளின் முண்டுகோலில் எந்தளவுக்கு நின்றுகொண்டுள்ளது என்பதையும் மூன்றாவதாக, பு.க.க.வினால் முன்வைக்கப்படும் சோசலிச பதிலீட்டையிட்டு அது எவ்வளவுக்கு பீதி கொண்டுள்ளது என்பதையும் அம்பலமாக்கியுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் தீர்க்கமான அனுபவங்களுக்கு பூரண உள்ளடக்கம் இருந்து கொண்டுள்ளது. அதாவது தேசியவாத, சீர்திருத்தவாத முன்நோக்குகளை அடிப்படையாகக் கொண்ட சகல பழைய தொழிலாளர் அமைப்புக்களதும் வீழ்ச்சியும் ஏகாதிபத்தியத்தின் திட்டவட்டமான சகாக்களாக அந்த அமைப்புக்கள் மாறிக் கொண்டமையுமாகும்.

இது சகல நாடுகளின் உள்ளும் எமது நடவடிக்கைகள் தொடர்பாக ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தும். ஏற்கனவே உருவாகி உள்ள பிரமாண்டமான சமூக, அரசியல் குமுறல்கள் இந்தப் பழைய அமைப்புக்களின் புனர்வாழ்வுக்கு இடமளிக்கா. இந்தக் குமுறல்கள் பழைய அமைப்புக்களில் இருந்து சுயாதீனமாகவும் பெரிதும் அவற்றுக்கு எதிராகவும் வளர்ச்சி பெறும். எமது லீக்குகளை கட்சிகளாகப் பரிணாமம் செய்வது தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டுவதையும் தொழிலாளர் வர்க்கத்துக்கு தலைமை வழங்குவதையும் அதில் இருந்து தோன்றும் சகல அரசியல், கோட்பாட்டு, நடைமுறை சவால்களுக்கும் போராடும் பொறுப்புக்களுக்கும் நாம் தோள் கொடுக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்வதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இந்தச் சவால்களுக்கு எமது உலக இயக்கம் காட்டிய கூட்டு அக்கறையை 1985-86 பிளவின் அர்த்தபுஷ்டி சுட்டிக் காட்டுகின்றது. தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தேசிய சந்தர்ப்பவாதிகளைத் தோற்கடித்துப் பெற்றுக்கொண்ட வெற்றி, அனைத்துலகக் குழுவின் முழு புதிய சகாப்தத்தின் உதயத்தை ஆரம்பித்துவைத்தது.இந்தப் பிளவினால் கடந்த 10 ஆண்டுகள் பூராவும் வளர்ச்சி கண்டதும் பொது அனைத்துலக வேலைத்திட்டம், முன்நோக்கினை தெளிவுபடுத்துவதனுள் உச்சக் கட்டத்தினை அடைந்ததும் முன்னொரு போதும் இல்லாததுமான ஒத்துழைப்புக்கான பாதையைத் திறந்து வைத்தது.


1938ல் நான்காம் அகிலம் அமைக்கப்பட்டதில் இருந்து தயாராகி வந்தது சரியாக இந்தக் காலகட்டத்துக்காகவேயாகும். சந்தர்ப்பவாதத்தின் சகல வடிவங்களுக்கும் எதிரான சமரசம் அற்ற போராட்டத்தினுள் தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத அடிப்படைக் கொள்கைகளை உறுதியாகக் காக்கும் பதாகையைக் கொண்டதும் அடிப்படையானதுமான கட்சியானால் மட்டுமே இன்று தொழிலாளர் வர்க்கத்தின் மிகவும் அடிப்படையான உரிமைகளையும் நிலைமைகளையும் பேணிக்காக்க முடியும்.

கடந்த சில மாதங்களாக அவுஸ்திரேலியாவினுள் எமது அனுபவம் சோசலிச சமத்துவக் கட்சியை நிறுவும் தீர்மானத்தின் பிழையற்ற தன்மையை மட்டுமல்ல பொருத்தமான காலத்தையும் கூட ஊர்ஜிதம் செய்துள்ளது.

எமது தேசிய மாநாட்டின் ஒரு சில கிழமைகளின் பின்னர் 5000 க்கும் அதிகமான தொழிலாளர்கள் லிபரல் அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்ட வெட்டுக்களுக்கு எதிரான தமது எதிர்ப்பைக் காட்டிக்கொள்ளும் பொருட்டு ஏ.சீ.ரீ.யூ. , தொழிற்கட்சி அதிகாரத்துவங்களின் கட்டளைகளை கணக்கெடுக்காது கன்பரா நகரப் பாராளுமன்ற கட்டிடத்தினுள் புகுந்து கொண்டனர்.

சகல தொழிற்கட்சி அரசியல்வாதிகளாலும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களாலும் அப்பட்டமாக கண்டனம் செய்யப்பட்ட இச்சம்பவம் தொழில், சம்பளம், சௌக்கிய, கல்வி, பொது வசதிகள், நலன்புரி சேவை அமைப்புக்கு எதிராக தொடுக்கப்படும் கொடிய தாக்குதல்களுக்கு எதிராக-உத்தியோகபூர்வமான அங்கீகாரம் பெற்ற அரசியல் சபைகளுக்குப் புறத்தே அபிவிருத்திகாணும்- பரந்த சமூக இயக்கம் எழுச்சி காண்பதை அம்பலமாக்கியது.

இந்தச் சமூக இயக்கங்கள் தமது எதிரில் தோற்றுவிக்கும் வளர்ச்சி காணச் செய்யும் ஆபத்துப் பற்றிய பீதியினால் அரசாங்கமும் பொதுஜனத் தொடர்புச் சாதனங்களும் இனவாத அச்சாறுகளையும் புலம் பெயர்ந்தோருக்கு எதிரான கூச்சல்களையும் கட்டவிழ்த்துவிடுவதிலும் ஊக்குவிப்பதிலும் ஈடுபட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. இது நனவான விதத்தில் தொடுக்கப்பட்டுள்ளதற்குக் காரணம் இலாபம் கறக்கும் அமைப்பினுள்ளே இருந்துவரும் சமூக சமத்துவமின்மையின் நிஜ மூலங்களில் இருந்து கவனத்தை வேறு திசைக்குத் திருப்புவதற்கேயாகும்.




அரசியல் இடைவெளி பரந்து வருகின்றது.சகல தேர்தல்களுடனும் தொழிலாளர் வர்க்கத்தினுள் தொழிற்கட்சிக்கான ஆதரவு முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சி காண்பதோடு தொழிற்சங்கங்கள் உலக ரீதியில் அப்பட்டமான எதிர்ப்புடனும் வெறுப்புடனும் நோக்கப்படுகின்றன.

சோசலிச சமத்துவக் கட்சியை தொடுப்பது தொழிலாளர்களதும் இளைஞர்களதும் ஒரு பகுதியினரிடையே தீர்க்கமான அக்கறையையும் எல்லாவற்றுக்கும் மேலாக உச்சமான வரவேற்பையும் வெற்றி கொண்டுள்ளது. நாம் எமது முன்நோக்கு பிரேரணையினுள் சுட்டிக்காட்டியுள்ளவாறு "சோசலிச சமத்துவம்" என்ற வார்த்தை தெளிவுபடுத்துவது போல் சோசலிசமும் சமூக சமத்துவமும் நாகரிகம் நிறைந்ததும் பயனுள்ள வாழ்க்கைக்காக சகல மக்களுக்கும் உள்ள உரிமையை அடிப்படையாகக் கொண்டு -நீதியான சமூகத்துக்கான தொழிலாளர் வர்க்கத்தின் மிக அடிப்படை ஊக்கிகளுக்கும் இடையேயான தொடர்பாகும்.

மிகவும் நனவான தட்டினர் இந்தக் கட்சியை நிஜ பதிலீடாகக் கணிக்கத் தொடங்கியுள்ளனர். தினமும் வரும் புதிய விசாரணைகளும், விண்ணப்பங்களும், அக்கறையும் இதைச் சுட்டிக் காட்டிக் கொண்டுள்ளது. அவ்வாறே கலந்துரையாடல்கள், கூட்டங்கள், தலைமீட்டுகள் போராட்டங்களுள் தலையீட்டுக்கான வாய்ப்புக்களையும் கொணர்ந்துள்ளது.

சோசலிச அடிப்படைக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் வர்க்கத்தின் புதிய வெகுஜன கட்சியைக் கட்டியெழுப்பப் புதிய புறநிலை நிலைமைகள் இருந்து கொண்டுள்ளன என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. வடிம் றொகோவினின் விரிவுரை சுற்றுலாவின் போது நாம் இதன் மற்றொரு வெளிப்பாட்டைக் கண்டோம். மார்க்சிசம் இறந்துவிட்டதாகக் கூறிக்கொண்ட கூப்பாடுகளுக்கு எதிராக எமது பிரச்சாரம் சோவியத் யூனியனுள் நடந்தது என்ன என்பது பற்றிய உண்மையைக் கண்டறிவதில் அந்த வார்த்தைக்கு உரிய விதத்தில் ஆயிரக் கணக்கான மாணவர்கள், தொழிலாளர்கள், தொழில்சார் மக்கள் பக்கத்தில் இருந்து வரும் ஆழமான அக்கறையை எடுத்துக்காட்டியது.

1930பதுகளின் காலப்பகுதிச் சம்பவங்கள் பற்றிய இந்த அக்கறை உண்மையில் இன்றைய அவசியங்களாலேயே தூண்டப்பட்டது என நாம் கலந்துரையாடினோம். இன்றுள்ள குழப்பநிலையில் இருந்து விடுபடுவதற்கான எதிர்கால வழி உண்டா? சோசலிசம் யதார்த்தம் ஆகுமா? சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் படிப்பினை என்ன?

இன்று தீர்க்கமானதாக இருப்பது, பிரமாண்டமான சக்தியை நிறைவேற்றி வைக்க நாம் ஆற்றும் பணியாகும். நாம் ஆற்றும் ஆரம்பிப்பாகும்.நாம் இப்போது எமது பக்கம் திரும்பும் புதிய தட்டினரைப் முறைப்படியாகப் பயிற்ற வேண்டும். அவர்களைக் கட்சிக்குள் ஈர்க்கவும், ஒன்றிணைக்கவும் பயிற்ற வேண்டும்.

தொழிலாளர் வர்க்கத்தின் புதிய வெகுஜனக் கட்சியை கட்டியெழுப்பும் எமது பொதுப் போராட்டத்தில் எமது கிளைகளின் நெருக்கமான ஒத்துழைப்பு முன்னொருபோதும் இல்லாத விதத்தில் இப்போது தீர்க்கமானது.

கடந்த மூன்று தசாப்த காலம் பூராவும் ட்ரொட்ஸ்கிசத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்காகவும் வேலைத் திட்டத்திற்காகவும் பு.க.க.வும் அதன் சகல காரியாளர்களினாலும் முன்னெடுக்கப்பட்ட ஈவிரக்கமற்றதும் உறுதியானதுமான போராட்டங்களுக்கு அவுஸ்திரேலியாவின் சோசலிச சமத்துவக் கட்சி தனது மதிப்புக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. சோசலிச புரட்சியின் உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவைக் கட்டியெழுப்புவதை எதிர்வரும் காலப்பகுதியில் எம்முடன் இணைந்து முகம் கொடுக்கும் பிரமாண்டமான போராட்டத்தின் பக்கம் நாம் மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்கொள்கின்றோம்.

சோசலிச சமத்துவக் கட்சி சார்பில்
லின்டா டெனன்போம்,
பிரதி தேசிய செயலாளர்.

படிப்பகம்

www.padippakam.com

# சோசலிச சமத்துவக் கட்சி..

(9ம் பக்கத் பார்க்க)

பொருத்தமானது. ஒபபுதல் வாக்குமூலத்தின் உருவில் அவர்கள் முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக கிளர்ந்து எழும் பொதுமக்களின் மனோதிடத்தை தகர்த்து எறிய முயற்சிக்கிறார்கள்.

ஐக்கிய சோசலிசக் கட்சி என்ற பெயரில் 1986 தொடக்கம் ஜேர்மன் ஸ்டாலினிஸ்டுகளுடன் சேர்ந்து தொழிற்பட்டு வந்த இந்த பப்லோவாத அமைப்பு இன்று 10 ஆண்டுகளுக்குப் பின்னர் தமது அங்கத்தவர் எண்ணிக்கை மூன்றில் ஒன்றாக வீழ்ச்சிகண்டு விட்டதாக கூறுகின்றது. ஒன்று இரண்டைத் தவிர கட்சியின் சகல கிளைகளும்அரசியல் தொழிற்பாட்டில் இருந்து ஓய்வெடுத்துக் கொண்டுள்ளதாக கூறியுள்ளது.

புரட்சிகர அடிப்படைக் கொள்கையையும் நான்காம் அகிலத்தின் முன்னோக்கினையும் வேலைத் திட்டத்தினையும் கைகழுவிவிட்டுவிட்டு 1953ல் பப்லோவாத சிபார்சின் பேரில் பொது மக்களை அரவணைத்துக் கொள்வதற்காக ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சியினுள் கரைந்து போன இக்குழு இன்றும் பல இடைநடு அரசியல் குத்துக்கரணங்களின் பின்வந்து சேர்ந்துள்ள நிலைமை இதுவாகும்.

அவர்களின் அரசியல் செயற்பாட்டின் ஐந்தொகையாக அவர்கள் முன்வைக்கும் பத்திரத்தின் உபதலைப்புக்களைக் காட்டுவதன் மூலம் அவர்கள் இன்று கடைப்பிடிக்கும் மலட்டுத் தனத்தினைப் புரிந்துகொள்ள முடியும். முதலாவது உபதலைப்பு, "உடைந்து போன பிரார்த்தனைகள்." இரண்டாவது தலைப்பு, தனிமைப்படுத்தலில் "இருந்து மீண்டும் தனிமைப்படுத்தலுக்கு." மூன்றாவது பெரிதும் ¡விசித்திரமானது. "வேண்டாம் என்பதை நோக்கிக் குழிபறிந்து போதல்.

இத்தகைய ஒப்புதல் வாக்குமூலத்தின் உருவில் ஊழையிடுவதை இலங்கையில் எங்கேனும் கண்டதுண்டா? துரோகிகள் தவறியும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் போராட்டத்தில் இருந்து கொண்டாலும் அதை உடனடியாக மறுத்து முதலாளித்துவ ஆட்சியாளர்களின் எதிரில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து மன்னிப்புக் கேட்டதை நாம் கண்டதுண்டா?

சமீபகால உதாரணம் ஒன்றைத் தர விரும்புகின்றேன். இலங்கை மின்சார சபைத் தொழிலாளர் போராட்ட உச்சிக்கு சமசமாஜக் கட்சியின் பழைய அங்கத்தவரான லான்டி தள்ளப்பட்டார். இதனால் நம்ப முடியாத விதத்தில் சமசமாஜக் கட்சி தொழிலாளர் போராட்டத்தை நடாத்துகின்றது எனற பொதுஜன அபிப்பராயம் உருவாகி இருந்தது. உடனடியாகத் தலைநீட்டிய சமசமாஜ கட்சியின் உப-செயலாளர் விமலசிரி த மெல் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் இந்த பொதுஜன அபிப்பராயம் ஒரு வெறும் கனவு எனவும் சமசமாஜக் கட்சிக்கும் இலங்கை மின்சாரசபை தொழிலாளர் போராட்டத்துக்கும் எதுவிதமான தொடர்பும் கிடையாது எனவும் கூறினார். இத்தகைய கோழைத்தனமான மன்னிப்பை சமசமாஜக் கட்சி கோரியது லான்டை கட்சி அலுவலகத்தில் வைத்துக் கொண்டு எட்டுத் திக்கிலும் தூதர்களை அனுப்பி பொதுஜன முன்னணி மல்பெரி குழு உட்பட்டவற்றை அழைத்துக் கொண்டு அப்போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பதற்கு அவசியமான சகல வேலைகளையும் செய்து தமது கீழ்த்தரமான சேவைகளை முதலாளித்துவ வர்க்கத்துக்கு நிரூபித்ததன் பின்னராகும். தமது எந்த ஒரு போராட்டத்திலும் இந்தத் துரோகிகளை நான்கு திக்கிலும் கால் மிதிக்கவும் விடக்கூடாது என்பது தொழிலாளர் வர்க்கம் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினையாகும்.

சமசமாஜ ஸ்டாலினிச தலைவர்களின் துரோகத்தைப் பற்றிய கதைகளை அளப்பதன் மூலம் முதலாளித்துவச் சார்பு குட்டி முதலாளித்துவ இயக்கத்தைக் கட்டியெழுப்பிய ஜே.வீ.பி.யும், அதனுடன் இணைந்திருந்து இப்போது விலகிக் கொண்டுள்ள ஜனதா மித்துரோ போன்ற அமைப்புக்களதும் ஆட்களதும் ஒப்புதல்வாக்கு மூலங்கள் குறைவானதா? தமது சகல உபாயங்களும் தாம் பயணம் செய்து கொணடுள்ள முதலாளித்துவ யூ.என்.பி.யின் தூக்குமேடையை நோக்கியே என்பது அணுவளவு புத்திபடைத்தவரும் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு நிலையிலும் றோஹண விஜேவீர கொலை செய்யப்பட்டதைக் கண்டு கண்டும் ரூபவாஹினியில் அளித்த ஒப்புதல் வாக்கு மூலமும் தமது சகாக்களை காட்டிக் கொடுப்பதாகும் என்பதை நிரூபிக்க வில்லையா? வயிற்றுமாரி சந்தர்ப்பவாதத்தில் இருந்து பெருக்கெடுக்கும் நம்பிக்கையீனமும் ஆளும் வர்க்கம் சம்பந்தமாக இருந்துவரும் அடிமைத்தனமும் தவிர வேறு எதுவும் அவர்களின் தியாகம் எனப்படுவதோடு தொடர்பு பட்டிருந்ததும் கிடையாது. இருக்கப் போவதும் கிடையாது.

## சோசலிச சமத்துவக் கட்சியின் அடிப்படை

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சோசலிச சமத்துவக் கட்சியாக செயற்படத் தொடங்குகையில் நாம் ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதற்கு எதுவும் கிடையாது. அது எமது முரட்டுத்தனத்தால் ஏற்பட்டது அல்ல. 28 ஆண்டுகள் பூராவும் நாம் சரியான மார்க்சிச விஞ்ஞானபூர்வமான முன்நோக்கினால் ஆயுதபாணியான கொள்கைப் பிடிப்பான அரசியலில் ஈடுபட்டதே அதற்குக் காரணம். அது எமது அமைப்பின் பெருமை நிறைந்த ஐந்தொகையாகும்.

நாம் சோசலிச சமத்துவக் கட்சியாக செயற்படத் தொடங்குவது இந்தச் சவால் செய்யமுடியாத ஐந்தொகையும் கையுமாகவாகும். ஆதலால் எவரும் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம்! நாம் 28 ஆண்டுகளாக அரசியல் அடிப்படைக் கொள்கைகளினதும் வேலைத்திட்டத்தினதும் அடிப்படையில் இருந்து ஒரு அங்குலமும் சறுக்கியது கிடையாது. சோசலிச சமத்துவக் கட்சி 28 வருடகால அந்த உறுதியான அத்திவாரத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

எனினும் நாம் புதிய பணிகளுக்கு முகம் கொடுத்துள்ளோம் என்பதை புரிந்துகொண்டுள்ளோம். உலக சோசலிசத்தை ஸ்தாபிதம் செய்யும் மூலோபாயத்தை அடிப்படையாகக் கொண்டு போராடும் எம்மைத் தவிர வேறு எந்த ஒரு அமைப்பும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் குறைந்தபட்சத் தேவைகளின் பேரில் தன்னும் நின்று கொண்டுள்ளனவா? போராடுகின்றனவா? அந்த அமைப்புக்கள் விடுக்கும் அறிக்கைகள் மூலம் அல்லாது அவை ஏகாதிபத்திய அழிவின் பிரதிநிதியான பொதுஜன முன்னணி அரசாங்கத்தினை ஆட்சிக்கு கொணரத் தொழிற்பட இல்லையா என்பதைக் கொண்டு ஆராய்ந்து பார்த்தாலே அந்த முடிவைத் தீர்மானித்துவிடலாம். இந்நிலைமையின் கீழ் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சோசலிச சமத்துவக் கட்சியாகப் பரிணாமம் செய்யப்பட்டு , தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் குறைந்த பட்சக் கோரிக்கைகளுக்கான போராட்டத்திலும் முன்னணியின் நிற்பதன் மூலம் அந்தக் கோரிக்கைகளை வெற்றி கொள்ளக் கூடிய முன்நோக்கினாலும் மூலோபாயத்தினாலும் வேலைத்திட்டத்தினாலும் அவர்களை ஆயுதபாணியாக்க வேண்டும். பொதுமக்களின் குறைந்தபட்சக் கோரிக்கைகளைத் தழுவிய-அவற்றில் இருந்து அன்னியப்படாத-இடைமருவு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பொதுமக்களை அணிதிரட்ட நாம் போராடத் தீர்மானம் செய்யக் காரணம் அதுவேயாகும். ஒடுக்கப்படும் மக்கட் பகுதியினரைத் தம்மைச் சூழ அணிதிரட்டிக் கொண்ட தொழிலாளர் வர்க்கம் தனது வரலாற்றுப் பணியினை - முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி வீசி, சமூக சமத்துவத்தை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு அரச அதிகாரத்தை தனது கைக்குள் கொணர்வது இட்டுநிரப்ப அவசியமான அரசியல் நனவை அதன் மூலமே பெறமுடியும்.

1921ல் மூன்றாம் அகிலத்தின் மூன்றாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் இருந்து சில வசனங்களை மேற்கோளாகக் காட்ட விரும்புகின்றேன். லெனின், ட்ரொட்ஸ்கியின் தலைமையில் நடைபெற்ற இம்மாநாடு புரட்சிகர மூலோபாயம், உபாயம் தொடர்பான ஒரு பாடசாலையாக விளங்கியது.

"ஒற்றைக் கோரிக்கைகளுக்கு காட்டப்படும் எதிர்ப்பும் ஒற்றைக் கோரிக்கைகளின் அடிப்படையில் இடம்பெறும் பிரச்சாரமும் சீர்திருத்தவாதி எனத் தொடுக்கப்படும் குற்றச்சாட்டு புரட்சிகர தொழிற்பாட்டின் இன்றியமையாத நிபந்தனைகளை புரிந்து கொள்வதில் இருந்து வரும் இயலாமையையும் பிரதிபலிக்கின்றது.

"பிரச்சினை இறுதி இலக்கின் பேரில் போராடுவதற்கு தொழிலாளர் வர்க்கத்துக்கு அழைப்பு விடுப்பது சம்பந்தமானது அல்ல. அதற்குப் பதிலாகப் பிரச்சினையாக இருப்பது தொழிலாளர் வர்க்கத்தை இறுதி இலக்கு நோக்கி போராட்டத்துக்கு இட்டுச் செல்லக் கூடிய நடைமுறைப் போராட்டத்தை அபிவிருத்தி செய்வதாகும்.

"இன்றைய சகாப்தம் புரட்சிகரமானதாக விளங்கக் காரணம் தொழிலாளர், வெகுஜனங்களின் மிகக் குறைந்தபட்சக் கோரிக்கைகள் கூட முதலாளித்துவ அமைப்பைக் கொண்டு நடாத்துவதோடு ஒத்துப்போகாது இருப்பதேயாகும். ஆதலால் இத்தகைய கோரிக்கைகளுக்கான போராட்டம் கம்யூனிசத்துக்கான போராட்டமாக வளர்ச்சி காண உள்ளது."

## தலைமையை எடுப்போம்

தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்கள் பகுதியினரதும் சகல குறைந்த பட்சக் கோரிக்கைகள் சம்பந்தமாகவும் போராட்டங்களை ஒழுங்கு செய்யவும் அபிவிருத்தி செய்யவும் ஆழமாக்கவும் ஒன்றிணைக்கவும் புரட்சிக் கட்சி போராட வேண்டும். முதலாளித்துவ அமைப்பைத் தூக்கிவீசும் மூலோபாயத்தினால் ஆயுதபாணியாக்கப்பட்ட கட்சி பக்கம் மக்கட் குழுக்களை சமீபமாக்குவதும் வென்றெடுப்பதும் அடிக்கு அடி மக்கள் இந்தப் போராட்டத்தினுள் பெற்றுக் கொள்ளும் அனுபவத்தின் ஊடாகவேயாகும். தமது கோரிக்கைகளுக்கு முதலாளித்துவ அமைப்புடன் ஒத்துப் போகாது எனவும் தமது சுயாதீன அரசியல் வேலைத்திட்டத்தின் மீது அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும் புரிந்து கொள்வதை நோக்கி மக்களை உயர்த்துவது கட்சியின் பொறுப்பாகும். இதற்குத் தடையாகும் சகலதையும் மக்கள் இயக்கத்தில் இருந்து ஒழித்துக் கட்டியாக வேண்டும். இதற்குத் துணைநிற்கும் இடைமருவு கோரிக்கைகளை மக்களின் கைக்கு வழங்க வேண்டும்.

இதற்கு இடமளிக்கும் அமைப்பு வடிவத்தை பிரேரித்து, அதன்கீழ் மக்களை அணிதிரட்ட சோசலிச சமத்துவக் கட்சி போராடுகின்றது. நாம் ஏற்கனவே பல பிராந்தியங்களில் அமைத்துள்ள நடவடிக்கைக் குழுக்கள் அதற்குரிய அமைப்பு வடிவமாகும். தொழிலாளர்கள், ஏழைகள், விவசாயிகள், வீட்டுப்பெண்கள், இளைஞர்களை நடவடிக்கைக் குழுக்களுக்குள் அணிதிரட்டிக் கொள்வதன் மூலம் அவர்களின் அவசியங்களுக்கான போராட்டங்களுக்கு வேண்டப்படும் வர்க்க ஐக்கியத்தை கட்டியெழுப்பவும் அரசியல் வேலைத்திட்டத்தை கலந்துரையாடி தீர்மானம் செய்யவும் அவகாசம் கிடைக்கின்றது. அவை தொழிற் சங்கங்களதும் விவசாயி, மீனவ சங்கங்களதும் குறுகிய தரங்களின் எல்லைகளைத் தாண்டி, வர்க்க ஐக்கியத்துக்கான வாய்ப்பினைத் திறந்து வைக்கின்றது. பரந்த மக்களை தழுவிய விதத்தில் கட்டி எழுப்பப்படும் நடவடிக்கைக் குழுக்களினுள் அரசியல் நனவையும் அமைப்பு பலத்தையும் அபிவிருத்தி செய்யும் பகுதியினர் சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்துவத்தினுள் ஈர்க்கப்படுவர். அவர்களின் அரசியல் தலைமையின் கீழ் தொழிற்படும் நடவடிக்கைக் குழுக்கள் சுயாதீன அரசியல் நிலைப்பாட்டில் நின்று அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தினை ஊர்ஜிதம் செய்யும் போராட்டத்தில் ஈடுபடும் போராட்ட முகாமாகும்.

இப்போது தொழிலில் ஈடுபட்டு உள்ளோரும் அந்த வாழ்க்கைத் தொழிலில் இருந்து தூக்கிவீசப்படும் நிலைமை - வேலையின்மை வேகம் அதிகரிக்கின்றது. இளைஞர் தலைமுறையினர் முதலாளித்துவ அமைப்பின் கீழ் எங்கும் தொழிலைத் தேடிக்கொள்ள முடியாத ஒரு நிலையை எதிர் கொண்டுள்ளனர். இந்நிலையின் கீழ் இளைஞர்களை நடவடிக்கைக் குழுக்களினுள் உயிர்ச்சக்தியாக மாற்றிக்கொள்ள வேண்டும். இது தொடர்பாகவும் மூன்றாம் அகிலத்தின் மூன்றாம் மகாநாட்டில் நிறைவேற்றிய பிரேரணை பெரும் முக்கியத்துவம் மிக்கதாகும். அது பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"இன்றைய நிலைமையினுள் வேலையற்றோரின் படை பிரமாண்டமான முக்கியம் மிக்க புரட்சிகர காரணியாக உள்ளதை கம்யூனிஸ்டுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

"சோசலிசத்துக்கான போராட்டத்தில் வேலையில்லாதோரை தொழிலாளர் வர்க்கத்தின் முன்னணிப் படையுடன் இணைப்பதன் மூலம் வேலையில்லாதோர் இடையே பெரிதும் புரட்சிகரமானதும் சகிப்புத்தன்மை அற்ற பகுதியினர் கையாலாகாத்தனமான தனிநபர் நடவடிக்கைகளுக்குத் தள்ளப்படுவதை தவிர்க்க முடியும்.

"இந்த விதத்தில் வேலையில்லாதவர்களை மேலதிக உழைப்பு படையில் இருந்து புரட்சியின் நடைமுறை படையாக மாற்ற முடியும்."

உலக முதலாளித்துவ அமைப்பின் வீழ்ச்சியின் இன்றைய நிலைமையின் கீழ் வேலையில்லாதவர்கள் தொடர்ந்தும் மேலதிக உழைப்பு படையும் அல்ல. அவர்கள் முதலாளித்துவ அமைப்பினால் ஈடுகொடுக்க முடியாத உபரி ஜனத்தொகையாகும். இதனாலேயே இளைஞர் சங்காரங்கள் இடம்பெறுகின்றன. இளைஞர்களின் எதிர்காலம் தொழிலாளர் வர்க்கம் முன்னணியில நின்று ஸ்தாபிதம் செய்ய வேண்டிய சோசலிச சமுதாயத்துடனேயே இணைந்து ¡கொண்டுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் இளைஞர் சங்காரங்கள் அவற்றின் நச்சுத்தனமானவையாக விளங்குவதால் அவை தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் இனவாத யுத்தத்துக்கு மட்டுமே இரண்டாம் தரமானவை. இந்த இரண்டு மக்கள் சங்காரங்களுக்கும் எதிராக உறுதியான வரலாறு படைத்த ஒரே கட்சி சோசலிச சமத்துவக் கட்சியே. சிங்கள தமிழ் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் அனைத்துலகவாத ஐக்கியத்தின் மூலம் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கிவீசும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடிய நாம் தமிழ் முதலாளித்துவ தேசியவாத இயக்கங்கள் அனைத்துக்கும் எதிராகவும் போராடியதோடு தொடர்ந்தும் போராடுவோம்.

இந்தியாவில் சிறைவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்யும் பொருட்டு சமீபத்தில் நாம் தொடுத்த பிரச்சாரம் பாக்குத் தொடுவாயின் இருபுறத்திலும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்கான அவசியத்தை அனைத்துலகவாத ஐக்கியத்தை நனவாக ஸ்தாபிதம் செய்வதை இலக்காக்கிக் கொண்டுள்ளது. சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசினை இந்திய துணைக்கண்ட சோசலிச குடியரசின் ஒரு பாகமாக ஸ்தாபிதம் செய்வதற்கான சுயாதீன அரசியல் வேலைத்திட்டத்தினாலும் சோசலிச நனவினாலும் மக்களை ஆயுதபாணியாக்குவதற்கு வைத்த பலம்வாய்ந்த பயணமாகும்.

இந்த விதத்தில் ஏற்கனவே மேற்கொண்டுள்ள அரசியல் ஆரம்பிப்பை மேலும் பலப்படுத்தி, வெகுஜனங்களை தழுவிய ஒரு சக்தியாகக் கட்டியெழுப்ப சோசலிச சமத்துவக் கட்சி போராடும். பிற்போக்கு ஆளும் வர்க்கத்தின் எதிர்ப்புரட்சி தாக்குதலை குறைத்து மதிப்பிடாத அதே வேளையில் அவற்றைத் தோற்கடிப்பதற்கான சக்தியை அனைத்துலக சோசலிச விதிமுறையின் அடிப்படையில் மக்களை அணிதிரட்டுவதன் மூலமே கட்டவிழ்த்துவிட முடியும் என சோ.ச.க.நம்புகின்றது. சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தை கட்டியெழுப்ப அனைத்துலக குழுவின் எமது சக சிந்தனையாளர்களுடன் கைகோர்த்து எமது முன்நோக்கின் வெற்றிக்கு உழைக்க சபதம் செய்வோம். தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையே உள்ள சகல நனவான பகுதியினரையும் எம்முடன் இணையுமாறு அழைக்கின்றோம்.

படிப்பகம்

www.padippakam.com


# வேர்க்கர்ஸ் லீக்கும் சோசலிச சமத்துவக் கட்சியின் ஸ்தாபிதமும்

**1996 பெப்ரவரி 12ம் திகதி அமெரிக்க ட்ரொட்ஸ்கிச அமைப்பான வேர்க்கர்ஸ் லீக் ஒரு புதிய அரசியல் கட்சியை - சோசலிச சமத்துவக் கட்சியை அமைக்கும் அதனது தீர்மானத்தை அறிவித்தது.1996 ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தினை அத்தகைய ஒரு அரசியல் கட்சியினை அமைக்கும் அவசியத்தினை தொழிலாளர் வர்க்கத்துக்கு விளக்கப் பயன்படுத்த அது தீர்மானித்தது.**

**இங்கு வேர்க்கர்ஸ் லீக்கின் தேசியச் செயலாளர் டேவிட் நோர்த் 1995 ஜூன் 25ம் திகதி இடம்பெற்ற அங்கத்தவர் கூட்டத்தில் வழங்கிய அரசியல் அறிக்கையின் இறுதிப் பாகம் பிரசுரமாகின்றது. இதில் வேர்க்கர்ஸ் லீக் எந்த அரசியல் , கோட்பாட்டு அத்திவாரத்தில் இந்த புதிய கட்சியை ஸ்தாபிதம் செய்தது என்பதை விளக்கியுள்ளார்.**

**அவுஸ்திரேலியாவில் சோசலிஸ்ட் லேபர் லீக்கும் அத்தகைய நடவடிக்கையை எடுத்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.**

## முன்நோக்குகளும் மூலோபாய பணிகளின் உருவாக்கமும்

எனது சமீபத்திய விரிவுரைத் தொடரில் நான் புரட்சிகர அமைப்பின் மூலோபாய பணிகள் முதலும் முக்கியமுமாக சகாப்தத்தின் முக்கிய பண்புகளைப் பற்றிய விஞ்ஞான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டதாக வேண்டும் என விளக்க முயன்றேன்.

இன்றைய நெருக்கடி ஒரு வெறும் கூட்டு பண்பினையன்றி ஒரு ஒழுங்கு முறையான பண்பினைக் கொண்டுள்ளது என அனைத்துலகக் குழு கருதுகின்றது. இறுதி ஆய்வுகளில் இந்நெருக்கடி முதலாளித்துவ அமைப்பின் அடிப்படைப் பிரச்சினையில் - அதாவது இலாபவீதம் வீழ்ச்சி காணும் போக்கினை ஈடு செய்யும் விதத்தில் போதுமான உபரிப் பெறுமானத்தை கறப்பதில் வேரூன்றி உள்ளது. முதலாளித்துவத்தினால் உழைப்புக்கு எதிரான அதனது தூண்டிவிடப்பட்ட தொழில் நுட்பப் புரட்சி - இதனை நான் மீண்டும் சுட்டிக்காட்டுவது அவசியம் - இந்தத் தொழில் நுட்பப் புரட்சி பெறுமனே புரிந்து கொள்ளப்பட்ட ஒரு பொருளாதாரச் சக்தியின் பேரிலான அக்கறை அன்று. அதற்கு நிஜ அரசியல் சமூக நோக்கங்கள் இருந்தன. ஆனால் இந்த தொழில்நுட்பப் புரட்சி முதலாளித்துவத்தின் அடிப்படையான முரண்பாடுகளை ஆழமாக்கி உள்ளன. ஒரு பிரச்சினையைத் தீர்க்க முயன்று இது உண்மையில் இதனை ஒரு உயர்ந்த மட்டத்தில் மீளச் சிருஷ்டித்துள்ளது. சுரண்டல் வீதத்தினை உக்கிரமாக்கும் திசையில் பரந்த அளவிலான தொழிலாளர் வர்க்கப் பகுதியினரை இது உற்பத்திப் போக்கில் இருந்து வெளியே தள்ளியுள்ளது. உழைப்பினால் சிருஷ்டிக்கப்பட்ட பேரளவு உபரிப் பெறுமானத்தினையும் இது அடிப்படையாக கொண்ட சராசரி இலாப விகிதத்தையும் குறைத்துள்ளது.

உற்பத்தியை அதிகரிக்கவும் உற்பத்தி செலவை குறைக்கவும் முன்னணி முதலாளித்துவ சக்திகளால் பிரயோகிக்கப்படும் சகல நடவடிக்கைகளும் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் இலாபகரமான உழைப்பினை பெறும் வழிகளைத் தேடுகின்றன. அத்தோடு தமது போட்டியாளர்களின் இழப்புக்கள் மூலம் தமது சந்தைப் பங்கினை அதிகரிக்க ஈவிரக்கமற்று முயற்சிக்கின்றனர். இவை புறநிலைப் போக்குகளின் நெருக்குவாரத்தினை பிரதிபலிக்கின்றன.

இந்நெருக்கடியின் அபிவிருத்தியானது இரக்கமற்ற முறையில் இரண்டு திசைகளில் இட்டுச் செல்கின்றது: 1. சந்தையின் பங்குக்காக முதலாளித்துவ சக்திகளிடையே போராட்டத்தினை உக்கிரமாக்கும் பெறுபேறாக யுத்தத்தின் திசையில் 2. பூகோள ரீதியான ஆளுமைக்கான தமது போராட்டத்துக்கும் உபரிப் பெறுமானத்துக்கான தனது சமப்படுத்த முடியாத உந்துதலுக்கும் தொழிலாளர்களின் மிகவும் அடிப்படையான அவசியங்களை கீழ்ப்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் அவசியத்தினால் தோன்றும் வர்க்கப் போராட்டங்கள் உக்கிரம் அடைவதன் பெறுபேறாக சமூகப் புரட்சியை நோக்கி

## சமூக சமத்துவ கட்சிக்கான கருத்துப்பாடு

## அமெரிக்காவில் சமூக துருவப்படுத்தல்

புறநிலை நிலைமைகள் புரட்சியின் திசையில் இட்டுச் செல்கின்றது. ஆனால் புரட்சிகர நனவின் அபிவிருத்தி வரலாற்றில் இருந்து நாம் அறிந்தது போல் ஒரு தன்னியக்கப் போக்கு அல்ல. முதலாளித்துவத்தின் ஆதாள பாதாள முரண்பாடுகளால் சிருஷ்டிக்கப்பட்ட ஊக்கிகள் அவற்றை நேரடியாக சோசலிச சிந்தனை வடிவங்களாக மாற்றிவிடுவதில்லை. ஒரு தரப்பட்ட புறநிலை நிலைமையில் தொழிலாளர் வர்க்கத்தின் அக்கறையானது ஒரு பரந்த தரப்பட்ட வரலாற்று நிலைமைகளின் சிக்கலுடன் பிணைக்கப்பட்டுள்ளது. இவை உண்மையில் நாட்டுக்கு நாடு வேறுபடலாம். ஆனால் ஒவ்வொரு விடயத்திலும் மார்க்சிஸ்டுகள் தொழிலாளர் வர்க்கத்தின் மனதினுள் மேலும் சொன்னால் தொழிலாளர் வர்க்கத்தின் இதயத்தினுள் செல்லும் பாதையைக் கண்டாக வேண்டும்.



டேவிட் நோர்த்

லீக்கினை கட்சியாக பரிணாமம் செய்கையில் நாம் முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி உழைக்கும் மக்களின் பரந்த பகுதியினரிடையே வெளிப்பாடாகும் விதத்தினை கவனத்தில் கொள்ள வேண்டும். மிகவும் தெளிவாகச் சொன்னால் இலட்சோப லட்சம் உழைக்கும் மக்கள் வாழ்க்கை தரத்தில் இடைவிடாத வீழ்ச்சியை அனுபவித்துக் கொண்டுள்ளனர். அவர்கள் தமது தொழில் உத்தரவாதம் பற்றி இடைவிடாமல் அச்சம் கொண்டுள்ளனர். சம்பளம் வீழ்ச்சி கண்டு, விலைவாசி உயர்ச்சி அடைகையில் அதை ஈடு செய்யும் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்க வாழ்க்கையின் ஆதிக்கம் கொண்ட இலட்சணமாக முன்னொரு போதும் இல்லாத செல்வத்தை அனுபவிக்கும் சனத்தொகையில் சிறிய வீதத்தினருக்கும் பொருளாதார ஸ்திரப்பாடின்மையினதும் துயரத்தினதும் பல்வேறு மட்டத்தில் வாழும் உழைக்கும் மக்களின் பரந்த தட்டினருக்கும் இடையேயான இடைவெளி அதிகரிப்பது விளங்குகின்றது.

செல்வத்தினதும் வறுமையினதும் சுட்டெண்கள்

சமீபத்தில் எனக்கு "வறுமைக்கு எதிரான அமெரிக்காவின் புதிய யுத்தம்" என்ற ஒரு புத்தகம் கிடைத்தது. அது அமெரிக்காவின் சமூக நிலைமைகள் பற்றிய பெறுமதியான புள்ளிவிபரங்களைக் கொண்டுள்ளது. இந்நூலில் இருந்து சில தகவல்களை முன்வைக்க எனக்கு அனுமதி வேண்டும்.

## சமூகத் துருவப்படுத்தல்

1977-88 வரை செல்வந்தர்களான 1 வீதத்தினரின் வருமானங்கள் 96 வீதத்தினால் உயர்ந்தது. செல்வந்தர்களான ஐந்தில் ஒரு பங்கினரின் வருமானம் நூற்றுக்கு 25 வீதத்தினாலும் உயர்ந்துள்ளதோடு அமெரிக்க குடும்பங்களில் வறுமையான ஐந்தின் வருமானம் நூற்றுக்கு 10 வீதத்துக்கும் மேலாக வீழ்ச்சி கண்டது.

1983-1989 வரை அமெரிக்காவின் முழு செல்வத்தின் அதிகரித்த பங்கின் பெரும் பங்கு நூற்றுக்கு 62 வீதம் - அந்நாட்டின் செல்வந்தர்களான நூற்றுக்கு ஒரு பங்கினரிடம் சென்றது. கீழ் மட்டத்தினரான 80 சதவீதத்துக்கு அதிகரித்த பங்கில் நூற்றுக்கு 1 வீதமே கிடைத்தது.

1990ல் அமெரிக்க மக்களில் வறிய ஐந்தில் ஒரு பங்கினர் நாட்டின் மொத்த வருமானத்தில் 3.7 வீதத்தினையே பெற்றனர். இது 1954ன் பின்னர் ஆகக் குறைந்த வீதமாகும். அதே ஆண்டில் செல்வந்தரான 1/5 பங்கினர் இதுகாறும் கண்டிராத உயர்ந்த வீதமான நாட்டின் மொத்த வருமானத்தில் சரி அரை வாசிக்கும் கூடுதலாக பெற்றனர்.

1943ல் டாலரின் இன்றைய பெறுமதியின் படி 1 மில்லியன் டாலருக்கும் அதிகமான தொகையை வருடாந்த வருமானமாகப் பெற்ற சனத் தொகையினர் மத்திய அரசாங்கத்தினால் குறிக்கப்பட்ட செலவுகளுக்கு தமது முழு வருமானத்தில் 78 வீதத்தினை செலுத்தினர். 1990ல் உயர்ந்த வருமானம் பெறும் நூற்றுக்கு ஒருவரின் வருமானத்தில் மத்திய அரசாங்கத்தின் வருமான வரிக்கு உட்பட்ட தொகை 21.5% வரை வீழ்ச்சி கண்டது.

1979-1989 வரையிலான தசாப்தத்தில் 200,000 டாலர்கள் அல்லது அதற்கும் கூடுதலான தொகையை முழு வருமானமாகப் பெற்ற வருமான வரி செலுத்துவோர் எண்ணிக்கை (9400 இருந்து 790000) 8 மடங்கால் அதிகரித்த அதே வேளையில் அவர்களின் சமஷ்டி வருமான வரி விகிதம் 45.3%ல் இருந்து 24% வீதமாக வீழ்ச்சி கண்டது.

1988ல் அமெரிக்கர்களில் 1.3 மில்லியன் ஆட்கள், சொத்துக்களின் படி மில்லியனர்களாக விளங்கினர். 1980ல் இப் புள்ளிவிபரம் 574,000 மட்டுமே. 1972ல் இது 180,000 ஆகவும் 1964ல் 90,000 ஆகவும், 1953ல் 27,000 ஆகவும் விளங்கியது. 1994ல் அமெரிக்க செனட் சபையில் 28 மில்லியனர்களும் பிரதிநிதிகள் சபையில் 50 மில்லியனர்களும் இருந்தனர்.

தமது குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேலாக உயர்த்திக் கொள்ளும் அளவுக்கு உயர்ந்த வருமானம் பெறாத முழு நேர தொழில் புரிந்தவர்களின் எண்ணிக்கை 1979ல் இருந்து 1992 வரையிலான காலப் பகுதியில் நூற்றுக்கு 50 வீதத்தினால் 12%ல் இருந்து 18 வீதமாக அதிகரித்தது. 10 அமெரிக்கரில் ஒருவர் இலவச உணவு மானியம் வழங்கும் உணவுக் களஞ்சியங்கள், 'சூப்' குசினிகள் அல்லது தான மண்டபங்களுக்கு செல்ல நேரிட்டுள்ளது.

## சிறுவர் வறுமை

அமெரிக்கச் சிறுவர்களில் ஐவருக்கு ஒருவர் - 14.6 மில்லியன் - ஏழைகள். 1965ன் பின்னர் எந்தவொரு வருடத்தைக் காட்டிலும் 1992ல் அமெரிக்கச் சிறுவர்கள் வறுமையில் மூழ்கிப் போயிருந்தனர். எனினும் இக்காலப் பகுதியில் அமெரிக்க மொத்த தேசிய உற்பத்தி (GNP) 53.2 வீதத்தினால் அதிகரித்தது.

1991ல் 18 வயதுக்குக் குறைந்த 12 மில்லியன் குழந்தைகள் (எல்லா குழந்தைகளிலும் 18.3 வீதம்) பட்டினியால் பீடிக்கப்பட்டு இருந்தனர். 1989க்கும் 1992க்கும் இடையே உணவு முத்திரை பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 41 வீதத்தினால் 13.3 மில்லியனுக்கு - அதிகரித்தது. 1990ல் உறையுள் தேடும். வீடற்றோரில் குழந்தைகள் 30 வீதமாக இருந்தனர்.

1990ல் 15 மாநிலங்களில் சிறுவர் வறுமை 20 வீதமாகவும் அதற்குக் கூடுதலாகவும் இருந்தது. மிசிசிப்பியிலும் லூசியானாவிலும் ஒவ்வொரு மூன்று குழந்தைக்கும் ஒரு குழந்தை ஏழையாக இருந்தது. நியூமெக்சிக்கோவிலும், மேற்கு வேர்ஜீனியாவிலும், கொலம்பியா மாவட்டத்திலும், ஆர்க்கான்சாவிலும் இது நான்குக்கு ஒன்றாக இருந்தது.

அமெரிக்க குழந்தைகள் கனடிய குழந்தைகளை விட இரண்டு மடங்கு வறியோராகவும் பிரித்தானியக் குழந்தைகளை விட 3 மடங்கு வறியோராகவும் பிரான்சியக் குழந்தைகளை விட நான்கு மடங்கு வறியோராகவும் ஜேர்மன், டச்சு, சுவீடன் குழந்தைகளை விட 7 தொடக்கம் 13 மடங்கு வறியோராகவும் உள்ளனர்.

1984-1987க்கும் இடையே அமெரிக்கா ஒரு உதாரணமான கைத்தொழில் நாடுகளுக்கு இடையே குழந்தைகளை வறுமையில் இருந்து விடுவிப்பதில் ஆகக் குறைந்த வெற்றி வீதத்தினைக் கொண்டிருந்தது. இந்த வீதம் ஐக்கிய ராஜ்யம், பிரான்சு போன்ற நாடுகளைக் காட்டிலும் ஒன்பது மடங்கு சிறியதாக விளங்கியது.

இரத்தச் சோகை மற்றும் உணவுப் பற்றாக்குறை என்பன குழந்தைகள், வயது வந்தோரிடையே பொதுவானதாகக் காணப்பட்டது. இரும்புச் சத்து பற்றாக்குறை, பொதுச் சனத் தொகையினரிடையே காணப்பட்டதைக் காட்டிலும் ஒரு வயது இரண்டு வயதைக் கொண்ட குறைந்த மட்ட வருமான குழுவினர் இடையே இரண்டு மடங்கு சாதாரணமானதாகக் காணப்பட்டது.

1989ல் 10,000-15,000 டாலர் வருமானத்தைக் கொண்ட வீடுகளில் வசிக்கும் உயர் பாடசாலை மாணவர்களில் 4.4 வீதத்தினர் ஒரு கணனியை (Computer) வீடுகளில் பயன்படுத்துகின்றனர். 40,000-50,000 டாலருக்கும் இடைப்பட்ட வருமானத்தைக் கொண்ட வீடுகளில் இந்த எண்ணிக்கை 27.7 வீதமாக உள்ளது.

1984-1994க்கும் இடையே அமெரிக்கா அதன் கூட்டு மனித தேவைகளின் பேரில் செலவிட்டதைக் காட்டிலும் 3 மடங்கு அதிகமாக பாதுகாப்புக்கு செலவிட்டது. கல்விக்கு செலவிட்டதைக் காட்டிலும் ஏறக்குறைய 15 மடங்கு அதிகமாக பாதுகாப்புக்குச் செலவிட்டது.

## சம்பளங்களும் பகுதிநேரத் தொழிலாளர்களும்

1970-1993க்கும் இடையே கட்டாயத்தின் பேரிலான பகுதிநேரத் தொழிலாளர்கள் எண்ணிக்கையில் 178 வீத அதிகரிப்புக் காணப்பட்டது. இதே சமயம் முழுநேர தொழிலாளர் எண்ணிக்கை 51 வீதத்தினால் மட்டுமே அதிகரித்தது.

குறைந்த பட்ச சம்பளம் பணவீக்க மட்டத்துடன் உயரவில்லை. குறைந்த பட்ச சம்பளம் பெறும் ஒரு முழு நேர - ஆண்டு பூராவும் உழைக்கும் தொழிலாளியின் வருமானம் மூன்று பேரைக் கொண்ட குடும்பத்தின் வருமானம் வறுமைக் கோட்டுக்கு கீழாக வீழ்ச்சி கண்டது.

1979-1989க்கும் இடையே 17.2 மில்லியன் தொழில்கள் உருவாக்கப்பட்ட போதிலும் உயர் சம்பளம் பெறும் 17 இலட்சம் கைத்தொழில், சுரங்கத் தொழில்கள் இல்லாமல் போனதோடு சேவைத் துறையில் குறைந்த சம்பளம் பெறும் தொழில்கள் 1 கோடியே 88 இலட்சத்தினால் உயர்ந்தது. புதிதாகச் சிருஷ்டிக் கப்பட்ட தொழில்களில் பெரும்பகுதி மிகவும் குறைந்த சம்பளம் வழங்கும் இரண்டு கைத்தொழில்களாக - அதாவது கிழமைக்கு 276 டாலர் சம்பளம் வழங்கும் சில்லறை வர்த்தகமும் ஒரு கிழமைக்கு 357 டாலர் சம்பளம் வழங்கும் சேவைகளும் விளங்கின.

## சிறைச் சனத்தொகை

1980 பதுகளில் வேகமாக வளர்ச்சி காணும் வீடமைப்பு வகையாக சிறைச்சாலைகள் விளங்கின. ஒவ்வொரு 250 அமெரிக்கரிலும் ஒருவருக்கு மேலாக ஏதேனும் ஒரு சீர்திருத்த சிறைகளில் காலங்கழித்தனர். இது உலகின் அதிகூடிய சிறையிலிடப்பட்டோர் வீதாசாரமாகும்.

1980ன் சனத்தொகை புள்ளி விபரங்களின் படி 315,974 பேர் சிறையில் இருந்தனர். 10 ஆண்டுகளின் பின்னர் சிறையில் தள்ளப்பட்டோர் எண்ணிக்கை 1.1. மில்லியன்

(12ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

வரை மூன்று மடங்கால் அதிகரித்தது. இது முழு டெட்ரொயிட் நகரத்தினதும் சனத்தொகையை தாண்டிச் செல்லும் புள்ளி விபரமாகும்.

## சுகாதார காப்புறுதி

10,000 டாலருக்கும் குறைவான வருட வருமானத்தைக் கொண்ட அமெரிக்கர்களில் 36 வீதமானோருக்கு சுகாதார காப்புறுதி கிடையாது. 1991ல் காப்புறுதி செய்யாத நோயாளிகளின் மரண விகிதம் தனிப்பட்ட காப்புறுதி செய்த நேயாளிகளைக் காட்டிலும் நூற்றுக்கு 44 வீதம் தொடக்கம் 124 வீதம் வரை அதிகரித்துக் காணப்பட்டது. 1992ல் ஏழை மக்களில் 1/5 பகுதியினருக்கு சுகாதார காப்புறுதி இருக்கவேயில்லை.

## குடிபெயர்ந்தோர்

வறுமைக் கோட்டுக்கு கீழாக வாழும் குடிபெயர்ந்து வந்த குடும்பங்களின் வீதாசாரம் 1979ல் 11 வீதமாக இருந்து, 1991ல் 31.7 வீதமாக அதிகரித்தது.

## கிராமப்புற அமெரிக்கா

அமெரிக்க சனத்தொகையில் 1/4 பங்கினர் - 70 மில்லியன் மக்கள் கிராமப் புறங்களில் வசிக்கின்றனர். இவர்களில் 1/6 பங்கினர் வறுமையில் வாழ்கின்றனர்.

அமெரிக்க நிலச்சுவாந்தர்களில் உயர்மட்ட 5 வீதத்தினர் அமெரிக்க தனியுடமை நிலங்களில் 75 வீதத்தினைக் கொண்டுள்ளனர். அடிமட்டத்தில் உள்ள 78 வீதத்தினர் 3 வீதத்தினை மட்டுமே கொண்டுள்ளனர்.

1980-1990க்கும் இடையே பண்ணைத் தொழில்கள் 22 வீதம் வீழ்ச்சி கண்டது.

## மேலதிக புள்ளிவிபரங்கள்

குறைந்தது 2.3 மில்லியன் டாலர்கள் தேசிய மதிப்புள்ள 1 வீதம் அமெரிக்க குடியிருப்பாளர்கள் நாட்டின் செல்வத்தில் 40 வீதத்துக்கு மேலாக கொண்டுள்ளனர்.

சனத்தொகையில் 0.5 வீதத்துக்கு குறைவானோர் கம்பனி பங்குகளில் 37.4 வீதத்தையும் தனிப்பட்ட வர்த்தக சொத்துக்களில் 56.2 வீதத்துக்கு மேலாகவும் கொண்டுள்ளனர்.

உயர்மட்டத்தைச் சேர்ந்த 5 வீதத்தினர் 1979ல் 120253 டாலர்களை வருமானமாகக் கொண்டிருந்தனர். 1989ல் இதை 148428 டாலர்களாக அதிகரித்தனர். இதே சமயத்தில் வறிய 20 வீதத்தினரின் சம்பளம் 9990 டாலர்களில் இருந்து 9431 டாலர்களாக வீழ்ச்சி கண்டது.


சம்பள உழைப்பாளர்களில் உயர்மட்ட 4 வீதத்தினர் -- 3.8 மில்லியன் மக்கள் கீழ்மட்ட 51 வீதத்தினருக்கு - 49.2 மில்லியன் - சமமானதை உழைத்தனர் உயர்மட்ட 20 வீதத்தினர் ஆண்டொன்றுக்கு 4/5 பங்கினரைக் காட்டிலும் கூடிய வருமானத்தைப் பெற்றனர்.

## தொழில்நுட்ப அபிவிருத்திகளின் தாக்கமும் உற்பத்தி தொழில் நுட்பத்திலான மாற்றங்களும்

தொழிலாளர் வர்க்கத்தின் பொருளாதார அந்தஸ்திலும் சமூக நிலைமைகளிலுமான சீரழிவு அது எண்ணெய் வார்த்த தொழில் நுட்ப புரட்சியுடனும் உற்பத்தியின் பூகோளமயமாக்கத்துடனும் நேரடியாகத் தொடர்புபட்டது. உற்பத்திச் சக்திகளின் தனிச் சொத்துடமை ஆட்சியின் கீழ் தொழிலாளர் வர்க்கம் தொழில் நுட்பத்தினால் வஞ்சிக்கப் பட்டுள்ளது. பேரளவு உற்பத்தி முறையை Assembly Line - கைத்தொழில்களை நிறுவிய 19ம் நூற்றாண்டின் கடைப் பகுதியினதும் 20ம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியினதும் தொழில்நுட்பங்களுக்கு முரணாக உற்பத்தியின் கணனிமயமாக்கம் இலட்சோப லட்சம் மக்களை அவர்களின் தொழில்களில் இருந்து வெளியேற்றி வருகின்றது.

1950 பதுகளில் அமெரிக்கத் தொழிலாளர்களில் மூன்றில் ஒரு பங்கினர் உற்பத்தி தொழிலில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். 1990 அளவில் இத்தரவுகள் 17 வீதமாக விளங்கின.

1990ல் அமெரிக்க உருக்கு கைத்தொழில் 20,000 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி 1980ல் 120,000 தொழிலாளர்களுடன் இது உற்பத்தி செய்ய முடிந்த உருக்கினை




கடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள சோ.ச.க. காங்கிரஸ் வேட்பாளர்

உற்பத்தி செய்தது.

1983-1993 க்கும் இடையே தன்னியக்க 'ரெல்லர்' இயந்திரங்களின் அறிமுகம் 179,000 தொழில்களின் ஒழிப்புக்கு இட்டுச் சென்றது.

1947-1973 க்கும் இடையே மெய் வார சம்பளம் ஆண்டொன்றுக்கு சராசரியாக நூற்றுக்கு 1.9 வீதத்தினால் அதிகரித்தது. 1973-1990க்கும் இடையே அவை ஆண்டொன்றுக்கு மெய் அர்த்தத்தில் .9 வீதத்தினால் வீழ்ச்சி கண்டன.

1982ல் நிலையான டாலர்களில் அளக்கப்பட்ட போது தொழிலாளர்களின் சராசரி சம்பளம் 1973ன் 308.03 டாலர்களில் இருந்து 1991ல் 260.37 டாலர்களாக வீழ்ச்சி கண்டது. இது வருமானத்தில் இடைவிடாத ஒரு வீழ்ச்சியாகும்.

1990களின் தொடக்கத்தில் சராசரி சம்பளத்தின் கொள்முதல் சக்தி ஒரு தசாப்தத்துக்கு முன்னர் இருந்ததை ஒரு தசாப்தத்துக்கு முன்னர் இருந்ததை விட 15 வீதம் குறைவானதாகும்.

25-34 வயதுக்கும் இடைப்பட்ட ஆண் தொழிலாளர்களின் உழைப்பு வீதம் - நால்வரைக் கொண்ட ஒரு குடும்பத்தை ஆதரிக்க அவசியமானதெனக் கருதப்பட்டது - 1969ல் 13.6 வீதத்தில் இருந்து 1993ல் 32.2 வீதமாக அதிகரித்தது.

புதிய தொழில் நுட்பத்தின் அடிப்படையில் புதிய வகையறாவிலான தொழில்கள் தோன்றுகின்றன. ஆனால் அவை குறைந்த சம்பளத்தை வ்ழங்குவதோடு குறைந்த பாதுகாப்பையும் வழங்குகின்றன.

இத்தகைய சமூக நிலைமைகளையிட்டு வேர்க்கர்ஸ் லீக் அக்கறை செலுத்த வேண்டும். அங்ஙனம் செய்கையில் தொழிலாளர் வர்க்கத்தின் அவசியத்துக்கு அது சோசலிசத்தின் வரலாற்று முன்நோக்கினை - ஸ்டாலினிசத்தின் குற்றங்களால் அசிங்கப்படுத்தப்பட்டு திரிபு படுத்தப்பட்டதை கூறும்.

வேர்க்கர்ஸ் லீக் ஒரு புதிய கட்சியை ஸ்தாபிதம் செய்கையில் அனைத்து குட்டி முதலாளித்துவ தீவிரவாத குழுக்களில் இருந்தும் அவ்ற்றின் போலி புரட்சிகர வார்த்தை ஜாலங்களில் இருந்தும் வேறுபடுத்திக் கொள்ள வேண்டும். மார்க்சிச-லெனினிச கூட்டு, லெனின்-ட்ரொட்ஸ்கி கட்சி, கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களின் லீக் போன்வை அவற்றுள் சிலவாகும். எவ்வளவுக்கு எவ்வளவு அவர்களின் பெயர்கள் புரட்சிகரமான தாக உள்ளதோ அவ்வளவுக்கு அவ்வளவு சந்தர்ப்பவாதமும் நாற்றம் கண்டுள்ளது. கட்சியின் நோக்கம் தொழிலாளர்கள் புரிந்து கொள்ளவும். இனங்காணவும் கூடிய விதத்தில் அதன் பெயரில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டாக வேண்டும். உண்மையில் கலந்துரையாடல் அவசியம். பிரதியீடுக்கான யோசனைகள் தெரிவிக்கப்படலாம். இச்சமயத்தில் நான் வேர்க்கர்ஸ் லீக்கினை சமூக சமத்துவக் கட்சியாகப் பரிணாமம் செய்யும் தயாரிப்புக்களை ஆரம்பிக்கப் பிரேரிக்கின்றேன்.

சுருங்கச் சொன்னால் கட்சியை தொழிலாளர் வர்க்கத்துக்கு முன்வைக்கையில் அதன் நோக்கு தொழிலாளர் அரசாங்கத்தை அமைப்பதாகும் என நாம் தெளிவு படுத்த வேண்டும். தொழிலாளர்களுக்காக தொழிலாளர்களினால் நடாத்தப்படும் ஒரு தொழிலாளர் அரசாங்கத்தையே நாம் கருதுகின்றோம். அத்தகைய ஒரு அரசாங்கம் தொழிலாளர் வர்க்க நலன்களுக்கு ஏற்ப பொருளாதார வாழ்க்கையை மறுசீரமைக்கவும் முதலாளித்துவத்தின் சமூக நாசரமான சந்தைச் சக்திகளை வெற்றி கொண்டு, அவற்றை ஜனநாயக ரீதியிலான சமூக திட்டமிடல் மூலம் பதிலீடு செய்யவும், உழைக்கும் மக்களின் உடனடி சமூக தேவைகளை நிறைவேற்றும் வகையில் செல்வத்தை ஒரு தீவிரமானதும் சமூகீதியில் நியாயமானதுமான மறுபங்கீடு செய்யவும் - அதன் மூலம் சோசலிசத்துக்கான அத்திவாரத்தினை இடவும் அரசியல் அதிகாரத்தை சாத்தியமானால் ஜனநாயக விதிமுறையின் மூலம் ஈட்டிக்கொள்ள பயன்படுத்தும்.

சமூக சமத்துவக் கட்சியின் இந்த இலக்குகளை தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு நனவான அனத்துலக இயக்கத்தின் ஒரு இணைந்த பாகமாக மட்டுமே யதார்த்தமாக்க முடியும். என நாம் வலியுறுத்துகின்றோம். ஏனைய நாடுகளில் உள்ள அதனது வர்க்க சகோதரிகளையும், சகோதரர்களையும் பன்னாட்டு ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் சுரண்டும் வரை அமெரிக்க தொழிலாளிக்கு சமூக சமத்துவமும், சமூக நீதியும் கிட்டாது. மேலும் வர்க்கப் போராட்டம் அடிப்படையாகக் கொள்ளக் கூடிய தாக்கிப் பிடிக்கக் கூடிய எதுவிதமான தேசிய மூலோபாயமும் கிடையாது. தொழிலாளர் வர்க்கம் அதனது அனைத்துலக மூலோபாயத்தினை ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களின் அனைத்துலக மூலோபாயத்துக்கு எதிராக உறுதியாகவும் விதிமுறையாகவும் முன்வைத்தாக வேண்டும். சோசலிச வேலைத் திட்டத்தின் கூர்முனையான இந்த அத்தியாவசியப் பிச்சினையில் சமரசத்துக்கு இடம் கிடையாது.

## சமூக சமத்துவ கட்சிக்கான கோரிக்கை

தொழிலாள்ர்வர்க்கத்தினை அரசியல் ரீதியில் அணிதிரட்ட உழைக்கையில் சமூக சமத்துவக் கட்சியானது இன்றுள்ள சமூக நிலைமைகளில் இருந்து தோன்றும் வெகுஜனங்களின் உடனடித் தேவைகளுக்கு கவனத்தைச் செலுத்தியாக வேண்டும். அனைத்துலக மூலதனம் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான இடைவிடாத தாக்குதலில் ஈடுபட்டுள்ள ஒரு சமயத்தில் சமூகக் கோரிக்கைகள் முழுமையானதும், ஒழிவு மறைவு அற்றதுமான புரட்சிகரப் பண்பைப் பெறுகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக பழைய அமைப்புக்கள், சீர்திருத்த நடவடிக்கைகளின் ஊடாக சீர்திருத்த கோரிக்கைகளை ஈட்டிக் கொள்வது சாத்தியமாக இருந்திருக்குமானால் அவை அவற்றைக் கைவிட்டு இருக்கமாட்டா. உண்மையில் மிகவும் அடிப்படை நிலைமைகளிலான தொழிலாளர் வர்க்கத்தின் ஒவ்வொரு கோரிக்கையும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் முதலாளித்துவ அரசுக்கும் இடையே உடனடியான ஒரு நேரடி மோதலை தோற்றுவிக்கின்றது.

எமது வேலைத் திட்டத்தினுள் சேர்த்துக் கொள்ளும் கோரிக்கைகளை நாம் தெளிவாகக் குறிப்பிட்டாக வேண்டும். எவ்வாறெனினும் எதிர்கால சோசலிச கற்பனா ரோஜ்யத்துக்கான ஒரு அதிகார அறிக்கையாக ஒரு வேலைத் திட்டத்தினை எழுத வேண்டியது அவசியம் இல்லை. மாறாக அது அதனது புறநிலை நலன்களை கொண்ட ஒரு கூட்டு இலக்கினை தொழிலாளர் வர்க்கத்துக்கு வழங்க வேண்டும். மேலும் அது வெகுஜனங்களின் நனவில் ஒரு நரம்பை மீட்க வேண்டும். சமூக சமத்துவத்துக்கான கோரிக்கை சோசலிச இயக்கத்துக்கான அடிப்படை நோக்கினை மட்டும் மொத்தத்தில் எடுத்துக் கூறவில்லை. அது கூடவே அமெரிக்கத் தொழிலாளர்களின் நிஜ ஜனநாயகமும் புரட்சிகர பாரம்பரியல்களிலும் வேரூன்றியுள்ள சமூக சமத்துவ பாம்பரியங்களையும் வெளிப்படுத்துகின்து. அமெரிக்கன் வரலாற்றின் மாபெரும் சமூகப் போராட்டங்கள் அனைத்தும் தமது பதாகைகளில் சமூக சமத்துவத்துக்கான கோரிக்கையைப் பொறித்துக் கொண்டுள்ளன. இன்றுள்ள அரசியல் பிரதிபலிப்பின் சூழலில் இந்த இலட்சியம் இடைவிடாத தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பது தற்செயலானதல்ல.

## உபாயக் கணிப்புக்கள்

இந்தப் பிரேரணையை அறிமுகம் செய்யுமிடத்து இது எந்த விதத்தில் அமுல் செய்யப்பட்டுள்ளது என்பதையிட்டு நாம் கவனம் செலுத்தியாக வேண்டும் என நான் நினைக்கின்றேன். ஏனெனில் வேர்க்கர்ஸ் லீக்கில் இருந்து சமூக சமத்துவக் கட்சிக்கான பரிணாமம் என்பது, இன்றுள்ள எமது சக்திகளை மறுசீரமைப்புச் செய்வதன்றி, பரந்த மக்களுடனான எமது உறவில் ஒரு மாற்றத்தை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. எமது பெயரை மாற்றி எம்மை ஒரு புதிய கட்சியாகப் பிரகடனம் செய்வது மட்டும் போதாது. இப்புதிய கட்சி ஒரு உறுதியான அத்திவாரத்தினை ஸ்தாபிதம் செய்யவல்ல - தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு நிஜ சமூக இயக்கத்தினை ஊக்கி வளர்க்க நாம் செயற்பட வேண்டும். இப்புதிய கட்சி அது அடிப்படையாகக் கொள்ளும் வேலைத்திட்டத்தினையும் அரசியல் கருத்துப்பாட்டையும் விளக்கியாக வேண்டும் என நான் நினைக்கின்றேன். எமது வேலையை பாய்ந்து விழுந்து செய்ய வேண்டியதில்லை. வேர்க்கர்ஸ் லீக்கின் உள்ளும் அனைத்துலகக் குழுவின் உள்ளும் கலந்துரையாடல் இடம் பெற்றாக வேண்டும்.

நா.அ.அ.கு.வைப் பொறுத்தமட்டில் லீக்கில் இருந்து கட்சிக்கான வேலைக் கிரமம் ஏனைய பகுதிகளில் குறிப்பாக - அவுஸ்திரேலிய சோசலிச லேபர் லீக், இலங்கை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினுள் மிகவும் துரிதமாகச் செல்ல முடியும் என நான் நினைக்கின்றேன். ஆனால் இந்தப் பகுதிகளிலான அபிவிருத்திகள் சிந்தனையுடன் கூடிய கணிப்புக்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

அமெரிக்காவில் இன்னமும் நாம் இந்தப் பரிணாமத்துக்காக தொழிற்பட ஆரம்பிக்க வேண்டியுள்ளது. ஆதலால் நான் கீழ்வரும் சிபார்சுகளைச் செய்ய விரும்புகின்றேன்.

முதலாவதாக, வேர்க்கர்ஸ் லீக்கினை ஒரு சமூக சமத்துவக் கட்சியாக பரிணாமம் செய்யும் பிரேரணையை நாம் கொள்கையளவில் ஆதரிக்கின்றோம்.

இரண்டாவதாக, வேர்க்கர்ஸ் லீக்கின் அடுத்த தேசிய காங்கிரசினை இவ்வாண்டின் இலையுதிர் காலத்தின் கடைப்பகுதியில் நடாத்துவது. அதில் காங்கிரஸ் பத்திரத்தில் விரிவுபடுத்தப்படவுள்ள பிரேரணைகள் முறையாக அங்கீகரிக்கப்படும்.

மூன்றாவதாக, 1996 தேர்தல் பிரச்சாரத்தினை நாம் இந்த பரிணாமம் அடிப்படையாகக் கொள்ளவுள்ள சக்திகளை கட்டியெழுப்பப் பயன்படுத்துவோம். அதாவது, 1996 தேர்தல்களில் வேர்க்கர்ஸ் லீக் ஜனாதிபதி, காங்கிரஸ் வேட்பாளர்களுடன் தலையிடும். வாக்குச் சீட்டு சின்னத்துக்காக அது சமூக சமத்துவ கட்சி என்ற பெயரைக் கையாளும். சமூக சமத்துவத்துக்காக தொழிலாளர் வர்க்கத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு இயக்கத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு இந்தப் பிரச்சாரத்தை அது பயன்படுத்தும்.

இந்தப் பிச்சாரத்தின் ஊடாக முன்னேறிய தொடர்புச் சாதன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்திமுடிந்தமட்டும் பரந்த அடிப்படையில் அபிவிருத்தி செய்ய முயற்சிப்போம். லீக்கினை ஒரு கட்சியாகப் பரிணாமம் செய்ய அவசியமான அடிப்படைகளை நாம் ஸ்தாபிதம் செய்வோம்.

இந்த விதத்திலேயே நாம் முன்னேறிச் செல்ல வேண்டும் என நான் நினைக்கின்றேன்.

படிப்பகம்

www.padippakam.com


# வென்சர் டிவிசன் பொலிஸ் தாக்குதலுக்கு எதிராக தொழிலாளர் வேலைநிறுத்தத்தில்

நோர்வூட்டைச் சேர்ந்த வென்சர் டிவிசன் தொழிலாளர்கள் தமது இரண்டு சக தொழிலாளர்களின் அரைநாள் சம்பளத்தை வெட்டுவதற்குத் தோட்ட நிர்வாகம் எடுத்த தீர்மானத்துக்கு எதிராக ஜனவரி 3ம் திகதி தோட்டத்தில் பிரச்சாரம் செய்தனர். இதில் 500 தொழிலாளர் பங்குகொண்டனர். தோட்ட முகாமையாளர் ஜயசேகர கலகம் அடக்கும் பொலிசாருடன் புகுந்து, தொழிலாளரைத் தாக்கியதோடு அவர்களை விரட்ட கண்ணீர்ப்புகை பிரயோகமும் செய்தனர். இந்தக் கொடிய தாக்குதலில் நோர்வூட் பொலிஸ் நிலைய அதிபரும் ஏழு பொலிசாரும் பங்குகொண்டனர். பொதுஜன முன்னணி அரசாங்கம் தொழிலாளருக்கு எதிராக நடத்தும் அரச அடக்குமுறைகளின் ஒரு அம்சம் மட்டுமே இதுவாகும்.

அன்று தொடக்கம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர் தாக்குதலில் ஈடுபட்ட பொலிசாரையும் தோட்ட முகாமையாளரையும் இடமாற்றம் செய்யும்படி கோரினர். மடோல்சீம பிளான்டேஷன் கம்பனிக்குச் சொந்தமான இத்தோட்டத்தின் 3 டிவிசன்களில் இரண்டு டிவிசன்கள் இதில் கலந்து கொண்டன. நூல்நிலைய திறப்புவிழாவைச் சாட்டாகக் கொண்டு இ.தொ.கா.இந்த பொலிஸ் தாக்குதலுக்கு எதிரான வர்க்க நடவடிக்கையில் தொழிலாளர் கலந்துகொள்வதை நிறுத்தியது. வேலைநிறுத்தம் மூன்று நாட்களாகத் தொடர்ந்த போதிலும் தொழிலாளர் முகம் கொடுத்த எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு கிட்டாமல் தொழிலாளர்களை வேலைக்குத் திருப்பி அனுப்ப இ.தொ.கா. மலையக மக்கள் முன்னணி, தே.தொ.கா. தலைமைகள் முயற்சித்தனர். பொலிஸ் தாக்குதலால் ஆறு பெண் தொழிலாளர்களும் ஒரு ஆண் தொழிலாளியும் கடும் காயமடைந்தனர். இவர்கள் அன்றைய தினம் பொகவந்தலாவை ஆஸ்பத்திரியிலும் நாவலப்பிட்டி

ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப் பட்டனர். காயமடைந்தவர்களில் 32 வயதான மாரியாய் ஒரு குழந்தைக்குத் தாய். இவருக்கு குதிக்காலில் தசை வெடித்துள்ளது. அவர் ஐந்து நாட்கள் நாவலப்பிட்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றதாகவும் கையில் பணம் இல்லாததால் அவசியப்பட்ட மருந்துகளை வாங்கிக்கொள்ள முடியாதுள்ளதாகவும் குறிப்பிட்டார். இ.தொ.கா. தோட்டத் தலைவிகளில் ஒருவரான லட்சுமிக்கு இடது கண் ஓரத்தில் காயம் ஏற்பட்டுள்ளது. மூச்சுவிடக் கஷ்டப்படுவதாக லட்சுமி தெரிவித்தார். டி.புஷ்பராணியும் தனது கால் தசை இத்தாக்குதல் காரணமாக வெடித்துள்ளதாகக் கூறினார். மார்புவீங்கி மூச்செடுக்கக் கஷ்டப்படும் நிலையில் கே.வள்ளியம்மை காணப்பட்டார். இதனால் சிறு குழந்தைக்கு பாலூட்ட முடியாதுள்ளதாக அவர் எமது நிருபரிடம் குறிப்பிட்டார். பொலிசாரின் கண்ணீர்ப் புகைத் தாக்குதலால் கண்ணில் தொடர்ந்து கண்ணீர் வடிந்து கொண்டுள்ளதாக பீ.பார்வதி கூறினார். தனியார் கடைகளில் மருந்து வாங்க வேண்டியுள்ள போதிலும அதற்கு கையில் காசில்லை என நான்கு பிள்ளைகளின் தாயாரான பார்வதி மேலும் குறிப்பிட்டார். கண்ணீர்ப் புகைக் குண்டுகளால் அவரின் கால் தாக்கப்பட்டதால் அதுவும் வீங்கி வேதனை தருவதாக உள்ளது.

ஜ.தொ.கா .தலைவியான பீ.வேலு பொகவந்தலாவை ஆஸ்பத்திரியில் கண்ணீர்ப் புகைச்சன்னம் வயிற்றில் தாக்கிய நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தோட்ட முகாமையாளர் அவரைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டி தாக்கும் படி கூறியதாக வேலு கூறினார். இன்னும் பலரும் காயமடைந்துள்ளனர். பறிக்கும் கொழுந்தின் அளவுக்கு ஏற்ப சம்பளத்தை வெட்ட நிர்வாகம் எடுத்த முயற்சிக்கு எதிராகவே தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர். அன்று 8 மணித்தியாலத்திலும் கூடுதலாக அரை மணித்தியாலம் வேலை செய்திருந்தனர். இருந்த போதும் 21 தொழிலாளரின் சம்பளம் அரைச் சம்பளமாக வெட்டப்பட்டது. முகாமையாளரும் தொழில் ஆணையாளரும் இது ஏதோ தவறுதலாக ஏற்பட்டுவிட்டதாகக் காட்டத் தலைகீழாக


கே. மாரியாயி


கே. புஷ்பராணி


கே. லெட்சுமி


கே. செல்வம்


பீ. பார்வதி


பீ. வேலு


கே. வள்ளியம்மா

நிற்கின்றனர். பொலிஸ் தாக்குதலை தயார் செய்ததன் மூலம் சம்பளவெட்டு, வேலை விரைவுபடுத்தல் ஆகியவற்றுக்கு நிர்வாகம் ஆயத்தமாகி வருகின்றது. இது நிரூபிக்கப்பட்டுள்ளது.

## பொறுப்பு

இ.தொ.கா, ஜ.தொ.கா, ம.ம.மு.ஆகியன இந்த வேலைநிறுத்தத்தை உடனடியாக முடித்துவிட விரைந்து செயற்பட்டனர்.எனினும் தொழிலாளர் எதிர்கொண்ட எந்தவொரு பிரச்சினைக்கும் முடிவு கிட்டவில்லை. தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களை இடமாற்றம் செய்யக் கோருவதன் மூலம் இதற்கு மேலிடத்திலிருந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆகையால் பாராளுமன்றத்தில் பேச உள்ளோம் எனவும் கூறிக்கொள்கின்றனர். தொழில் ஆணையாளருடன் கடந்த 20ம் திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் செக்ரோல் பரிசீலிப்பதை தாமதிக்க இத்தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இத்துரோகத் தலைவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்த பொலிஸ் தாக்குதல் இடம்பெற இடமில்லை என்பதை இது சுட்டிக் காட்டுகின்றது. ஆதலால் இத்தலைவர்களே இதற்கு பொறுப்பு என சோசலிச சமத்துவக் கட்சி கூறுகின்றது.

தாக்குதலில் ஈடுபட்ட பொலிசாரையும் தோட்ட நிர்வாகியையும் இடம் மாற்றிவிடுவதால் தொழிலாளரை அடித்து அடக்கி உரிமை பறிக்கும் நிலை ஒழிந்து போய்விடாது. இதைத் தோற்கடிக்கவல்ல மாற்று வேலைத்திட்டத்தின் கீழ் தொழிலாளர் அணிதிரள வேண்டும்.

வென்சர் டிவிசன், மடுல்சீமை பிளான்டேசன் கம்பனிகளின் கொடிய சேவை நிபந்தனைகள் நிலவும் இடங்களில் ஒன்றாகும். ஏனைய தோட்டங்களில் ஒரு நாளுக்கு 12 கிலோ பறிக்க வேண்டும். ஆனால் இங்கோ நாளுக்கு 18 கிலோ பறிக்க வேண்டும். ஞாயிறு தினங்களில் ஏனைய இடங்களில் 16 கிலோ பறிக்கையில் இங்கு 20 கிலோ கொழுந்து எடுக்க வேண்டியுள்ளது. இந்த வேலை விரைவுபடுத்தல் ஏனைய இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை .

இங்கு தொழிலாளர்களைப் புதிதாக ஆட்களை வேலைக்கு அமர்த்துவது கிடையாது. இந்த தோட்டத்தில் மட்டும் 70 தோட்ட வாலிபர்கள் வேலை இல்லாது உள்ளனர். இது சம்பந்தமாக தொழிற்சங்கத் தலைவர்கள் எதுவும் செய்வதில்லை.

சோசலிச சமத்துவக் கட்சியும் பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் தொழிலாளர் சம்பள வெட்டு, பொலிஸ் அடக்குமுறைகளுக்கு எதிராக பலத்த பிரச்சார இயக்கத்தை ஆரம்பித்துள்ளது. நிர்வாகத்தின் அடக்குமுறைக்கும் சம்பள வெட்டுக்கும் ஆதரவாக உள்ள சகல தொழிற்சங்கங்களில் இருந்தும் விலகி தொழிலாளர் நடவடிக்கைக் குழுக்களைக் கட்டியெழுப்பத் தீமானம் செய்ய வேண்டும். தனியார் மயமாக்கத்துக்கு எதிராகப் போராடவும், முதலாளித்துவ அரசியலில் இருந்து விடுபடவும் ஒரு சுயாதீனமான அமைப்பைக் கட்டி எழுப்ப வேண்டும்.

### அடக்குமுறையை எதிர்த்துப் போராடும்

# அலதுவ தோட்டத் தொழிலாளர்

1996 டிசம்பர் 26ம் திகதி யட்டிதொல அலதுவ தோட்டத்தின் நிர்வாகிகளும் இ.தொ.கா.தலைவர்களும் பொய்க் குற்றச்சாட்டின் பேரில் ஏ.ஜெயசங்கர் என்ற தொழிலாளியைத் தாக்கியதை சோசலிச சமத்துவக் கட்சியும் பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் வன்மையாகக் கண்டிக்கின்றன. நிர்வாகத்தின் உளவாழிகளாக வந்த ரெங்கசாமி, கருணாசிரி என்ற இ.தொ.கா.தலைவர்கள் ஜெயசங்கரை மேலும் தாக்கவும் ஆயத்தமாக இருப்பதாகத் தெரிகின்றது. இந்தத் தொழிலாளியின் உயிருக்கு ஏதும் ஆபத்து ஏற்படுமானால் அதற்கு ரெங்கசாமி, கருணாசிரி உள்ளடங்கலான இ.தொ.கா.தலைமையே பொறுப்புச் சொல்ல வேண்டும் என நாம் குற்றம் சாட்டுவதோடு, இத்தாக்குதலுக்கு எதிராகக் கிளர்ந்து எழுமாறு முழுத் தொழிலாளர்களையும் வேண்டுகின்றோம். கூலி வழங்குவது தொடர்பாக தோட்டத்தினுள்ளும் வெளியேயும் இருந்துவரும் பெரும் வேறுபாட்டை இவர் சுட்டிக்காட்டியதே இத்தாக்குதலுக்கான பின்னணியாகும்.

இந்நிலையில் இயந்திர உதிரிப்பாகம் களவாடப்பட்டுவிட்டதாகக் கூறி(டிசம்பர்26) ஜெயசங்கரை வீடு தேடிவந்த தோட்டத்தின் சிறிய, பெரிய சுப்பிரின்டன்கள் இத்தாக்குதலை நடாத்தியுள்ளனர். இவர்களுக்கு மேலே குறிப்பிட்ட இ.தொ.கா. தலைவர்கள் வழிகாட்டிகளாக இருந்துள்ளனர்.கோவில் தோட்ட லயனில் வசிக்கும் விமலனை விடுதலைப் புலி என நிர்வாகத்தின் ஊடாக பொலிசுக்கு தகவல் கொடுத்ததும் இந்த ரெங்கசாமியே.ஜெயசங்கர் களவாடினார் என்பது இ.தொ.கா.தலைவர்களின் சோடிப்பாகும் என்பதைத் தொழிலாளர்கள் வெற்றிகரமாக அம்பலப்படுத்தி உள்ளனர்.

வீடு வசதிகள் இல்லாத 35 தொழிலாளர் குடும்பங்கள் பழுதுபார்க்கப்பட்டது எப்போது என்பதையே அறியாத லயன்களில் அடைந்து போய் வாழ்கின்றனர். இளைஞருக்கு தோட்டத்தில் வேலை கிடையாது. வேலைதுரிதப்படுத்தலும் சம்பள வெட்டும் மனம்போனபடி நடைபெறுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com

### பதுளை ஒலியமண்டிய சோ.ச.க. அங்கத்தவரைத் தாக்கி

# 600 குடியிருப்பாளர்களைக் காக்கும் பிரச்சாரத்தைச் சிதறடிக்க முயற்சி

1997 ஜனவரி 5ம்திகதி பதுளை ஒலியமண்டியவில் சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்களான எச்.டி.விஜேபால, ரீ.எம்.கருணாரத்னவுக்கும் காடையர்கள் கும்பல் திட்டமிட்டு நடாத்திய தாக்குதலை சகல தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களும் கண்டனம் செய்ய வேண்டும்.

ஒலியமண்டியவைச் சேர்ந்த 600 குடும்பங்களின் வீடுகளுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலைத் தோற்கடித்து அவர்களின் வீட்டு உரிமையை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு சோ.ச.க.நடாத்திவரும் போராட்டத்தின் ஒரு பாகமாக அவர்களின் பிரச்சினையை உள்ளடக்கிய கம்கறு மாவத்த பத்திரிகையை விற்பனையிலும் சோ.ச.க. வேலைத்திட்ட பிரச்சாரத்திலும் ஈடுபட்டிருக்கையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அன்றைய தினம் விற்பனையான கம்கறுமாவத்த பத்திரிகை இந்த ஒலியமண்டிவாசிகளின் பிரச்சினை பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:

லபதுளை ஒலியமன்டி தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சுவினிதகம, கருணாகம் உட்பட 88 ஏக்கர்களைக் கொண்ட காணியில் உள்ள சகல வீடுகளையும் தகர்த்துவிட சாஹுல் ஹமீட் கிதர் மொஹமட் என்ற முதலாளி தீர்மானம் செய்துள்ளான். இந்தக் காணி 1972 காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் அரசமயமாக்கப்பட்டதோடு 272 ஏக்கர்களைக் கொண்ட ஒலியமன்டியின் ஒரு பாகமுமாகும். அன்று அந்தக் கம்பனியின் பங்காளரான காதர் மொஹமத் மீண்டும் காணியின் சட்டரீதியான உரிமையாளர் ஆகியுள்ளார் ! 1995 டிசம்பர் 13ம் திகதி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அனுமதியுடன் அந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ல...சகல ஒடுக்கப்படும் மக்களதும் வீட்டுப் பிரச்சினையை தீர்ப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். பொதுஜன முன்னணி அரசாங்கம் சமூக செல்வத்தை மேலும் மேலும் முதலாளிகளின் இலாபத்தை அதிகரிக்கவும், தமிழ் ஒடுக்கப்படும் மக்களிற்கு எதிரான யுத்தத்திற்கும் ஒதுக்கியுள்ளது. இந்தச் செல்வம் சுகாதார, மின்சார வசதிகள் கொண்ட வீடு மற்றும் சமூக தேவைகளுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என சோசலிச சமத்துவக் கட்சி வேண்டுகின்றது. விரல்விட்டு எண்ணக்கூடிய முதலாளிகளின் வசதி வாய்ப்புக்களுக்காக முழுச் சமூகத்தையும் பேரழிவுக்குள் தள்ளுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.ள

சோசலிச சமத்துவக் கட்சி வேண்டும் விதத்தில் குடியிருப்பாளர்களின் வீட்டு உரிமைகளைக் காக்கும் பொதுஜன இயக்கம் உருவாகும் என காணிகளைச் சூறையாடிக் கொண்டுள்ள் முதலாளிகளும் அவரின் உதவியாட்களான பொதுஜன முன்னணி ஏஜன்டுகளும் குழம்பிப் போயுள்ளனர். எனவேதான் அவர்கள் சோ.ச.க.ஆரம்பித்துள்ள பிரச்சாரத்தினை நசுக்கும் பொருட்டு காடையர் தாக்குதல்களை ஒழுங்கு செய்துள்ளனர். இத்தாக்குதலுக்கு காடையனாகப் பேர்பெற்ற ஒலிமன்டியே நஸார் என்பவன் தலைமை தாங்கி உள்ளான். மொஹமது ரமேஷ் என்பவனும் இன்னும் பலரும் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

சோ.ச.க. நடாத்திவரும் சுயாதீன தொழிலாளர் வர்க்க விதிமுறைகளுக்கு எதிராக ஒலிமன்டிவாசிகளை வெறும் முதலாளித்துவ எதிர்ப்புக்களில் மாட்டிவைக்க பதுளை பொதுஜன முன்னணி எம்.பி. டிலான் பெரேராவும் இன்னும் பல பிறபோக்காளரும் இறங்கியுள்ளனர். உருக்குத் தொழிலாளர் போராட்டத்தினை காட்டிக் கொடுப்பதில் முக்கிய பாத்திரம் வகித்த வாசுதேவ நாணயக்காரவையும் சேர்த்துக்கொண்டு ஊவா பிரஜைகள் அபிவிருத்தி நிலையம் என்ற பெயரில் டிலான் பெரேரா நடாத்திய ஊர்வலம் எனப்படுவது இதற்கு நல்ல சான்று. வாசுதேவ நாணயக்காரவும் டிலான் பெரேரா உட்பட்ட மல்பெரி குழுவும் பொதுஜன முன்னணிக்கு எதிராக கிளர்ந்து வரும் எதிர்ப்புக்களின் தலையில் ஏறிக்குந்தி அப்போராட்டங்களை கரைத்துவிட முயற்சிக்கின்றனர். இவர்களின் இந்தத் தலையீடுகளின் நிச அர்த்தத்தினை வெளிப்படுத்தி புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்பும் பொருட்டு சோ.ச.க. நடாத்திவரும் போராட்டத்தினைச் சிதறடிக்க சகல பிற்போக்கு சக்திகளும் அணிதிரண்டுள்ளன.

ஊவா பிரஜைகள் அபிவிருத்தி நிலையம் இதில் ஒன்றாகும். இதன் தலைவர் மானெல் இரத்னாயக்க 1971ல் ஜே.வீ.பி.தலைவராகப் பேர்போனவர். அவர் தமது வாழ்நாள் பூராவும் தொழிலாளர் வர்க்க சுயாதீன வேலைத்திட்டத்துக்கு எதிராக நின்று வருபவர் என்பது அப்படி ஒன்றும் இரகசியம் அல்ல. இவரின் இந்த பிரஜைகள் அபிவிருத்தி நிலையத்தின் சேவையில் ஈடுபட்டுள்ள சிறில் நாகொடவுடன் இந்தக் காடையன் நஸார் நெருக்கமான உறவுகள் கொண்டுள்ளதாக ஒலிமண்டிவாசிகள் சோ.ச.க.வுக்கு தெரிவித்தனர்.'

தலிசார் எந்தவிதமான ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. விஜேபாலவுக்கு காடையர்கள் காதாவடியில் நடாத்திய தாக்குதல் பெரிதும் வலிப்பு நிறைந்ததாக இருந்ததால் அவர் பதுளை பெரியாஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற நேரிட்டது.

பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தான் சோ.ச.க. அங்கத்தவர்களை தாக்கியதை ஒப்புக்கொண்ட நஸார், பொலிசிலும் கூட வாயடித்துக் கொண்டது ஒரு காடையன் கோலத்திலாகும்.

பிற்போக்காளர்கள் ஒலியமன்டியவாசிகளை பெட்டிச இயக்கம், ஊர்வலம் முதலான எதிர்ப்பு இயக்கங்களுடனும் நீதிமன்றத்தினுள்ளும் கட்டிப்போட்டனர். இன்று காணியின் உரிமை முதலாளிக்கு சொந்தமானது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதன் பின்னர் இப்பிற்போக்காளர்கள் கூறுவது என்ன தெரியுமா? பல்லாண்டுகளாக வசித்து வந்த வீடுகளில் இருந்து வெளியேறுவதைத் தவிர வேறு மாற்று வழி கிடையாது! இது முதலாளித்துவ அமைப்பின் கீழ் ஒடுக்கப்படும் மக்களின் வீட்டு உரிமையை உத்தரவாதம் செய்ய முடியாது என்பது இல்லையா?

முதலாளித்துவ வேலைத்திட்டங்களுக்கு எதிராக தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் வேலைத்திட்டத்தின் கீழ் இலாபம் சுரண்டும் இந்த அமைப்பை ஒழிக்கப் போராடுவது சோ.ச.க. மட்டுமே. ı. பொதுஜன முன்னணியின் இராணுவத் தயாரிப்புக்களுடன் இந்தப் பயங்கர நடவடிக்கைகளும் ஒன்றிணைந்து கொண்டுள்ளது. உருக்கு , மின்சார போராட்டங்கள் மத்தியில் தொழிலாளர் இதனை அனுபவ ரீதியாக கண்டனர்.

இந்தக் காடையர்களையும் இவர்களுக்கு ஆதரவு வழங்கும் பிற்போக்கு அரசியல் அமைப்புக்களையும் அம்பலப்படுத்தி தொழிலாளர் -ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் இருந்து துரத்தி அடிக்க வேண்டும். தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் ஒரே கட்சியான சோ.ச.க.வைப் பாதுகாக்க முன்வருவதன் மூலம் காடையர்கள் பற்றிய சகல தகவல்களையும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி கலைப்போம். ஒலிமண்டி மக்களின் பிரச்சாரத்தினை முன்னெடுக்க நடவடிக்கைக் குழுக்களைக் கட்டியெழுப்பி அதன் கீழ் போராட்டத்தைக் காக்க பாதுகாப்பு கமிட்டிகளை அமைப்போம்.

அப்புத்தளை, பிட்டரத்மலை தோட்டத் தொழிலாளர்களும் பண்டாரவளை கள்ளியபத்தனை ஒடுக்கப்படும் மக்களும் காணி உரிமைக்காக முன்னெடுக்கும் போராட்டத்துடன் ஒலியமன்டியவில் வீடுகளை இழக்க உள்ள குடியானவர்களும் ஒன்றிணைய வேண்டும். இந்தப் போராட்டங்களுக்கு தலைமை தாங்கும் சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்! சோ.ச.க.வுக்கும் பொதுமக்களுக்கும் எதிரான காடையர்களுக்கு இடமளியோம்! ஒலியமன்டியவாசிகளின் வீட்டு உரிமையை உத்தரவாதம் செய்! தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் நடவடிக்கைக் குழுக்களை கட்டியெழுப்பு! தொழிலாளர் பாதுகாப்பு குழுக்களை கட்டியெழுப்பு!

## உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சோசலிச சமத்துவக் கட்சி சார்பில் அம்பகமுவை, பலப்பிட்டிய, பண்டாரவளை பிராதேசிய சபைகளுக்கு போட்டியிடும் வேட்பாளர்கள்:

### அம்பகமுவை

1.மயில்வாகனம் தேவராஜா
2.ஆஞ்ஞநேசன் பாண்டுரங்கன்
3.சின்னத்தம்பி செல்வராஜ்
4.கோபால் சிவனு
5.தனம் சிவனு
6.அழகப்பன் சாந்தகுமார்
7.டீ.என்.விக்கிரமரத்ன
8.காளியப்பன் வடிவேல்
9.இராமசாமி முனியான்டி
10.தேவபதி சவரிமுத்து
11.வை.ஏ.தர்மசேன
12.எஸ்.கே.கீர்த்தி
13.பரிடா இம்ரான்
14.சவரி ஒகஸ்தீன்
15.கலன் சங்கரலால்
16.முனியாண்டி சுப்பம்மாள்
17 கலன் பார்த்திபன்
18.றுவன் சமிந்த
19. சிவனு இராஜலக்சுமி
20.அஜித் விக்கிரம குணரத்ன
21.ஆனந்த தவுலகல
22.எம்.மதிவதனராஜன்
23.ஜீ.ஜீ.சேனாரத்ன
24.கிருஷ்ணா இராமநாயக்க
25.எஸ்.நல்ல்முத்து
26.பிரியந்த குணதிலக
27.தம்புசாமி அருணாசலம்
28.சிறீஹரன் ராஜசிங்கம்
29.சுப்பு உதயகுமார்

### பலப்பிட்டிய

1.மலலகம ரத்னசிரி
2.எம்.சுனில் சிறீலால்
3.ரீ.மைத்திரிபால த சில்வா
4.ஆர்.அமரதுங்க
5.நந்தன நன்னெத்தி
6.ஆர்.தாரக அமரதுங்க
7.கே.ஆர்.நியுட்டன்
8.கொடிக்கார சோமரத்ன
9.எஸ்.வெல்லஹே .த சில்வா
10.ஜே.உபாலி
11.ஏ.லக்ஷ்மன் பெர்னான்து
12.எல்.பி.உதயபிரேம
13. எல்.பீ.கீதா
14.நீல் திபால் எஸ்.ஜயசேகர
15.கே. சமத் மெவுன்
16.ஆர்.எம்.தயாரத்ன
17.ஜீ.ரத்னசிரி பரணவிதான
18 வருண பீ.அலககோன்
19.கே.மாலினி தர்மவதி
20.பிரியதர்ஷன மதவத்த
21.சமித கவிரத்ன
22.டீ.டீ.ஜீவந்த விஜேவர்தன
23.ஜீ.எம்.தமயந்தி குணரத்ன

### பண்டாரவளை

1.வஜிர பானினி விஜேசிரிவர்தன
2.எஸ்.சுந்தரலிங்கம்
3.ஆர்.எம்.குணதிலக
4.சங்கதாச மாரசிங்க
5.ஆர்.எம்.தயானந்த
6.கமலா சுந்தரலிங்கம்
7.ஹேமந்த வலிஹேன
8.ஆர்.இரத்தினராஜா
9.ஹேமா தேவ விஜேபால ( ஹர்ஷ)
10. சமந்த உதயகுமார ஜினசேன
11.டபிள்யூ.டீ. சந்திரா மல்காந்தி
12.எம்.எம்.ஹேரத் பண்டார
13.ஆர்.எம்.எஸ்.குணதிலக

## பேருவின் பணயக் கைதிகள் நாடகம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி

சந்தைகளை அந்நிய முதலீட்டாளாருக்குத் திறந்து விடுதல் ஆகியவற்றுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததாகத் தெரிவித்துள்ளனர். இந்தப் போக்குக்களின் வளர்ச்சியானது ட்ரொட்ஸ்கிச இயக்கத்தைத் தாக்கிய சீர்திருத்தவாத பப்லோவாத போக்குக்களுக்கு எதிராக அனைத்துலக குழுவின் தலைமையிலான நான்காம் அகிலம் நடாத்திய போராட்டத்தின் சரியான தன்மையைத் தெளிவுபடுத்தி உள்ளன.

கியூபன் புரட்சியைத் தூக்கிப் பிடித்த பப்லோவாதிகள் முதலாளித்துவத்தை தூக்கி வீசுவதற்கு தொழிலாளர் வர்க்கத்தை சுயாதீனமான போராட்டத்துக்கு அல்லது நனவுபூர்வமான சோசலிச தலைமையை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு பரந்த புரட்சிக் கட்சியைக் கட்டி எழுப்பாது முதலாளித்துவத்தை தூக்கிவீச முடியும் என்றனர். இன்று இந்த பப்லோவாதத்தின் வங்குரோத்தும் பிற்போக்கும் கெரில்லா இயக்கங்களின் பரிணாமத்தினால் நன்கு ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் இத்தகைய ஒரு கெரில்லாக் குழுவாக ஆரம்பமான ஜே.வீ.பி.யின் பத்திரிகையான நியமுவா இந்த எம்.ஆர்.டி.ஏ.யை தூக்கிப்படிக்கும் கட்டுரை ஒன்றை பிரசுரித்துள்ளது. இது எம்.ஆர்.டி.ஏ.இயக்கத்தின் வெலஸ்கோ என்பவருடனான ஒரு பேட்டியாகும். ஜே.வீ:பி.1977ல் அதன் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னர் இலங்கையின் முதலாளித்துவ வர்க்கத்தின் கைக்கூலி அமைப்பாக பாராளுமன்றவாதத்தைக் கட்டியணைத்ததோடு. முதலாளித்துவ நெருக்கடி உக்கிரமடையும் நிலைமையுள் 1980பதுகளில் பாசிச கும்பலாக பரிணாமம் கண்டது. யூ.என்.பி.-சி.ல.சு.க. உட்பட முதலாளித்துவ கட்சிகளது அரசாங்கங்களுடனும் முதலாளித்துவக் குழுக்களுடனும் மிகவும் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தது. இதைத் தொடர்ந்து அபிவிருத்தி செய்த ஜே.வீ.பி. இன்று மீண்டும் இடதுசாரி வாய்வீச்சுக்கள் மூலம் மக்களைத் தவறான திசையில் தள்ள முயற்சிக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com



# சோசலிச சமத்துவக் கட்சி உள்ளூராட்சி சபை....

1ம் பக்கத் தொடர்ச்சி

குழு"வாகவே போட்டியிட நேரிட்டுள்ளது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடும் பொதுஜன முன்னணி, யூ.என்.பி., சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, ஜே.வீ.பி., மக்கள் ஐக்கிய முன்னணி, இ.தொ.கா. முதலான முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவக் கட்சிகள் உலக வங்கியையும் சர்வதேச நாணய நிதியத்தினையும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் நலன்களையும் பிரதிநிதித்துவம் செய்கின்றன. தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் -இளைஞர்கள் சார்பில் பேசுகின்றதும் தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அவர்களின் நலன்களை பிரதிநிதித்துவம் செய்கின்றதுமான ஒரே கட்சி சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே. நாம் போட்டியிடும் உள்ளூராட்சிச் சபைகளின் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள் இளைஞர்கள் தமது சார்பில் போராடும் சோசலிச சமத்துவக் கட்சிக்கு வாக்களிக்கச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனினும் அவர்கள் ஏனைய உள்ளூராட்சிச் சபைகளுக்கு வாக்களிக்க இலாயக்கான எதுவிதமான கட்சியும் இல்லை என்பதையும் நாம் கூறிக் கொள்கின்றோம்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் கடந்த வருடம் ஜூன் மாதத்தில் நடத்தப்பட இருந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஒத்திவைத்தது. இதற்கான காரணமாக நாட்டின் "பாதுகாப்பு நிலைமை மோசமானது" எனக் கூறிக்கொண்டது. அதில் இருந்து 10 மாதங்களின் பின்னர் இன்று தேர்தலை நடாத்த அரசாங்கம் தீர்மானித்ததற்கு காரணம், "பாதுகாப்பு நிலைமை"யில் முன்னேற்றம் ஏற்பட்டு இருப்பதோ அல்லது ஜனநாயக உரிமைகளை வழங்குவதற்கோ அல்ல என்பதை சிந்திக்கும் ஆற்றல் படைத்த எந்த ஒரு நபரும் புரிந்து கொள்வது கஷ்டமானது அல்ல.

இந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலிலும் பொதுமக்களை தவறான வழியில் தள்ளிவிடுவதற்கு முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ கட்சிகளும் பொது ஜனத் தொடர்புச் சாதனங்களும் பொய்க் கயிறு திரிப்புக்களில் வேகமாகச் செயற்படும். மாநகர சபைகள், பிராதேசிய சபைகள் உட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களைச் சுபீட்சத்தில் செழிப்பில் மிதக்க வைப்பதாக இந்த முதலாளித்துவக் கட்சிகளும் முதலாளிகளின் சுயேட்சைக் குழுக்களும் நீண்ட பொய்க் கதை அளப்புக்களில் ஈடுபடலாம். பொதுமக்களை மரணப் பொறிகளில் மாட்டி வைத்து அவர்களின் உரிமைகளை பிடுங்கிக் கொண்டு, காட்டுமிராண்டி நிலைமைகளினுள் தள்ளிவிடுவதே இந்தச் சகலரதும் இலக்காகும்.

யூ.என்.பி.அரசாங்கத்தின் கொலைகார ஆட்சிக்கு எதிராக பொதுஜன எதிர்ப்பு வளர்ச்சி கண்டுவந்த ஒரு நிலைமையின் கீழ் ஜனநாயகம், சமாதானம்,சுபீட்சத்தை உருவாக்குவதாக வாக்குறுதியளித்து சந்தர்ப்பவாதிகளதும் பிற்போக்காளர்களதும் தோள்களின் மீதாக பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜக் கட்சியும் அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டதோடு நவசமசமாஜக் கட்சி, ஜே.வீ.பி. விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளித்துவக் கட்சிகள், தொழிற் சங்கத் தலைவர்கள் பொதுஜன முன்னணியை ஆட்சிக்குக் கொணர கொடுக்குக் கட்டிக் கொண்டு தொழிற்பட்டனர். அரசாங்கத்துக்கு வெளியில் உள்ள அமைப்புக்கள் அன்று தாம் இந்த அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர தலைகீழாக நின்று செயற்பட்டதை மூடி மறைக்க முயல்கின்றனர். அவர்கள் யூ.என்.பி. பிற்போக்கு ஆட்சிக்குப் பதிலாக பொதுஜன முன்னணி பிற்போக்கு ஆட்சியைக் கொணர்வதற்கு பொதுமக்களைக் கூட்டுச் சேர்ந்து காட்டிக்கொடுத்தனர். இந்த அரசாங்கத்தின் இரண்டுவருட ஆறு மாதகால ஆட்சியில் தாக்குதலுக்கு உள்ளாகாத தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களின் எந்த ஒரு பகுதியினரும் இருக்கமுடியுமா? யூ.என்.பி.அரசாங்கத்தின் விதிமுறைகள் அணுவளவும் மாறிவிடவில்லை. ஆனால் யூ.என்.பி.யினால் கைவைக்க முடியாது போன விடயங்களை சந்தர்ப்பவாதிகளினதும் ஏகாதிபத்தியவாதிகளதும் இலங்கை முதலாளிகளதும் உதவியோடு இதைக் காட்டிலும் உக்கிரமான முறையில் செய்து முடிக்க இந்த அரசாங்கம் ஆட்சிக்குக் கொணரப்பட்டது என்பது இன்று நன்கு தெளிவாகியுள்ளது.யூ.என்.பி.காரர்கள் வெறும் மோசடி எதிர்ப்புக் காட்டிக்கொண்டு அரசாங்கத்தைத் தள்ளிக் கொண்டுள்ளார்கள்.

முன்னர் இருந்த பயங்கரமும் ஒடுக்குமுறையும் இல்லாமல் செய்யப்பட்டு, இப்போது ஜனநாயகம் உருவாக்கப் பட்டுள்ளதாக ஜனாதிபதி மக்களுக்கு கூச்சலிட்டுக் கொள்கின்றார். இதனை அவர் வேலைத்தலங்களுக்கும் பிராந்தியங்களுக்கும் பாய்ந்து விழுந்து தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை கொலை செய்யும்-இரத்தக் களரியில் ஈடுபடும் நிலையிலேயே செய்து கொண்டுள்ளார். மக்களின் வாழ்க்கைத் தரத்தினை தவிடுபொடியாக்கி யூ.என்.பி.அரசாங்கம் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணை 203.2ல் இருந்து 1527.4 வரை அதிகரித்தது. இந்த அரசாங்கம் 1997ஜனவரி வரை இதை 2042.7 ஆக அதிகரிக்கச் செய்தது. வெளிநாட்டு ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் அனைத்துக்கும் சலுகைகள் வழங்கும் அதே சமயம் தனியார்மயம் தொடர்ந்து கொண்டுள்ளது. தமக்குப் பிடித்தமான எந்த ஒரு நிறுவனத்தையும் ஆரம்பிக்கவும் அதன் மூலம் வளங்களை சுரண்டவும் மேலும் மேலும் கீழே போய்க் கொண்டுள்ள அற்ப சம்பளத்துக்கு உழைப்பைக் கொள்ளை அடிக்கவும், தொழிலாளர்களை கசக்கிப்பிழிந்து வேலை வாங்கவும், முன்னர் ஒரு போதும் இல்லாத விதத்திலான நிலைமைகளை இந்தப் பொதுஜன முன்னணி அரசாங்கம் சிருஷ்டித்துக் கொடுத்துள்ளது. இலவசக் கல்வியினதும் சுகாதார சேவையினதும் மிச்சசொச்சங்களை துடைத்துக் கட்டும் வேலைகள் மேலும் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகள் எதைக் காட்டுகின்றது? தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு முதலாளித்துவ அமைப்பினுள் எந்தவிதமான மாற்றீடும் கிடையாது என்பது ஊர்ஜிதமாகி உள்ளது. ஒரே மாற்றீடு சோசலிச வேலைத்திட்டமும் அதை நடைமுறைக்கிடும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதுமேயாகும்.

## இந்த தேர்தல் ஏன் நடாத்தப்படுகின்றது?

யூ.என்.பி.அரசாங்கம் நிறுத்திய இடத்தில் ஆரம்பித்த, பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆரம்பித்த தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள் போராட்டங்களுக்குள் இறங்குவது அரசாங்கத்தை மோசமான நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. வடக்கு-கிழக்கு யுத்தத்தினுள் அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் சிக்குண்டு போய்க் கிடக்கின்றது. ஏகாதிபத்திய முதலீடுகள் "போதிய அளவில்" இலங்கைக்கு வருகை தராததையிட்டு முதலாளி வர்க்கம் வருத்தம் தெரிவித்துள்ளது. தமக்கு உசிதமான சுரண்டலுக்கான "அரசியல் ஸ்திரப்பாட்டு" நிலைமைகளைச் சிருஷ்டித்துத் தருமாறு ஏகாதிபத்திய முதலீட்டாளர்கள் கோருகிறார்கள். பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் முதலாளி வர்க்கத்தினதும் கைவசம் இருப்பது தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைக் கசக்கிபிழிந்து தள்ளுவதன் மூலம் இப்பிரச்சினையை வெற்றிக்கு இட்டுச் செல்லும் நச்சுத்தனமான நிகழ்ச்சிநிரல் மட்டுமேயாகும்.இந்த நிலைமையின் உள்ளேயே பொதுஜன முன்னணி அரசாங்கம் உள்ளூராட்சிச் சபை தேர்தல்களை நடாத்த அழைப்பு விடுத்துள்ளது. யுத்தத்துக்குச் செலவிடப்படும் 5000 கோடி ரூபாக்களை மிச்சம் பிடித்தால் கனவுலகத்தை நிர்மாணிக்கலாம் என்ற தோரணையில் கதையளந்து கொண்டு ஜனாதிபதியும் அவரின் அமைச்சர்களும் களத்தில் இறங்கியுள்ளனர். யூ.என்.பி.தொடர்பாகத் தொடர்ந்தும் இருந்துவரும் வெறுப்பையும் யுத்தச் சுமையினால் பொதுமக்களிடையே உருவாகி உள்ளபதட்ட நிலையையும் மீண்டும் ஒரு தடவை சுரண்டுவதன் மூலம் உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெற பொதுஜன முன்னணி பந்தயம் பிடித்து வருகின்றது. அது தமக்கு மீண்டும் பொதுஜன அங்கீகாரம் கிடைத்துள்ளதாகக் காட்டி, பொதுமக்கள் மீது கொடிய தாக்குதல்களை நடாத்தும் திட்டத்தின் ஒரு பாகமாகும்.

அரசியல் தீர்வுத் திட்டத்தின் மூலம் விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளித்துவ தலைவர்களையும் நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்கும் பேரில் யூ.என்.பி.யையும் வெள்ளைச் சுண்ணம் தீட்டிக் கொண்டுள்ள ஜே.வீ.பி.யையும் அணிதிரட்டிக் கொண்ட ஒரு இயக்கத்தின் மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிற்போக்கு வேலைத் திட்டத்தினை அபிவிருத்தி செய்துகொள்ள ஏகாதிபத்தியவாதிகளும் இலங்கை முதலாளிகளும் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டுள்ளார்கள். அன்று யூ.என்.பி. அரசாங்கமும் இன்று பொதுஜன முன்னணி அரசாங்கமும் இனவாத யுத்தத்தின் மூலம் நாடு பூராவும் அபிவிருத்தி

(16ம் பக்கம் பார்க்க)

# பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கம்.....

(5ம் பக்கத் தொடர்ச்சி

வேலை இலேசானதாக இருக்கவில்லை. அது முதலாளிகளுடன் நேருக்கு நேர் மோதிக்கொள்ளும் போராட்டமாகியது. சோ.ச.க.வின் வழிகாட்டலின் அடிப்படையில் காலி மாவட்டம் பூராவும் முன்னெடுத்த சுவரொட்டி பிரச்சாரம் உட்பட்ட பிரச்சாரத்தின் மூலமே சங்கக் கிளை நிறுவப்பட்டது."

சோ.ச.க.வின் இந்திய சகோதர அமைப்பான சோசலிச தொழிலாளர் கழகத்துடன் இணைந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, இந்தியாவில் ஒரு மாதத்துக்கு மேல் இருந்துவிட்டுத் திரும்பிய சோ.ச.க. மத்திய குழு உறுப்பினர் தீபால் ஜயசேகர அந்த அனுபவங்களை மாநாட்டின் முன்வைத்தார்:

"சோசலிச தொழிலாளர் கழகத்துடன் இணைந்து இந்தியத் துணைக்கண்டம் பூராவும் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிக் கட்சியாக நான்காம் அகிலத்தைக் கட்டியெழுப்ப நாம் நடாத்தும் போராட்டத்துடன் தொடர்புபட்ட விதத்தில் நாம் எடுத்த முக்கிய ஆரம்பிப்பு, இருநாட்டிலும் கைதுசெய்யப்பட்டுள்ள மீனவரை விடுதலை செய்யும் முகமாக நாம் தொடுத்துள்ள கூட்டுப் பிரச்சாரமாகும். இலங்கை -இந்திய மீனவர்கள் உட்பட இருநாட்டினதும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு இடையே சோ.ச.க.வும் சோ.தொ.க.வும் முன்னெடுத்த கூட்டுப் பிரச்சாரம் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் பலம்வாய்ந்த ஆதரவை வெற்றி கொண்டது. அப்பிரச்சாரத்தின் பெறுபேறாக இந்தியாவில் மங்களூர் சிறையில்அடைக்கப்பட்டிருந்த 27 இலங்கை மீனவர்களை விடுதலை செய்வதில் நாம் வெற்றி கண்டோம்.

இந்தியாவில் கைது செய்து வைக்கப்பட்டுள்ள சகல இலங்கை மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு கோரும் பெட்டிசத்துக்கு கையெழுத்துச் சேகரித்து நாம் சென்னை மீனவர்களிடையே பிரச்சாரம் செய்தோம். முன்னர் சோ.தொ.க. பிரச்சாரத்துக்கு ஆதரவு வழங்கியிருந்த மீனவர்கள் தமது ஆதரவுடன் இடம்பெற்ற பிரச்சாரம் இலங்கையின் 27 மீனவர்களை விடுதலை செய்ய வைத்ததைக் கேள்விப்பட்டு பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர். அவர்கள் எமது புதிய பெட்டிசத்தில் கையொப்பமிடவும் நிதி உதவி வழங்கவும் ஆர்வம் காட்டினர்."

இம்மாநாட்டில் நிறைவேற்றுக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டு இருந்த முக்கிய அரசியல் பிரேரணை, "இனவாத யுத்தத்தை நிறுத்து! "ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை காப்பாற்று! "சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர் செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்! முதலான மூன்று துணைப் பிரேரணைகளும் ஏகமனதாக நிறைவேறின. அவ்வாறே டபிள்யூ.ஏ.சுனிலால் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட அரசியல் அறிக்கை ஏகமனதாக நிறைவேறியது. நிறைவேற்றப்பட்ட அரசியல் பிரேரணை பொதுஜன முன்னணி அரசாங்கம் , யூ.என்.பி. அரசாங்கத்தின் தொழிலாளர் எதிர்ப்பு வேலைத் திட்டங்களை மிகவும் காட்டுமிராண்டித்தனமான முறையில் நடைமுறைக்கிடும் விதத்தையும் அந்நிலைமையினுள் சமசமாஜ, கம்யூனிச, இ.தொ.கா, மலையக மக்கள் முன்ன்ணி கட்சிகளதும் தொழிற் சங்கங்களதும் ஜே.வீ.பீ.யினதும் விடுதலைப் புலிகளதும் கூட்டு பிற்போக்கு வேலைத்திட்டத்தை தெளிவுபடுத்தியுள்ளது. பழைய முதலாளிதத்துவ தேசியவாத. சீர்திருத்தவாத வேலைத்திட்டத்தின் மூலம் தொடர்ந்தும் தொழிலாளர்களின உரிமைகளை பேணிக்கொள்ள முடியாது எனவும் சுட்டிக்காட்டும் அப்பிரேரணை மேலும் கூறுவதாவது : "முதலாளித்துவ இலாப அமைப்பைத் தூக்கி வீசி அனைத்துலக சோசலிசத்தை கட்டியெழுப்புவது தொழிலாளர் வர்க்கத்தின் முன்நோக்காக வேண்டும். ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தை கட்டியெழுப்புவது அந்த போராட்டத்தின் இன்றியமையாத அடிப்படைக் கொள்கையாகும்."

பெ.கை.தொ.ச.பொருளாளர் வை.ஏ.தர்மசேனவினால் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவு அறிக்கை ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. புதிய வருடத்துக்கான அலுவலர்கள் தெரிவில் சங்கத்தின் செயலாளராக டபிள்யூ.ஏ.சுனிலும் தலைவராக எம்.அரவிந்தனும் பொருளாளராக வை.ஏ.தர்மசேனவும் போட்டியின்றித் தெரிவாகினர்.

மாநாட்டின் இறுதியில் மாநாட்டு கலந்துரையாடல்களுக்கு பதிலிறுத்துப் பேசிய சோ.ச.க.மத்திய குழு உறுப்பினரும் கம்கறு மாவத்த ஆசிரியருமான கே.ரத்னாயக்க கூறியதாவது : "மாநாட்டு கலந்துரையாடல் மிகவும் உயிர்த்துடிப்புமிக்கதாக விளங்கியது. அதனுள் யூ.என்.பி. பொதுஜன முன்னணி அரசாங்கங்களின் ஒடுக்குமுறைகளுக்கும் தாக்குதல்களுக்கும் மத்தியில் தமது உரிமைகளைக் காக்க முன்னணிக்கு வந்த தோழர்களின் தலைமீடு வெளிப்பாடாகியது. தோட்ட நிர்வாகிகளதும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் வேலைத்திட்டங்களுக்கு மத்தியில் தொழிற்சங்க அதிகாரிகள் அவர்களின் பொலிஸ் ஏஜண்டுகளாக ஆற்றும் பணி தோழர்களின் பேச்சுக்களின் மூலம் வெளிப்பாடாகியது.

"தொழிலாளர்களின் எதிரில் உள்ள பிரச்சினை இந்தத் தாக்குதல்களுக்கு எதிராக போராட்டத்தை ஒழுங்கு செய்வது எப்படி என்பதேயாகும். இந்த மாநாட்டின் பின்னர் நாம் சங்கத்தின் கிளைகளாகக் கூடி, ஏனைய தோட்டங்களில் கிளைகளை அமைக்கச் செயற்பட வேண்டும். போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் விதம்பற்றி கலந்துரையாட வேண்டும்.

நாம் முதலாளித்துவ தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளி வர்க்கம் உலகளாவிய ரீதியில் போராட்டத்துக்குத் தள்ளப்படும் ஒரு நிலைமையில் இருந்து கொண்டுள்ளோம். ஆனால் சகல இடங்களிலும் தொழிலாளர் வர்க்கம் ஒரே பிரச்சினைக்கே முகம் கொடுத்துள்ளது. தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டின் துரோகத் தலைமைகளைத் தூக்கிவீசி, புதிய புரட்சித் தலைமையைக் கட்டியெழுப்ப வேண்டும். அனைத்துலக சோசலிசத்தின் முன்நோக்கு, வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் கிளைகளும் உலகத் தொழிலாளர் வர்க்கத்துள் அந்தப் புரட்சிகரத் தலைமையைக் கட்டியெழுப்பும் பணிக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளன."

சோ.ச.க.வும் பெ.கை.தொ.ச.வும் தொழிலாளர் வர்க்கத்தினுள் அப்போராட்டத்தை முன்னெடுக்கும் விதத்தினை விபரித்த ரத்னாயக்க சோ.ச.க.வில் சேர்ந்து அந்தச் சோசலிசப் புரட்சிக்கான தொழிலாளர் வர்க்க வெகுஜன கட்சியைக் கட்டியெழுப்ப இணையும்படி வருகைதந்திருந்த தொழிலாளர், இளைஞர்களை வேண்டினார்.

படிப்பகம்

www.padippakam.com

# சோ.ச.க. உள்ளூராட்சி தேர்தலில்...

16ம் பக்கத் தொடர்ச்சி

செய்யும் இராணுவமயமாக்கமானது இராணுவ சர்வாதிகாரத்தை நோக்கி பரிணாமம் செய்யும் பிற்போக்குச் சக்திகளின் இலக்காகும்.

உள்ளூராட்சிச் சபைகளுக்கு இப்போது கிட்டியுள்ள தலைவிதியை முதலாளித்துவ நெருக்கடியும் அதை பொதுமக்கள் மீது கட்டி அடிக்கும் விதமும் திட்டவட்டமாகக் காட்டிக்கொண்டுள்ளது. இவை ஒரு காலத்தில் அந்தந்த மாநகர, கிராம மக்களின் சேமநல சேவைகளை நடைமுறைக்கிடும் நிறுவனங்களாகவே இருந்துவந்தன. அந்த விதத்தில் அவற்றை நடாத்திச் செல்ல முதலாளித்துவ வர்க்கத்துக்கு நேரிட்டது. இன்று இந்த உள்ளூராட்சிச் சபைகள் சோலைவரி உட்பட்ட பல்வேறு இன வரிகளை உயர்த்திப் பொதுமக்களை நசுக்கும் நிறுவனங்களாக மாறியுள்ளன. முதலாளித்துவக் கட்சிகளின் பிரதிநிதிகள் சுரண்டலை நடாத்தும் நிலையங்களாக அவை மாறியுள்ளன. குப்பைகூழங்கள் மலையெனக் குவியும்போதும், தொற்றுநோய்கள் பரவி வருகையிலும் பெருந்தெருக்கள் உடைந்த தகர்ந்து கிடக்கையிலும் இந்த நிறுவனங்கள் முழு மௌனம் சாதிக்கின்றன. பொதுஜன நலன்புரிச் சேவைகளுக்காக நிதி ஒதுக்கப்படுவதில்லை.ஆதலால் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடாத்துவது மக்களுக்கா எந்தவிதமான சலுகையோ அல்லது வசதியோ வழங்குவதற்கு அல்ல என்பது தெளிவாகியுள்ளது.

லங்கா சமசமாஜக் கட்சியும் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சியும் முதலாளித்துவ வர்க்கத்தினதும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் பிற்போக்குத் திட்டங்களை முன்னெடுப்பதை முழு மனநிறைவுடன் ஏற்றுக்கொண்டு, அதன்படி செயற்பட உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களிலும் சபதம் செய்து கொண்டுள்ளனர்.

ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு வளங்களை விற்றுத்தள்ளும் ஊழல்களின் மூலம் தொழிலாளர் உழைப்பை ஒரு சில துட்டுக்களுக்கு சுரண்டுவதன் மூலம் முதலாளிகள் வசதி வாய்ப்புக்களை அனுபவிக்கின்றார்கள். ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் உட்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலாபங்களையும் கொள்ளையடித்த செல்வங்களையும் மூட்டை கட்டிக்கொள்கின்றார்கள். அமைச்சர்களும் எம்.பீ.க்களும் கமிஷன் முட்டிகளை தட்டிக் கொள்வது யூ.என்.பி.-பொதுஜன முன்னணி ஆட்சிகள் இரண்டிலும் நன்கு பிரசித்தமானது. ஆனால் தொழிலாளர்கள்-ஒடுக்கப்படும் மககள்-இளைஞர்களின் வாழ்க்கைத் தரங்கள் நாளுக்கு நாள் பாதாளத்தில் வீழ்ச்சி கண்டு வருகின்றது.

### உலக நிலைமை

உலகளாவிய ரீதியில் மக்கள் முகம் கொடுக்கும் நிலைமை இதுதான். ஏகாதிபத்திய நாடுகளில் ஆளும் வர்க்கங்கள் அவற்றின் தொழிலாளர் வர்க்கங்களின் வாழ்க்கைத் தரங்களைத் தவிடுபொடியாக்கும் அதே வேளையில் பின்தங்கிய நாடுகளில் இலாபகரமான உழைப்பை கொள்ளையடிக்கும் பொருட்டு உலகம் பூராவும் அவை அலைகின்றன. உலகின் 358 செல்வந்தர்கள் உலகின் மொத்த சனத்தொகையில் நூற்றுக்கு 45வீதத்தினரின் அல்லது 270 கோடி ஏழைகளின் செல்வத்துக்குச் சமமான செல்வங்களை நிர்வகிக்கின்றார்கள். பொருளாதாரங்களைத் திறந்து விடுவதாகக் கூறிக்கொண்டு நடாத்தும் ஊடுருவல்களின் மூலம் இந்தியாவில் 1991-1995 வரையில் புதிதாக ஏழைகளாக மாறியோர் எண்ணிக்கை 22 கோடியாகும். இந்த அமைப்பு செயற்படுவது இலாப மூட்டையை நிரப்புவதற்கேயாகும். உலக முதலாளித்துவம் தொழில்நுட்பத்தின் பிரமாண்டமான அபிவிருத்திகளைப் பயன்படுத்திக் கொண்டுள்ளது வெறுமனே இந்த இலக்கிலேயேயே. யுத்த சுவாலைகளை மூழவைத்தல், தேசிய-இன -மத பிளவுகளை உருவாக்குதல், கலனித்துவமயம் ஆதியன ஏகாதிபத்தியவாதிகளாலும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளாலும் நடைமுறைக்கிடப்பட்டுள்ளது. இவை இலாபத்தை மூட்டை கட்டிக் கொள்ளுவதை சுலபமாக்கும் அமைப்பைக் காக்கவே செய்யப்பட்டுள்ளன. பொதுஜன முன்னணி அரசாங்கமும் இலங்கையின் முதலாளித்துவ வர்க்கமும் ஏகாதிபத்தியவாதிகளின் இந்த நலன்களின் கைப்பொம்மைகளாகும். அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் சேர்ந்து அனைத்துலக சோசலிசத்துக்காக நடாத்தும் போராட்டத்தின் ஒரு பாகமாக தமது போராட்டத்தினை அபிவிருத்தி செய்யலாமே தவிர வேறு எந்த ஒரு விதத்திலும்-இலங்கைத் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு வேறு வழி கிடையாது.

முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கம் முகம் கொடுத்துள்ள நெருக்கடியில் அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்கும் அதே வேளையில் யூ.என்.பி.முதலாளிகள் மீண்டும் மேற்சொன்ன பிற்போக்கு வேலைத்திட்டத்தினை நடைமுறைக்கிட ஆட்சிக்கு வருவதற்குத் தருணம் பார்த்தபடி உள்ளனர். இந்தத் தடவை யூ.என்.பி.காரர்கள் ஜனநாயகம், தனியார்மயம், நலன்புரிச்சேவை வெட்டு பற்றி முதலைக் கண்ணீர் வடித்துக்கொண்டு உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஜே.வீ.பி.யும் நவசமசமாஜக் கட்சியும் இந்தத் தேர்தலில் தலைநீட்டியுள்ள முதலாளிகளின் இரண்டு குழுக்களாகும். 1970-77 கூட்டரசாங்கத்தைப் போலவே 1977ல் யூ.என்.பி.யையும் 1994ல் பொதுஜன முன்னணி அரசாங்கத்தையும் ஆட்சிக்குக் கொணர பங்காளர்களான இந்த இரண்டு கட்சிகளும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களையிட்டு முதலைக் கண்ணீர் வடிக்கின்றன. தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் போராட்டம் "யூ.என்.பி. சதி"யாகும் எனச் சேறடிக்கும் ஜே.வீ.பி.மறுபுறத்தில் "தொழில்நுட்பத்தைக் கொணர்வதற்காக" ஏகாதிபத்திய மூலதனத்தைத் தருவிக்க வேண்டும் எனக் கூறுகின்றது. இது இலங்கையின் யூ.என்.பி.-பொதுஜன முன்னணி முதலாளிக்ளின் கீறல் விழுந்த இசைத் தட்டினை தமது கிராமபோனில் போட்டு இசைப்பதாகும். பொதுஜன முன்னணி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதால் அதன் முதலாளிகள் அரசாங்கத்தின் பங்காளிகளான சமசமாஜ, கம்யூனிச, விடுதலைப் புலிகள், ஜே.வீ.பி. உட்பட்ட முதலாளித்துவ அமைப்புக்களைச் சேர்த்து, "இடதுசாரி முன்னணியை" அமைப்போம் என நவசமசமாசக் கட்சி பிரேரிப்பது தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை ஒரு புதிய பொறிக்கிடங்கிற்குள் தள்ளுவதற்கேயாகும். ஜே.வீ.பி.1987ஐப் போல் இம்முறையும் "நாட்டைப் பிரிப்பதை எதிர்க்கும் பேரால்" தமிழர் எதிர்ப்பு இனவாதத்தினை தூண்டிவிடுவதை இத்தேர்தலில் தமது முக்கிய இராகமாக்கிக் கொண்டுள்ளன.

பூமிபுத்திர கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி முதலான இனவாத கும்பல்கள் முதலாளித்துவ பிற்போக்கு இயக்கத்தின் பந்தம் ஏந்துபவர்களாக இத்தேர்தலில் முன்னணியில் நிற்கத் திட்டமிட்டுள்ளனர்.

### சோசலிச சமத்துவக் கட்சியின் வேலைத்திட்டம்

1994 பொதுத் தேர்தலில் யூ.என்.பி.என்றாலும் சரி பொதுஜன முன்னணி என்றாலும் சரி எந்த ஒரு முதலாளித்துவக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு கிடையாது எனவும் பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல் உக்கிரம் அடையும் எனவும் தெளிவாகவும் நேருக்கு நேரும் கூறியது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமேயாகும்.(இன்று சோசலிச சமத்துவக் கட்சி)

சோசலிச சமத்துவக் கட்சி முதலாளி வர்க்கத்தின் இந்தச் சகல அமைப்புக்களுக்கும் எதிராக தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை முதலாளித்துவத்தில் இருந்து அரசியல் ரீதியில் சுயாதீனமாக அணிதிரட்டப் போராடும் ஒரே அமைப்பாகும். பொதுஜன முன்னணி அரசாங்கத்தை வெளியேற்றி அனைத்துலகச் சோசலிசத்தை அடிப்படையாகக் கொண்ட சோசலிச வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிடும் தொழிலாளர்-விவசாயிகளின் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர தயாராகும்படி சோசலிச சமத்துவக் கட்சி வேண்டிநிற்கின்றது.தொழிலாளர்களதும் விவசாயிகளதும் இளைஞர்களதும் சமூக சமத்துவம், நீதி, ஜனநாயக உரிமைகளின் பேரில் சோசலிச சமத்துவக் கட்சி போராடுகின்றது. செல்வம் இல்லை எனக் கூறிக்கொள்ளும் முதலாளிகள் மடியில் கட்டிக் கொள்ளும் செல்வத்தை உழைக்கும் மக்களின் நலனுக்காக நிச்சயம் பயன்படுத்த முடியும்.பொதுஜன வாழ்க்கையின் முக்கிய அம்சமான இலவசக் கல்வி, இலவச சுகாதார சேவைகளை மீண்டும் ஸ்தாபிதம் செய்வதற்கு சோ.ச.க.போராடுகின்றது. முதலாளி வர்க்கத்தின் இனவாத யத்தத்துக்கும் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதத்துக்கும் எதிராக சோ.ச.க. சிங்கள-தமிழ் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் ஐக்கியத்துக்காக போராடுகின்றது. சிங்கள, தமிழ் மக்களுக்கு இனவாத யுத்தத்தினை நிறுத்தி முதலாளித்துவ வர்க்க ஆட்சியை ஒழித்து, சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியமாக தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர்வதன் மூலமே சமாதானத்துடனும் சமத்துவத்துடனும் வாழ்க்கை நடாத்த முடியும். அதை அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஒன்றிணைவதன் ஒரு பாகமாக இந்தியத் துணைக்கண்ட தொழிலாளர் வர்க்கத்துடனும் ஒடுக்கப்படும் மக்களுடனும் இலங்கைத் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை ஐக்கியப்படுத்தப் போராடுகின்றது. இளைஞர்களின் தொழில் பிரச்சினையைத் தீர்ப்பது, விவசாயிகளின் உரிமைகளை ஊர்ஜிதம் செய்வது சம்பந்தமாக சோ.ச.க. முதலாளித்துவ எதிர்ப்பு வேலைத் திட்டத்தினை முன்வைக்கின்றது.

கடந்த 28 வருடத்துக்கும் மேலமான காலத்தினுள் பு.க.க.வும் சோ.ச.க.வும் பொதுமக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தைச் சகல விதத்திலும் அபிவிருத்தி செய்ய தலையிட்டது. முன்னைய பு.க.க.வினதும் இன்றைய சோ.ச.க.வினதும் போராட்டம் முக்கியமாக மார்க்சிச அரசியல் கலாச்சாரத்தை மீண்டும் அபிவிருத்தி செய்து, முதலாளித்துவத்தின் நாசம்நிறைந்த பயணத்துக்கு எதிராக தொழிலாளர் வர்க்க மாற்றீட்டுக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதேயாகும்.

இந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் இந்த முறையில் பொதுமக்களிடம் மாற்று வேலைத்திட்டத்தை முன்வைக்கின்றது.

கடந்த சிறிய காலத்தினுள் தோட்டத்துறையிலும் உருக்கு கூட்டுத்தாபனத்திலும், மின்சார சபையிலும் துறைமுகத்திலும் தனியார் துறையில் கொக்கா கோலா, டிமோ , ஷெல் காஸ், சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் போராட்டத்துக்கு வந்ததன் மூலம் முதலாளித்துவ வர்க்கத்தின் தாக்குதல்களை சும்மா சகித்துக் கொள்ளத் தயார் இல்லையெனக் காட்டிக் கொண்டனர்.கிராமப்புற, நகர்ப்புற ஒடுக்கப்படும் மக்களும் இளைஞர்களும் மாணவர்களும் தமது உரிமைகளுக்காகப் போராட்டங்களில் குதித்தனர். வடக்கு-கிழக்கு மாகாண ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் இனவாத யுத்தத்தின் கொலைகார நிலைமைகளில் இருந்தும் விடுதலைப் புலிகளின் ஒடுக்குமுறையில் இருந்தும் விடுதலை செய்யப்பட வேண்டியதன் அவசியத்தைக் காட்டிக் கொண்டுள்ளனர். ஆனால் இந்தச் சகல இடங்களிலும் ஒன்று மட்டும் பிரத்தியட்சமாகி உள்ளது . இவை அவர்களுக்கு தலைமை வழங்கப் போராடும் கட்சியின் அவசியத்தை காட்டுகின்றதல்லவா? சோ.ச.க இந்த அவசியத்தை பூர்த்தி செய்யவே இத்தேர்தலில் போட்டியிடுகின்றது.

எமது போராட்டத்தை சூழ ஒன்றிணைந்தும் வாக்குக்களை எமது வேட்பாளர்களுக்கு வழங்கியும் நிதி உதவி வழங்கியும் செயற்படுமாறு நாம் சகல தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் இளைஞர்களையும் வேண்டுகின்றோம்.

# நவசமசமாஜ கட்சி...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டை எதிர்ப்பதாகும். அக்கட்சி அத்துடன் மட்டும் நின்றுவிடாது தென்மாகாணங்களில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக பிற்போக்கு சக்திகளை அணிதிரட்டும் பொருட்டு செயற்படுகின்றது. முதலாளித்துவ வர்க்கத்துக்கு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை அடிபணிய வைக்கச் செயற்படுகின்றது.

சமீபத்தில் நடைபெற்ற அவர்களின் கட்சி மாநாட்டில் பேசிய விக்கிரமபாகு கருணாரத்ன விடுதலைப் புலிகளையும் ஜே.வீ.பி.யையும் அணைத்துக்கொண்டு இந்தப் பிற்போக்குக் கைங்கரியத்தை உக்கிரமாக்கப் போகும் விதத்தினைப் பின்வருமாறு குறிப்பிட்டார்: மார்க்சிசத்தின் சார்பில் நின்றுவருவதாக் கூற வேண்டியதில்லை. இன்னவிதத்தில் புரட்சியைச் செய்வேன் எனக் கூற வேண்டியதில்லை.நாம் பேசுவது இந்த அமைப்பினை எதிர்க்கும் எந்த ஒரு அமைப்புடனும் கைகோர்த்துக் கொள்ள நாம் விரும்புகின்றோம். தயாராக உள்ளோம்.□

மறுபுறத்தில் ந.ச.ச.க. தாமுமம் சேர்ந்து ஆட்சிக்குக் கொணர்ந்த பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஏகாதிபத்தியச் சார்பு தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை முதலாளிதத்துவத்தில் இருந்து சுயாதீனமாக அணிதிரட்டுவதற்கு எதிராக சமசமாஜ, கம்யூனிச கட்சிகளையும் இன்னும் பல குப்பைகூழங்களையும் ஒன்றுதிரட்டி ஒரு முன்னணி அமைக்க பிரேரிக்கின்றது.

பப்லோவாதிகளின் குழப்பமும் மேலும் மேலும் வலதுதிசையில் பயணம் செய்வதும் சமூக குமுறல்களையிட்டு அவர்கள் கொண்டுள்ள பீதியையும் அதன் பேரிலான எதிர்ப்புக்களின் பிரதிபலிப்புக்களையும் காட்டிக்கொண்டுள்ளது.இந்த அரசியல் நிலைமையானது அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையான சோசலிச சமத்துவக் கட்சி(முன்னர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்) யைக் கட்டி எழுப்புவது சிங்கள, தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களைப் பொறுத்த மட்டில் ஒரு மிகவும் தீர்க்கமான பணியாக்கி உள்ளது.





சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 8 | ரூ.40 |
| இதழ் 12 | ரூ.60 |
| இதழ் 24 | ரூ.120 |
| இதழ் 48 | ரூ.240 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு-10
தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . . திகதி . . . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு-10
தொ.பே. 682220


90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்